G. Sunder Rau

20/1/27

தேவி சகாயம்.

அஷ்டதிக்கின் ஆருடம்.

பஞ்சபட்சி ஆருடம்.

ஆஞ்சநேயாருடம்.

ஜெயமுனிவராருடம், வால்மீகராருடம்.
இவ்வைந்தும் அடங்கியிருக்கின்றன.

இவை
சில ஜோதிடர்கள்
அச்சிடக் கேட்டுக்கொண்டமையால்
செஞ்சி
ஏகாம்பர முதலியாரவர்களால்
எட்டுப்பிரிதியும்
அச்சுப்பிரிதியுங் கொண்டு
ஆய்ந்து எழுதி முடிவுபெற்று

பூவிருந்தவல்லி
சு. துளசிங்கமுதலியார் அண்டு சன்
பூ. து. மாசிலாமணி முதலியாரவர்களது
சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1922

இதன் விலை] [அணா 12.

உ

கடவுள் துணை.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

சோதிடரேயன்றி மற்றவரால் அறியக்கூடாத அரும் பொருட்கூடிய அனேக கணித சாஸ்திரங்களை ஆராட்சி செய்து பெரும்பாலும் பிரயாசையெடுத்து அனேக ஏட்டு நூலும் பர்பல அச்சு நூலும் சேகரித்து எளிதில் சுலபமாய் அறிந்துகொள்ளும்படி செஞ்சி ஏகாம்பர முதலியாரால் எழுதி முடிவுபெற்ற அஷ்டதிக்கின் ஆரூடம், பஞ்சபக்ஷி ஆரூடம், ஆஞ்சனேயர் ஆரூடம், ஜெபமுனிவர் ஆரூடம், வால்மீகர் ஆரூடம் என்னும் ஐந்து ஆரூடமும் அடங்கிய அஷ்டதிக்கின் ஆரூடமென்னும் சாஸ்திரத்தை சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு உலோகோபகாரமாகச் சகலரும் கையாளும்பொருட்டு யானாகிய பூ சு துளசிங்கமுதலியார் அண்டு சன் அவர்களது சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நூலை என்னனுமதியின்றி யாதாமொருவரும் வேறெவ்வித பாஷையிலும் அச்சிடக்கூடாதபடி கனம்பொருந்திய கவர்ன்மெண்டு சட்டப்படி (ரிஜிஸ்டர் காபி-ரைட்) செய்யப்பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா	0	12	0
வி. பி. போஸ்ட் சார்ஜ் அணா	0	4	0

10-புத்தகம் வாங்குபவர்கட்கு 1-புத்தகம் கமிஷனாக கொடுக்கப்படும்.

உ

பரமபதி துணை.

அஷ்டதிக்கின் ஆரூடத்தின்

அட்டவணை.

பெயர்.	பக்கம்.
திக்குக-ளறியும் இராசிச் சக்கரம்	1
ஞாயர்-திக்கு-8-ற்கும் முதற்ஜாமத்தின் ஆரூடம்	2
ஞாயர்-திக்கு-8-ற்கும் இரண்டாஞ் ஜாமத்தின் ஆரூடம்	3
ஞாயர்-திக்கு-8-ற்கும் மூன்றுஞ் ஜாமத்தின் ஆரூடம்	4
ஞாயர்-திக்கு-8-ற்கும் நான்காஞ் ஜாமத்தின் ஆரூடம்	6
திங்கள்-திக்கு-8-ற்கும் முதற்ஜாமத்தின் ஆரூடம்	7
திங்கள்-திக்கு-8-ற்கும் இரண்டாஞ் ஜாமத்தின் ஆரூடம்	8
திங்கள்-திக்கு-8-ற்கும் மூன்றுஞ் ஜாமத்தின் ஆரூடம்	10
திங்கள்-திக்கு-8-ற்கும் நான்காஞ் ஜாமத்தின் ஆரூடம்	11
செவ்வாய்-திக்கு-8-ற்கும் முதற்ஜாமத்தின் ஆரூடம்	12
செவ்வாய்-திக்கு-8-ற்கும் இரண்டாஞ்ஜாமத்தின் ஆரூடம்	14
செவ்வாய்-திக்கு-8-ற்கும் மூன்றுஞ் ஜாமத்தின் ஆரூடம்	15
செவ்வாய்-திக்கு-8-ற்கும் நான்காஞ் ஜாமத்தின் ஆரூடம்	16
புதன்-திக்கு-8-ற்கும் முதற்ஜாமத்தின் ஆரூடம்	18
புதன்-திக்கு-8-ற்கும் இரண்டாஞ் ஜாமத்தின் ஆரூடம்	19
புதன்-திக்கு-8-ற்கும் மூன்றுஞ் ஜாமத்தின் ஆரூடம்	21
புதன்-திக்கு-8-ற்கும் நான்காஞ் ஜாமத்தின் ஆரூடம்	22
வியாழம்-திக்கு-8-ற்கும் முதற்ஜாயத்தின் ஆரூடம்	23
வியாழம்-திக்கு-8-ற்கும் இரண்டாஞ் ஜாமத்தின் ஆரூடம்	25
வியாழம்-திக்கு-8-ற்கும் மூன்றுஞ் ஜாமத்தின் ஆரூடம்	26
வியாழம்-திக்கு-8-ற்கும் நான்காஞ் ஜாமத்தின் ஆரூடம்	27
வெள்ளி-திக்கு-8-ற்கும் முதற்ஜாமத்தின் ஆரூடம்	29
வெள்ளி-திக்கு-8-ற்கும் இரண்டாஞ் ஜாமத்தின் ஆரூடம்	30
வெள்ளி-திக்கு-8-ற்கும் மூன்றுஞ் ஜாமத்தின் ஆரூடம்	32
வெள்ளி-திக்கு-8-ற்கும் நான்காஞ் ஜாமத்தின் ஆரூடம்	33

பெயர்	பக்கம்.
சனி-திக்கு-8-க்கு முதற் ஜாமத்தின் ஆரூடம்	34
சனி-திக்கு-8-க்கும் இரண்டாஞ் ஜாமத்தின் ஆரூடம்	36
சனி-திக்கு-8-க்கும் மூன்றாஞ் ஜாமத்தின் ஆரூடம்	37
சனி-திக்கு-8-க்கும் நான்காஞ் ஜாமத்தின் ஆரூடம்	38
பஞ்சபட்சி ஆரூட சாஸ்திரம்.	
வாக்கியங்கட்குரிய முதலெழுத்தைகொண்டு பட்சிகளறி	41
வாரங்கள் 7-க்கும் ஊண்பட்சிகளறியும் விபரம்	42
வாரங்கள் 7-க்கும் படுபட்சிகளறியும் விபரம்	0
பட்சிகளின் தொழில் நாழிகை அறியும் விபரம்	0
பகலிரவு நாழிகையறியும் விபரம்	0
ஆரூடம் சொல்லும் விபரமியவும்	0
பூர்வபட்சம் பகல் வாரம் 7-க்கும் ஊணின் பலன்	43
பூர்வபட்சம் பகல் வாரம் 7-க்கும் நடையின் பலன்	0
பூர்வபட்சம் பகல் வாரம் 7-க்கும் அரசின் பலன்	0
பூர்வபட்சம் பகல் வாரம் 7-க்கும் நித்திரையின் பலன்	0
பூர்வபட்சம் பகல் வாரம் 7-க்கும் மரணத்தின் பலன்	44
பூர்வபட்சம் இரவு வாரம் 7-க்கும் ஊணின் பலன்	0
பூர்வபட்சம் இரவு வாரம் 7-க்கும் நடையின் பலன்	0
பூர்வபட்சம் இரவு வாரம் 7-க்கும் அரசின் பலன்	45
பூர்வபட்சம் இரவு வாரம் 7-க்கும் நித்திரையின் பலன்	0
பூர்வபட்சம் இரவு வாரம் 7-க்கும் மரணத்தின் பலன்	0
அமரபட்சம் பகல் வாரம் 7-க்கும் ஊணின் பலன்	0
அமரபட்சம் பகல் வாரம் 7-க்கும் நடையின் பலன்	46
அமரபட்சம் பகல் வாரம் 7-க்கும் அரசின் பலன்	0
அமரபட்சம் பகல் வாரம் 7-க்கும் நித்திரையின் பலன்	0
அமரபட்சம் பகல் வாரம் 7-க்கும் மரணத்தின் பலன்	47
அமரபட்சம் இரவு வாரம் 7-க்கும் ஊணின் பலன்	0
அமரபட்சம் இரவு வாரம் 7-க்கும் நடையின் பலன்	0
அமரபட்சம் இரவு வாரம் 7-க்கும் அரசின் பலன்	0

பெயர்	பக்கம்.
அமரபட்சம் இரவு வாரம் 7-க்கும் நித்திரையின் பலன்	48
அமரபட்சம் இரவு வாரம் 7-க்கும் மரணத்தின் பலன்	0
ஆஞ்சனேயர் ஆரூட சாஸ்திரம்.	
ஆரூடம் பார்க்கும் வகையறியும் விபரம்	
வாரம் 7-க்கும் பகல் 30-நாழிகையின் பலாபலன்	0
வாரம் 7-க்கும் இரவு 30-நாழிகையின் பலாபலன்	54
ஜெயமுனிவர் ஆரூட சாஸ்திரம்.	
திக்குகளறியும் சக்கரம்	60
கிழக்கு-மேற்கு-தெற்கு-வடக்கு, அக்கினிமூலை-வாய்வு மூலை-சனிமூலை-நிருதிமூலை-தீவுதிசைகள் காட்டும் சக்கரம்	61
மேஷராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	62
ரிஷபராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	65
மிதுனராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	68
கடகராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	70
சிங்கராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	71
கன்னிராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	75
துலாராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	77
விருச்சிகராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	79
தனுசுராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	81
மகரராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	83
கும்பராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	84
மீனராசியின் நான்கு ஜாமத்திற்கும் பலாபலன்	88
வால்மீகர் ஆரூட சாஸ்திரம்.	
வால்மீகர் ஆரூட சாஸ்திரமறியும் விபரம்	92
இராசி நிலைகளாவன	93
ஒரு காரியத்தைக் குறித்து	0
ஒரு பொருளைக் கையில்மூடி அறிவது	0
போக்கடித்த பொருள் எடுத்தவராரென்றறிய	94
எடுத்தவர் உள்ளூர் அயலூரெனறறிய	0

அஷ்டதிக்கு ஆரூடத்தின் அட்டவணை.

பெயர்.	பக்கம்.
அளவு அறிவது	0
நிறமறிவது	95
குறியது நெடியது அறிய	0
வந்தவருக்குள் இன்னாரென்றறிய	96
பெண் கேட்கப் போக	0
கலியாணஞ் செய்ய	0
குழந்தை உண்டு இல்லையென்றறிய	97
குழந்தை ஆண் பெண்ணென்றறிய	0
குழந்தை சிவப்பு கருப்பென்றறிய	0
மழை வருங் குறிப்பறிய	0
கிணறு வெட்ட	93
வித்து விதைக்க	0
விளைவு கேட்க	0
வியாபாரஞ் செய்ய	99
மணியம் அல்லது உத்தியோகஞ்செய்ய	0
கல்வி படிக்க	0
சிறை விலக்க	100
கலகம் அறிய	0
சண்டையில் வெற்றியறிய	0
இறந்தது உண்மையாவென்றறிய	101
பிணிக்குறி அறிய	0
வீடுகட்டிக குடிப்புக அறிய	0
ஊர் பயணம்போக	102
ஊருக்குப் போனவர் வரவு அறிய	0

அஷ்டதிக்கு ஆரூடத்தின் அட்டவணை

முற்றிற்று

உ

மரமபதி துணை.

சகாதேவர்

திருவாய்மலர்ந்தருளிய

அஷ்டதிக்கின் ஆரூடம்.

மீனம் வட கிழக்கு ஈசானியமூலை	மேஷம் கிழக்கு இந்திரன் திக்	ரிஷபம் கிழக்கு இந்திரன் திக்	மிதுனம் தென் கிழக்கு அக்கினிமூலை
கும்பம் வடக்கு குபேரன் திக்கு	திக்குகளறியும்		கடகம் தெற்கு எமன்-திக்கு
மகரம் வடக்கு குபேரன் திக்கு	இராசிச் சக்கரம்.		சிங்கம் தெற்கு எமன்-திக்கு
தனுசு வடமேற்கு வாய்வு மூலை	விருச்சிகம் மேற்கு வருணன் திக்	துலாம் மேற்கு வருணன் திக்	கன்னி தென்மேற்கு நிரிதி மூலை

இந்த அஷ்டதிக்கின் ஆரூடக்குறி சாஸ்திரம் அறிந்து சொல்வது எவ்விதமென்றால, ஆரூடங் கேட்பவர்கள் வந்து நிற்குந் திசையை மேற்கண்டிருக்கும் இராசிகளில் அறிந்து அப்போது நடக்குஞ் ஜாமமும், வாரமுங் கண்டு அந்த வார ஜாமங்களுக்குரிய பாடலை வாசித்து கேட்பவர்கள் மனத் திருப்தியடையும்படி பலாபலன்கள் சொல்லுவீர்கள்.

விநாயகர் துதி.

விருத்தம்.

அன்புடன் யெவருகொண அஷ்டதிக் காரூடத்தை
தென்புடன் சகாதேவர் தானுறை செய்தவர்போல்
பண்புருந் தமிழினாலே பாடவென் ஞவிலோங்கும்
நன்புரும் விநாயகன்றன் நன்மலர் பாதங்காப்பே.

ஞாயிர் 1-வது ஜாமம்—கிழக்கு.

நினைத்ததோர் கலியாணந்தா னிறைபட முடியுமேற்கில்
தனத்துட னுத்தியோகந் தானது பெற்றுவாழ்வாய்
இனத்தினி லுனதுநேச னிருந்திடுங் கருத்தோனாலே
மனத்துய ரகலுஞாயர் முதற்ஜாமங் கிழக்காரூடம். 1

ஞாயிர் 1-வது ஜாமம்—தேன் கிழக்கு.

ஜீவனை நாடிநீயும் திகைத்துமே மனத்திலெண்ணி
யாவலாய்க் குறித்துக்கேழ்ககு மறிவையுங் கன்னியாகும்
தாவியே யுனதுசொற்றைத் தான்கொண்டாள் வாராதப்பா
மேவிய ஞாயர்முதற் ஜாமந்தென் கிழக்காரூடம். 2

ஞாயிர் 1-வது ஜாமம்—தேற்கு.

போனவர் வெளியூருக்குப் பிரியமாய் வரவேகேட்டாய்
தானவர் கன்னியாலே தயைதாகியடற் கின்றூர்காண
ஊனமு மில்லையோர் திங்கட்குள் வந்துசேர்வர்
வானுத லாளேஞாயர் முதற்ஜாமந் தெற்காரூடம். 3

ஞாயிர் 1-வது ஜாமம்—தேன் மேற்கு.

பிழைத்திடும் பிழைப்பைநாடி பிரியமாய்க் கேழ்க்கவந்தாய்
தழைத்திடப் பலிதமாகும் தடையது யில்லைசொன்னேன்
வழித்திடும் திசைகோளாலே வலுவது தானுண்டாகும்
பொழிந்திடும் ஞாயர்முதற் ஜாமந்தென் மேற்காரூடம். 4

ஞாயிர் 1-வது ஜாமம்—மேற்கு.

மெய்தனில் வந்தநோயின் மருதமு மரியவேண்டி
துய்யவே கேட்டசேதி தோன்றிடுங் கிரகதோஷம்
வையவே மூன்றுதிங்கள் பார்த்துநீ கழிக்கவேண்டும்
வையகம் புகழுஞாயர் முதற்ஜாம மேற்காரூடம். 5

ஞாயர் 1-வது ஜாமம்—வடமேற்கு.

பொருளது வொன்றுதானும் போக்கது போனதுண்டு
மரிவிய உனதுநேசன் மறைத்ததை வைத்தானப்பா
குரையிலா வந்துசேருங் குளப்பமும் வைக்கவேண்டாம்
தரைபுகழ் ஞாயர்முதற் ஜாமம்வட மேற்காரூடம். 6

ஞாயர் 1-வது ஜாமம்—வடக்கு.

உத்திர திசையில்வாழு முகர்ந்திடுங் கன்னிமீது
சித்தமும் வைத்துநீயும் சிந்தையும் வாடுகின்றாய்
பத்தியே வொருபிரைக்குள் பரிவுடன் வந்துகூடும்
நத்திய ஞாயர்முதற் ஜாமத்தின் வடக்காரூடம். 7

ஞாயர் 1-வது ஜாமம்—வடகிழக்கு.

ஆளனுங் கன்னிகூடி அடுத்துமே திக்குச்சென்றோர்
மீளவே யவர்கருத்தை மிகவுநீ யெண்ணிகேட்டாய்
கோளதா யவர்கள்மெத்த கஷ்டமும் படுகுறார்கள்
தாளவே ஞாயர்முகற் ஜாமம்வட கிழக்காரூடம். 8

ஞாயர் 2-வது ஜாமம்—கிழக்கு.

கலகமில் லத்திலாகி காளையா மொருவன்தானும்
வலந்தரும் நிரிதிமூலை பந்துவை சேர்ந்துவாழ்வான்
நலந்தரு மின்னமெட்டு நாளினில் வருகுஞ்சேதி
குலவிய ஞாயர்ரெண்டாஞ் ஜாமத்தின் கிழக்காரூடம். 9

ஞாயர் 2-வது ஜாமம்—தேன்கிழக்கு.

வேதியன் தனைபடுத்து வேண்டிய பொருளுங் கேட்டாய்
ஓதியே கெடுகளிட்டு உனக்கவன் சொல்லிவாரான்
சோதியாந் திங்களொன்று சென்றபின் வந்துகூடும்
ஆதிபாம் ஞாயர்ரெண்டாம் ஜாமந்தென் கிழக்காரூடம். 10

ஞாயர் 2-வது ஜாமம்—தெற்கு.

உன்னிட பொருளைதானு மொருவர்கை யீந்துமிப்போ
என்னமா வருமோவென்று யேங்கிநீ வாடுகின்றாய்
பன்னியே வசராலே பலித்திடும் பயப்படாதே
கன்னிகர் ஞாயர்ரெண்டாஞ் ஜாமத்தின் தெற்காரூடம். 11

ஞாயர் 2-வது ஜாமம்—தென்மேற்கு.

மண்ணினில் பிறந்தநாளு மாறுத துயரத்தோடே
குண்ணியே படுதுக்கஷ்டம் குறையது தீரக்கேட்டாய்
நண்ணியே யின்னோருண்டு நடந்தபின் சுகமுண்டாகும்
எண்ணியே ஞாயர்ரெண்டாஞ் ஜாமந்தென் மேற்காரூடம். 12

ஞாயர் 2-வது ஜாமம்—மேற்கு.

சண்டையில் விடத்திலாகி சார்ந்துகச் சேரிமூலம்
கண்டதோர் கலகந்தீருங் காரணந் தன்னைக்கேட்டாய்
பண்டுடன் ஜயங்களாகுமுன் பாவையாள் மொழியைத்தள்ளு
விண்டிடும் ஞாயர்ரெண்டாஞ் ஜாமந்தென் மேற்காரூடம். 13

ஞாயர் 2-வது ஜாமம்—வடமேற்கு

பிழைத்திடும் பிழைப்பிலிப்போ பிசகது நேர்ந்துநாளும்
வழித்திடுங் கைப்பொருள்கள் வழிந்துமே யோடுதிப்போ
தழைத்திடும் பயப்படாதே தானொரு மூன்றுதிங்கள்
செழித்திடு ஞாயர்ரெண்டாஞ் ஜாமம்வட மேற்காரூடம். 14

ஞாயர் 2-வது ஜாமம்—வடக்கு.

காணவே துலவிருக்கும் கன்னியா ளொருத்திதானும்
பூணவே பிணியால்மாண்ட சேதியு மொன்றுகாண்பாய்
வேணவே தெற்குமூலை வருகுமே யோகமூலம்
நாணவே ஞாயர்ரெண்டாம் ஜாமத்தின் வடக்காரூடம். 15

ஞாயர் 2-வது ஜாமம்—வடகிழக்கு.

சிந்தையுங் கலங்குகின்றாய் சிறுவன்றன் பிணியினாலே
வந்தது அவனுக்கிப்போ வருத்தமுங் கிரகதோஷம்
பந்தமே யவன்பிழைத்தால் பாரினில் மறுபிறப்பாம்
விந்தையாம் ஞாயர்ரெண்டாஞ் ஜாமம்வட கிழக்காரூடம். 16

ஞாயர் 3-வது ஜாமம்—கிழக்கு.

இல்விடந் தாவில்மெத்த இடறுகள் தானுமுண்டு
வல்விடி துன்பப்பீடை வருத்தமும் படுகுராய்நீ
சொல்லிய திங்களாறு தானேக சுகமுண்டாகும்
செல்லிய ஞாயர்மூன்றுஞ் ஜாமத்தின் கிழக்காரூடம். 17

ஞாயிர் 3-வது ஜாமம்—தென்கிழக்கு.

கூட்டதாய் யொருவனோடு கூடிவியா பாரஞ்செய்ப
நாட்டமாய் நம்தனியு மிருக்கின்றாய் செவத்தோன் தன்னை
கேட்டிடா யவனைநம்ப கழித்திடு மோர்திங்கள் தான்
தாட்டியாம் ஞாயிர்மூன்றும் ஜாமந்தென் கிழக்காரூடம். 18

ஞாயிர் 3-வது ஜாமம்—தேற்கு.

உன்னுடன் பிறந்தோன் தானு மோங்கியே கலகமிட்டு
தன்மனம் நொந்துபோன தம்பியுன் வரவைகேட்டாய்
அன்புடன் வருவானிங்கு அறிந்திடு கிரிதிமூலை
பண்புடன் ஞாயிர்மூன்றும் ஜாமத்தின் தெற்காரூடம். 19

ஞாயிர் 3-வது ஜாமம்—தேன்மேற்கு.

குறித்தமோர் மங்கைகாணுங் குணப்படி வாளாயென்று
வருத்தமும் மனதிலெண்ணி வன்புடன் கேழ்க்கின்றாய்நீ
பெருத்தமோர் துன்பங்காணும் பெண்ணின்மே லாசைதள்ளு
திருத்தமாம் ஞாயிர்மூன்றுஞ் ஜாமந்தென் மேற்காரூடம். 20

ஞாயிர் 3-வது ஜாமம்—மேற்கு

பூமியும் வாங்குவதற்குப் பிரியமுங் கொண்டுநீயும்
தாமிக மனதிலெண்ணி தரித்திடும் பலனைகேட்டாய்
சேமமு முண்டாமுந்தன் சித்தத்தின் படியேகொள்ளு
நேமமாம் ஞாயிர்மூன்றும் ஜாமத்தின் மேற்காரூடம். 21

ஞாயிர் 3-வது ஜாமம்—வடமேற்கு.

போனதோர் களவுகையிற் பொருந்திய மோதிரந்தான்
தானது வீட்டைவிட்டுத் தாண்டியும போகவில்லை
ஆனதோர் மனவியாலே அப்பொருள் வந்துசேரும்
தேனென ஞாயிர்மூன்றும் ஜாமம்வட மேற்காரூடம். 22

ஞாயிர் 3-வது ஜாமம்—வடக்கு.

உன்னுடன் நேசன்தானு முறவதா யிருந்தவுந்தன்
பின்னியே நாற்கால்ஜீவன் பிசகதாய் கொண்டுபோனான்
இன்னமும் மூன்றுநாளில் யியலுடன் வந்துசேரும்
மன்னிய ஞாயிர்மூன்றுஞ் ஜாமத்தின் வடக்காரூடம். 23

ஞாயர் 3-வது ஜாமம்—வடகிழக்கு.

கையினில் காசுசேதாற்று கவலையும் படுகின்றாய்நீ
ஐயமாய் வயர்பிழைக்க அவஸ்தையும் படுகுறாய்நீ
துய்யவே யின்னமூன்று திங்கட்குள் சுகமுண்டாகும்
பையவே ஞாயர்மூன்றுஞ் ஜாமத்தின் வடகிழக்காருடம். 24

ஞாயர் 4-வது ஜாமம்—கிழக்கு.

தங்கையை வதுவுசெய்ய தான்வந்து கேழ்ப்பவற்கு
மங்களமாகத் தந்தால் மகிழுடன் வாழ்வாளப்பா
சங்கையு மில்லையுந்தன் சுகியுற வாகவேண்டும்
இங்கவை ஞாயர்நாலாஞ் ஜாமத்தின் கிழக்காருடம். 25

ஞாயர் 4-வது ஜாமம்—தென் கிழக்கு.

மாலையும் முடித்தநாளாய் மனைவிக்குக் கருவில்லாமல்
சாலவே முனியுஞ்செய்யும் சங்கட்டந் தரக்கேளும்
கோலமாம் பிணிகளால் குறையது விலகுஞ்சொன்னேன்
மேலவே ஞாயர்நாலாம் ஜாமந்தென் கிழக்காருடம். 26

ஞாயர் 4-வது ஜாமம்—தெற்கு.

வைமந்தனை பள்ளிவைக்க மனமது மகிழ்ந்துக்கேட்டாய்
விந்தையாம் வித்தையேறு விளங்குங்கை தொழிலேசெய்வன்
அந்தமாய் சிற்பவேலை யவன்மிகு கீர்த்தியாவான்
தொந்தமாம் ஞாயர்நாலாம் ஜாமத்தின் தெற்காருடம். 27

ஞாயர் 4-வது ஜாமம்—தென் மேற்கு

துரைமுகம் காணவேண்டி துரிதமாய் கடிதமொன்று
பிரியமா யெழுதிவிட்டப் பலனதை கேழ்க்குறாய்நீ
குறைவிலா தந்தம்வலை கூடிடுகை வருகுஞ்சொன்னேன்
பரவிய ஞாயர்நாலஞ் ஜாமந்தென் மேற்காருடம். 28

ஞாயர் 4-வது ஜாமம்—மேற்கு.

தகமையா யுனதுவண்ணன் தானும்போய் வெகுநாளாச்சு
வகையதா யுயிரோடேதான் வருவானு என்றுகேட்டாய்
உகமைபாய் வருவான்காணும் வொன்பது திங்கட்குள்ளே
ஜெகம்புகழ் ஞாயர்நாலாஞ் ஜாமத்தின் மேற்காருடம். 29

ஞாயர் 4 - வது ஜாயம்—வடமேற்கு.

ஒருவனை நப்பியேயும் உத்தியோகத் தொழிலுக்காக
பிரியமா யிருக்குஞ்சேதி பலிக்குமா வென்றுகேட்டாய்
கரிமியா ல்வனுலொன்றுங் காரிய மாவதில்லை
அரியவே ஞாயர்நாலாஞ் ஜாமம்வட மேற்காரூடம். 30

ஞாயர் 4 - வது ஜாமம்—வடக்கு.

தாயுட வம்மிசத்தில் தானுமே பிறந்தகன்னி
தோய்துமே மாண்டசேதி துரிதமாய் வரவேகாண்பாய்
சாய்ந்துமே கிழக்கிருந்து தானொரு ஆளின்மூலம்
எய்ந்தலே ஞாயர்நாலாஞ் ஜாமத்தின் வடக்காரூடம் 31

ஞாயர் 4 - வது ஜாமம்—வடகிழக்கு.

பங்காளி சண்டையாலே பாதையும் படுகின்றாய்நீ
அங்கன வழக்கால்மெத்த வரும்பொருள் சேதமுண்டு
இங்கவை யொழியவாண்டு யேகவே வேண்டுஞ்சொன்னேன்
சங்கையாம் ஞாயர்நாலாம் ஜாமம்வட கிழக்காரூடம். 32

ஞாயர் - முற்றிற்று.

திங்கள் 1 - வது ஜாமம்—கிழக்கு.

தேடியே வொருவன்தன்னை தானது வடுத்துநீயும்
நாடியே கேட்டபொருள் நலமுடன் வருதுமப்பா
கூடிட உனதுவேலை குறைவர நடக்குஞ்சொன்னேன்
பாடியே திங்கள்முதற் ஜாமத்தின் கிழக்காரூடம். 1

திங்கள் 1 - வது ஜாமம்—தென் கிழக்கு.

8
உன்னுடன் பிறந்ததம்பி உதித்தவர் நால்வருக்கும்
அன்னித கலகமாகி ஆனதோர் குடும்பந்தானும்
பின்னியே பிரிந்துப்போச்சு பிசகதா யுனக்குகஷ்டம்
தன்னிய திங்கள்முதற் ஜாமந்தென் கிழக்காரூடம். 2

திங்கள் 1 - வது ஜாமம்—தெற்கு

கப்பலின் வழியாய்ப்போன காலையும் வரவேயெண்ணி
செப்பமா யவனும் கன்னியின் வலைக்குள்பட்டான்
தப்பித மாச்சுதிப்போ தான்வரப் போரதில்லை
கொப்பவே திங்கள்முதற் ஜாமமும் தெற்காரூடம். 3

திங்கள் 1 - வது ஜாமம்—தென் மேற்கு

காளையாம் பசுவுமொன்று கைவிட்டுப் போனதுண்டு
கோளதாய் வாய்வுமூலை கொண்டவன் சென்றானப்பா
மீளவே வருகுமப்பா மகிழுடன்போய்நீ கைக்கொள்
தாளவே திங்கள்முதற் ஜாமந்தென் மேற்காரூடம். 4

திங்கள் 1 - து ஜாமம்—மேற்கு.

எங்கெனுந் தீமைநேர்ந்து பெண்ணமுங் கலங்கிவாடி
பொங்கமாய் செய்யுந்தொழில் போனதை யெண்ணிகேட்டாய்
சங்கையா யுனக்குமிப்போ சனியன் கொடுமையுண்டு
தங்கிய திங்கள்முதற் ஜாமத்தின் மேற்காரூடம். 5

திங்கள் 1 - வது ஜாமம்—வடமேற்கு.

சொல்லுங் காரியமுமாகும் ஸ்திரீயவள் பெருவாள்பிள்ளை
வல்லமை மிகவுண்டாகும் வழித்தியதெல்லாங்கூடும்
தொல்லை யில்லாமல்வெளி போனவர் வந்துசேர்வார்
அல்லது மில்லைதிங்கள் முதற்ஜாமம் வடமேற்காரூடம். 6

திங்கள் 1 - வது ஜாமம்—வடக்கு.

பாம்பினால் மரணமாகி பந்துவி லொருவன்தானும்
சாம்பதி யானுமென்று தான்வரு மோலைகாண்பாய்
சோம்பலாய் நீயுமெத்த துயரமும் படுவாய்சொன்னேன்
தேம்பிய திங்கள்முதற் ஜாமத்தின் வடக்காரூடம். 7

திங்கள் 1 - வது ஜாமம்—வட கிழக்கு.

சந்தேக மில்லைசொன்னேன் சார்ந்திடு மயலாராலே
வந்திடும் பொருளுதவி வளம்பெற நன்மையுண்டாம்
சிந்தையுங் களிக்கநீயும் ஜெயம்பெறும் வேளைகாண்பாய்
விந்தையாம் திங்கள்முதற் ஜாமம்வட கிழக்காரூடம். 8

திங்கள் 2 - வது ஜாமம்—கிழக்கு.

கொள்ளவே கோவுனக்கு குறைவிலா வந்துசேறும்
தெள்ளிய பணிகளுண்டாம் திகழ்சுப மகத்திலாகும்
விள்ளவே மேற்கிருந்து பெருகுமே க்ஷேமவோலை
வள்ளலாந் திங்கள்ரெண்டாம் ஜாமத்தின் கிழக்காரூடம். 9

திங்கள் 2-வது ஜாமம்—தென் கிழக்கு.

களவது போனபொன்னு பரணமுங் கைதான் கூடும்
வளமுள காரியங்கள் வாராது மந்திபந்தான்
அளவதா யுனக்குச்சனி அலட்டுறான் பாதச்சனி
தளமுளா திங்கள்ரெண்டாஞ் ஜாமந்தென் கிழக்காரூடம். 10

திங்கள் 2-வது ஜாமம்—தெற்கு.

கொஞ்சமும் பயமிராது கூடுவான் பகைவன்நேசம்
துஞ்சிய பிரையாணந்தான் தானது தடையதாகும்
சஞ்சல மகலுநல்ல தான்வருஞ் சுபங்கள்வார்த்தை
வஞ்சியே திங்களரெண்டாஞ் ஜாமத்தின் தெற்காரூடம். 11

திங்கள் 2-வது ஜாமம்—தென் மேற்கு.

அக்கினி தன்னால்வந்த வருந்துயர் நீக்கிடாது
மிக்கவே செய்தொழிலு மேதினில் பலிதமாக
சிக்கின தனதான்னியம் செலவதாய் நஷ்டமாகும்
துக்கமாந் திங்கள்ரெண்டாம் ஜாமந்தென் மேற்காரூடம். 12

திங்கள் 2-வது ஜாமம்—மேற்கு.

துரவது யெடுக்கநீயும் துலங்கவே மனதில்கொண்டாய்
பிரியமாய்யெடுப்பாய்சொன்னேன் பெரிகிடுஞ்சலங்கள்தானும்
வரவதா யிந்தவாண்டில் வாய்த்திடும் பலன்கள்மெள்ள
குரவிலா திங்கள்ரெண்டாம் ஜாமத்தின் மேற்காரூடம். 13

திங்கள் 2-வ்து ஜாமம்—வடமேற்கு.

மழையது யதிகமுண்டு மரிவியி விளைவுமேலாம்
குழவிக்கு வந்தநோயுங் குணப்படும் சுகமுண்டாகும்
தழைத்திட கொண்டவெண்ணந் தானது கைதான்கூடும்
செழித்திடுந் திங்கள்ரெண்டாம் ஜாமம்வட மேற்காரூடம். 14

திங்கள் 2-வது ஜாமம்—வடக்கு.

கலகமு மொருவராலே கண்டது முனக்குஉண்டு
இலகவே யவனலிப்போ யிடையூறு துன்பமாச்சு
குலவிய மனையாள்சண்டை கோறமு மாகுதிப்போ
தலமதில் திங்கள்ரெண்டாம் சாமதின் வடக்காரூடம். 15

திங்கள் 2 - வது ஜாமம்—வட கிழக்கு.

தாண்டியே வெளியூர்போக தானது மெண்ணங்கொண்டாய்
வேண்டியே போனையானல் வெகுசுக மாகுமங்கே
தூண்டிய வொருவனங்கே துணையிது மிகவுஞ்செய்வான்
பூண்டதோர் திங்கள்ரெண்டாம் ஜாமம்வடகிழக்காரூடம். 16

திங்கள் 3 - வது ஜாமம்—கிழக்கு.

அடாத வார்த்தையாலே யனைவற்குந் துன்பமுண்டு
படாத பாடுபட்டு பதரிநீ வந்துகேட்டாய்
விடாதுகேள் மூன்றுவாண்டு வேகபின் சுகமுண்டாகும்
கொடாததோர் திங்கள்மூன்றும் ஜாமத்தின் கிழக்காரூடம் 17

திங்கள் 3 - வது ஜாமம்—தென் கிழக்கு.

எடுத்ததோர் பேரஞ்சாயும் யெதிரியும் நாசமாவான்
தொடுத்ததோர் வழக்குதானுந் துலங்கியுன் வசமேயாகும்
படுத்துமோர் கிரகமெல்லாம் பலனது கூட்டிநிற்கும்
அடுத்ததோர் திங்கள்மூன்றும் ஜாமந்தென் கிழக்காரூடம். 18

திங்கள் 3 - து ஜாமம்—தெற்கு.

எண்ணியே வொருவன் தன்னை யேகுராய் தொழிலுக்காக
திண்ணமாய் முடியாதப்பா திகைத்திடச் செய்வானுன்னை
வண்ணமாய் மூன்றுவாரங் கழிந்திட சுகமுண்டாகும்
நண்ணிய திங்கள்மூன்றும் ஜாமத்தின் மேற்காரூடம். 19

திங்கள் 3 - வது ஜாமம்—மேற்கு.

கன்னியால் கலகப்பட்டு கடுந்துய ரடைந்துநீயும்
தன்னிய வழக்குதாலும் போவது யெவ்வாறென்றாய்
மன்னரால் உதவியுண்டு மகிழுடன் செலிப்பாய்நீயும்
சொன்னதோர் திங்கள்மூன்றும் ஜாமந்தென் மேற்காரூடம் 20

திங்கள் 3 - வது ஜாமம்—தென் மேற்கு.

இருக்குமோர் தொழிலைவிட்டு யின்னொரு தொழிலுக்கேக
பெருக்கலே யாலோசித்த பேச்சிது பலியாதப்பா
தருக்கமா யொருவர்பேச்சை தானது கேழ்க்கவேண்டாம்
சிரக்குமோர் திங்கள்மூன்றும் ஜாமத்தின் மேற்காரூடம். 21

திங்கள் 3 - வது ஜாமம்—வடமேற்கு.

நாலுகால் ஜீவனொன்று நாடியே கொள்ளவென்று
மேலதாய் கொள்ளவென்று மேற்கினிற் போகப்போருய்
சீலமா யுனக்குதானுஞ் சித்திக்கும் பயப்படாதே
சாலவே திங்கள்மூன்றும் ஜாமம்வட மேற்காரூடம். 22

திங்கள் 3- வது ஜாமம்—வடக்கு.

பேசிய மேற்குதிக்குப் பெண்ணது படியுமப்பா
நேசமா யொருவராலே நீடிய பொருளும்கூடும்
வாசமா யுன்னகத்தில் வதுவையு முடியுமப்பா
கூசிடா திங்கள்மூன்றும் ஜாமத்தின் வடக்காரூடம். 23

திங்கள் 3 - வது ஜாமம்—வடகிழக்கு.

மங்கையாள் கெற்பந்தன்னில் மகிழுடன் பிறக்கும்பிள்ளை
சங்கையு மொன்றுமில்லை சார்ந்தவுத்தி யோகமோங்கும்
பொங்கமா யுனதுபந்தோர் புகழ்ந்துற வாடுவார்கள்
திங்களின் மூன்றும்ஜாமம் தெரிந்துகொள் வடகிழக்காரூடம்.

திங்கள் 4 - வது ஜாமம்—கிழக்கு.

பலித்திடும் பயிர்களோடு பலமதாந் தான்னியங்கள்
சலிப்பிலா மழையுமுண்டு சகலமும் வந்துகூடும்
குலத்தினி லொருவனாலே குடும்பமும் தழைத்துவாழும்
நிலத்தினில் திங்கள்நாலாம் ஜாமத்தின் கிழக்காரூடம். 25

திங்கள் 4 - வது ஜாமம்—தென் கிழக்கு.

கோரிய தெய்வமொன்று குறைபட்டு நிற்குதிப்போ
வீரிய தந்தை தானும் வெகுபிணி பட்டுவாரார்
காரியின் கோபிற்சுற்ற கஷ்டமும் விலகுஞ்சொன்னேன்
கூறிய திங்கள்நாலாம் ஜாமந்தென் கிழக்காரூடம். 26

திங்கள் 4 - வது ஜாமம்—தெற்கு.

ஈடதாய் சொத்தை யில்லையென்று வழக்கில்பட்டு
கேடதா யுனைபொருத்தன் கெடுத்திட்டான் வாடுகின்றாய்
கூடிய யவன்நேசத்தை கொள்ளாதே சுகமுண்டாகும்
தேடிய திங்கள்நாலாம் ஜாமத்தின் தெற்காரூடம். 27

திங்கள் 4-வது ஜாமம்—தென்மேற்கு.

விஷமது தீண்டிமெய்யில் வருத்தமும் படுகின்றாய்நீ
குசனவன் கொடுமையாலே கோரமாய் விளையுதிப்போ
நிசமெனுங் குலதேவதைக்கு நிகழ்த்திடு பூசைதீரும்
வசமதாம் திங்கள்நாலாம் ஜாமத்தின்தென் மேற்காரூடம். 28

திங்கள் 4-வது ஜாமம்—மேற்கு.

மனைவியின் விசனமொன்று மைந்தர்கள் விசனமொன்று
துணைவனை பிரிந்துவிட்ட துன்பமாம் விசனமொன்று
இனமதா இதுகளெல்லா மேகிடுந் திங்கட்குள்ளே
நினைவதாய் திங்கள்நாலாம் ஜாமத்தின் மேற்காரூடம். 29

திங்கள் 4-வது ஜாமம்—வடமேற்கு.

மட்டிலா கடனைப்பட்டு மனது வாடுகின்றாய்
திட்டமா மரசராலே தான்படும் தயரமுண்டு
பொட்டென யிவைகளெல்லாம் போக்கவோர் சினேகமுண்டு
மட்டிலா திங்கள்நாலாம் ஜாமம்வட மேற்காரூடம். 30

திங்கள் 4-வது ஜாமம்—வடக்கு.

தங்கையாள் மீதிற்சண்டை தானது மிகவுண்டாகி
பங்கமும் பட்டுநீயும் பரிதேசி போலேயிப்போ
அங்கத்தில் பிணியுங்கொண்டு வலச்சலும் படுகின்றாய்நீ
திங்களின் நாலாம்ஜாமம் தெரிந்துகொள் வடக்காரூடம். 31

திங்கள் 4-வது ஜாமம்—வடகிழக்கு.

போரதோர் வேலைதானும் பலிதமு மாகாதப்பா
சாரவே யொருவனாலே சங்கட மிகவேதோன்றும்
நேரதாய் வாரமொன்று நீங்கபின் சுகமுண்டாகும்
கூறிய திங்கள்நாலாம் ஜாமம்வட கிழக்காரூடம். 32

திங்கள் ஆரூடம் - முற்றிற்று.

செவ்வாய் 1-வது ஜாமம்—கிழக்கு.

சனியவன் பாதந்தொட்டு சலித்துமே வாட்டுகின்றான்
பிணியது வந்தவாறு போவதெப்படி யென்றிப்போ
கனியது போலேவாடி கலங்கிநீ கேட்டாரூடம்
வினையது துலையுஞ்செவ்வாய் முதற்ஜாமம் கிழக்காரூடம். 1

செவ்வாய் 1-வது ஜாமம்—தென் கிழக்கு.

பெருவது ஆணோபெண்ணோ புகன்றிட வேணுமென்று
கருதியே வந்துகேட்டக் காரண மதனைக்கேளும்
திரமுள வாண்குழந்தை தானது வுதிக்குஞ்சொன்னேன்
நிறையுள செவ்வாய்முதற் ஜாமந்தென் கிழக்காரூடம். 2

செவ்வாய் 1-வது ஜாமம்—தெற்கு.

இல்லிடந் தாவில்பெற்ற யிடருக ளாகுதிப்போ
வல்லிடி யாகவுந்தன் மனைவியும் பிரிந்துபோனாள்
நல்லது இன்னம்கொஞ்சம் நாளினில் சுகமுண்டாகும்
சொல்லிய செவ்வாய்முதற் ஜாமத்தின் தெற்காரூடம். 3

செவ்வாய் 1-வது ஜாமம்—தென் மேற்கு.

மழையது பெருக்குமுண்டு மணம்து மனையிற்கூடும்
தழைத்திடும் பயிர்செழிக்குந் தமையனும் நேசமாவான்
பழித்திடும் பங்கோரெல்லாம் பரிந்துர வாடுவார்கள்
வழிதநிய செவ்வாய்முதற் ஜாமந்தென் மேற்காரூடம். 4

செவ்வாய் 1-வது ஜாமம்—மேற்கு.

ஒருவனை மோசஞ்செய்ய உளமதில் நினைத்துநீயும்
பருவமா யவனோடுநீ பரிந்துர வாடுகின்றாய்
தருவென யவனைவெல்ல தானது வாகாதுன்னால்
குறிகிய செவ்வாய்முதற் ஜாமத்தின் மேற்காரூடம். 5

செவ்வாய் 1-வது ஜாமம் வடமேற்கு.

தேடிய பொருளையெல்லாந் திருடற்குப் பரிகொடுத்து
வாடியே பிணியுங்கொண்டு வருத்தமும் படுகிறாய்நீ
கூடியே பொருள்வாராது கொண்டதோர் பிணியுந்தீரும்
நாடியே செவ்வாய்முதற் ஜாமம்வட மேற்காரூடம். 6

செவ்வாய் 1-வது ஜாமம்—வடக்கு.

யாத்திரை போவதற்கு யன்புமே கொண்டாய்நீயும்
நேத்தியாய் குடும்பத்தோடே நடக்கவே சுகமுண்டாகும்
சூத்திர மானதெற்கு முகமது செவ்வாய்நீயும
பாத்திடும் செவ்வாய்முதற் ஜாமத்தின் வடக்காரூடம். 7

செவ்வாய் 1-வது ஜாமம்—வடகிழக்கு.

பண்புள உனதுபுத்திர பாக்யபத் தாலேயின்று
நண்புள கீர்த்திதானும் நாடியே வந்துகூடும்
இன்புள மனையாளாலே யாவுமே பலிதமாகும்
தென்புள செவ்வாய்முதற் ஜாமம்வட கிழக்காரூடம். 8

செவ்வாய் 2-வது ஜாமம் - கிழக்கு.

எடுத்ததோர் பேரஞ்சாயும் யேகியே மேற்குதிக்கில்
அடுத்ததோர் செவத்தோனாலே அரும்பொருள் வந்துகூடும்
தொடுத்ததோர் வழக்குவெல்லும் சுகமது மிகவுண்டாகும்
நடத்திய செவ்வாய்ரெண்டாம் ஜாமத்தின் கிழக்காரூடம். 9

செவ்வாய் 2-வது ஜாமம் - தென்கிழக்கு.

மணமது மனையிற்கூடும் மாதரால் உதவியுண்டு
குணமுள உத்தியோக கூறிபபடியே வாய்க்கும்
பணமுள பொருவனாலே பாரநற் சினைகங்கூடும்
துணையுமே செவ்வாய்ரெண்டாம் ஜாமந்தென் கிழக்காரூடம்.

செவ்வாய் 2-வது ஜாமம் - தென்கிழக்கு.

காரிழை பொருத்திபாலே கலகமும் பட்டுமிப்போ
வீரிய வழக்கத்தாலே வேந்தரால் கலகம்நேரும்
கூறிய வுனக்குமிப்போ கிரகமும் போறாதப்பா
சீரிய செவ்வாய்ரெண்டாம் ஜாமத்தின்தென் கிழக்காரூடம். 11

செவ்வாய் 2-வது ஜாமம் - தெனமேற்கு,

மனையது கொள்வதற்கு மனதினில் நாட்டங்கொண்டு
துணைமெனும் பொருளைபெல்லாந் தானது விரையஞ்செய்தாய்
நினைவது யுனகுலத்தா நேசமேன கெடுத்துப்போட்டான்
இனிமையாய் செவ்வாய்ரெண்டாம்ஜாமந்தென்மேற்காரூடம்

செவ்வாய் 2-வது ஜாமம் - மேற்கு.

பயிரது பலிதமாகும் பாலகன் மூத்தோனுக்கும்
தயிரியம் மென்மேலாகும் தழைககவே விவாகங்கூடும்
வயிரியா யிருந்தோரெல்லாம் வந்துமே உரவாவார்கள்
ஜெயமெனுஞ் செவ்வாய்ரெண்டாம் ஜாமத்தின் மேற்காரூடம்.

செவ்வாய் 2-வது ஜாமம் - வடமேற்கு.

மனைவியும் பகையதாகி மைந்தரும் பகையதாகி
இனமிலா மனையுமாகும் யாவுமே தோற்றுவிட்டு
கனியது போலேவாடி கஷ்டமும் படுகிறாய்நீ
வினவிய செவ்வாய்ரெண்டாம் ஜாமம்வட மேற்காரூடம். 14

செவ்வாய் 2-வது ஜாமம் - வடக்கு.

அர்மையின் பிணிதான்கொண்டு வருஞ்சுதன் தானுமிப்போ
வெம்பிடுந் துயரமெல்லாம் விலகிடும பயப்படாதே
செம்மையால் திருப்பதிக்கு தான்சொன்ன முடிப்புசேறு
நமபியே செவ்வாய்ரெண்டாம் ஜாமத்தின் வடக்காரூடம். 15

செவ்வாய் 2-வது ஜாமம் - வடகிழக்கு.

சோதியா யுனக்குமிப்போ சொல்லிடும மனைவியாலே
நீதியாய் பூமிதானும நிலபட வந்துகூடும்
ஆகியா யுனக்குமிப்போ யாவுமே பலிதமாகும்
வாதிபாம் செவ்வாய்ரெண்டாம் ஜாமமவட கிழககாரூடம். 16

செவ்வாய் 3-வது ஜாமம் - கிழக்கு.

மங்கள விவாகங்கூடும் மனைவியும் பெருவாள்பிள்ளை
தங்கிய குருவினாலே தானது பலனுண்டாகும்
பொங்கமா யாண்டுக்குள்ளே புதுமனை யொன்றுகொள்வாள்
இங்கித செவ்வாய்மூன்றும் ஜாமத்தின் கிழக்காரூடம். 17

செவ்வாய் 3-வது ஜாமம் - தென்கிழக்கு.

சனியன் பிடித்துதிப்போ சங்கடப் படுத்திவாரான்
வினையினால் மூன்றுவாண்டாய் வருத்தமும் படுகுராய்நீ
இனிசுகப் படுவாய்நீயும் யீஸ்வரன துணையுமுண்டு
தனிமையாஞ் செவ்வாய்மூன்றும் ஜாமந்தென் கிழக்காரூடம்.

செவ்வாய் 3-வது ஜாமம் - தெற்கு.

நாலுகால் ஜீவனொன்று நஷ்டம தாகத்தோற்றுங்
கோலமாய் மெய்யும்வாடி குழம்பிலே தவிக்கின்றாய்நீ
சாலவே பதுதானிப்போ தான்வரப் போரதில்லை
மேலமேவ செவ்வாய்மூன்றும் ஜாமத்தின் தெற்காரூடம் 19

செவ்வாய் 3-வது ஜாமம் - தென்மேற்கு.

துலைவினி லிருந்துசேதி தானது வாருதர்மேல
நிலையது தவறிநீயும் நித்தமும் துயரமுற்றாய்
பலமுடன் யினனமோர்திங் கட்குள்ளே வருகுஞ்சேதி
நலமுடன் செவ்வாய்மூன்றும் ஜாமந்தென் மேற்காரூடம். 20

செவ்வாய் 3-வது ஜாமம் - மேற்கு.

பேசிய மேற்குதிக்கு பெண்ணது பலிதமாகும்
நேசமா யதினால்மெத்த லாபமும் கிடைக்குமப்பா
தோஷமு மொன்றுமில்லை துலங்கவே லாபமுண்டு
பாசமாம் செவ்வாய்மூன்றும் ஜாமத்தின மேற்காரூடம். 21

செவ்வாய் 3-வது ஜாமம் - வடமேற்கு

பிணியது மெய்யிற்கொண்டு புலம்பிநீ வாடுகின்றாய்
துணைவனும பகையினாலே தானுமே பிரிந்துபோனான
மணமதா யுனக்குயெட்டு மாதமுங் கழியவேணும்
குணமதாய் செவ்வாய்மூன்றும் ஜாமம்வட மேற்காரூடம் 22

செவ்வாய் 3-வது ஜாமம் - வடக்கு.

ஜீவனை தேடியிப்போ திகைத்துநீ யலைந்துவந்தாய்
ஆவலா யந்தப்பாலன் அகப்படும் திசையைக்கேளு
தீவது தென்கிழக்கில் தானவ னிருப்பான்சொன்னேன்
மேவிய செவ்வாய்மூன்றும் ஜாமத்தின் வடக்காரூடம். 23

செவ்வாய 3-வது ஜாமம் - வடகிழக்கு.

போனதோர் சொத்துதானும் புகழுடன் வந்துகூடும்
ஆனதோர் மனைவியாலே யதுவெளி யாகுமப்பா
தானொரு திங்கட்குள்ளே தான்வரும் பயப்படாதே
வானனுஞ் செவ்வாய்மூன்றும் ஜாமம்வட கிழக்காரூடம். 24

செவ்வாய் 4-வது ஜாமம் - கிழக்கு.

பூமியின் வழக்கொன்றாலே புலம்பிநீ வாடுகின்றாய்
தாமதப் படவேவேண்டாம் தானது பலிதமாகும்
சேமமா யொருவாரத்துள் சித்திக்கும் பயப்படாதே
நேமமாம் செவ்வாய்நாலாம் ஜாமத்தின் கிழக்காரூடம். 25

செவ்வாய் 4-வது ஜாமம் - தென்கிழக்கு

பார்த்தகோர் மூன்றுபெண்ணில் பலித்திடுந் தெற்குகன்னில்
பூர்த்திபா யதினால்மெத்த புகழது தானுண்டாகும்
கீர்த்தியாய் மூன்றுதிங்கட் குள்ளவே பலிதமாகும்
நேர்த்திபாஞ் செவ்வாய்நாலாஞ் ஜாமந்தென் கிழக்காரூடம்.

செவ்வாய் 4-வது ஜாமம் - தெற்கு

மாளாத துயரங்கொண்டு மனமது வாடுகின்றாய்
கோளாக வொருவனாலே கொடுந்துயர் விளைந்துபோச்சு
தாளவே கொஞ்சநாளுந் தான்போக சுகமுண்டாகும்
மீளவே செவ்வாய்நாலாம் ஜாமத்தின் தெற்காரூடம். 27

செவ்வாய் 4-வது ஜாமம் - தென்மேற்கு.

பிழைத்திடும் பிழைப்பினாலே பிழையது நேர்ந்துபோச்சு
வழித்திடுங் கருத்தோனாலே வழக்கது துவக்கமாச்சு
செழித்திட ரெண்டுதிங்கள் தானது போகவேண்டும்
தழைத்திடுஞ் செவ்வாய்நாலாம் ஜாமந்தென் மேற்காரூடம்.

செவ்வாய் 4-வது ஜாமம் - மேற்கு.

பலித்திடும் நவதான்னியங்கள் பார்க்கவே யுனக்குமிப்போ
கெலித்திடும் தொடுத்தசண்டை கன்னியாளுறவதாகும்
சலித்தும போனவுந்தன் சகோதரன் வந்துசேர்வான்
நிலைத்திடும் நாலாம ஜாமத்தின் மேற்காரூடம். 29

செவ்வாய் 4-வது ஜாமம் - வடமேற்கு.

கையது விட்டுப்போன கனத்ததோர் பொருளுதானும்
பையவே வருமாவென்று பரிவுடன் கேட்டாய்நீயும்
துய்யவே யொருக்காலுந்தான் தானது வாராதப்பா
ஐயமாம் செவ்வாய்நாலாம் ஜாமம்வட மேற்காரூடம். 30

செவ்வாய் 4-வது ஜாமம் - வடக்கு.

அன்னீத மாகவேதான் அடுத்ததோர் மனிதனாலே
உன்னுட பொருள்கவர்ந்து உற்றதோர் பகையதாச்சு
பின்னியே யிதினால்மெத்த பெருந்துயர் படுகிறாய்நீ
மன்னிய செவ்வாய்நாலாம் ஜாமத்தின் வடக்காரூடம். 31

செவ்வாய் 4 - வது ஜாமம் - வடகிழக்கு.

குறித்திடும் உத்திபோகம் குணமதாய் பலிதமாகும்
கருத்துள சிநேகனாலே கருதிய பொருளுஞ்சேரும்
வருத்தமு மினிமேலில்லை வாழ்வது பெருகுமப்பா
திருத்தமாஞ் செவ்வாய்காலாம் ஜாமம்வட கிழக்காரூடம். 32

செவ்வாய் ஆரூடம் - முற்றிற்று.

புதன் 1 - வது ஜாமம் - கிழக்கு.

நம்பியே யொருவனுக்கு நன்மைஞ் செய்யவெண்ணி
இன்பமாய் கருத்தில்நீயும் யெண்ணின யெண்ணஞ்சாயும்
தப்பிதங் கொள்ளவேண்டாம் கடவுளின் கிருபையுண்டு
வெம்பிய புதன்முதற் ஜாமத்தின் கிழக்காரூடம். 1

புதன் 1 - வது ஜாமம் - தென்கிழக்கு.

மருமனை யாட்டியாலே மாளாத துயரப்பட்டு
தருமனை மக்கள்சுற்றம் தாய்க்குமே பகையுமானாய்
வருமையாய் உனக்குமெய்யில் வாட்டுது பிணியுமிப்போ
குறையதாய் புதன்முதற் ஜாமந்தென் கிழக்காரூடம். 2

புதன் 1 - வது ஜாமம் - தெற்கு.

கன்னியா முனதுபுத்திரி காரிழை யொருத்தியாலே
அன்னித கலகமென்று அகத்துக்குள் விளையுதிப்போ
மன்னிய வதினால்நீயும் மனமது வாடுகின்றாய்
பின்னிய புதன்முதற் ஜாமத்தின் தெற்காரூடம். 3

புதன் 1 - வது ஜாமம் - தென்மேற்கு.

அங்கமும் வளர்க்கநீயும் அருந்துயர் படுகுராய்நீ
பங்கமாய் செய்தவேலை வழியதாய் நேர்ந்துப்போக்க
சங்கையு மகலயெட்டு திங்களுங் கழிக்கவேண்டும்
பொங்கமாம் புதன்முதற் ஜாமந்தென் மேற்காரூடம். 4

புதன் 1-வது ஜாமம்—மேற்கு

மைந்தனை கல்விதன்னில் மகிழுடன் வைக்கவென்று
சிந்தையில் நினைத்தவேலை ஜெயமுடன் பலிதமாகும்
பந்தமாய் போனசொத்தும் பலிதமதாகக்கூடும்
விந்தையாம் புதன்முதற் ஜாமத்தின் மேற்காருடம். 5

புதன் 1-வது ஜாமம்—வடமேற்கு

வருத்தமாய் மேற்கிருந்து வருகுமோர் சேதிதானும்
திருத்தமாய் வெளியூர்போன தமையனும் வந்துசேர்வார்
பெருத்ததோர் வழக்குவெல்லும் பேசிய பொருள்கைசேரும்
கருத்துள புதன்முதற் ஜாமம்வட மேற்காருடம். 6

புதன் 1-வது ஜாமம்—வடக்கு.

குடும்பத்தில் கலகப்பட்டு குறவதாய் தானும்போ
படுந்துயர் மெத்தவுண்டு பரிவுடன் பொருளுந்தோற்று
இடும்பதாய் மனைவியாலே யித்தனை விளைந்துபோச்சு
தடும்புதன் முதற்ஜாமத்தின் தானுவட வடக்காருடம். 7

புதன் 1-வது ஜாமம்—வடகிழக்கு

களவது வொன்றுபோயி கலங்கிநீ வாடுகின்றாய்
உளவதா பொருவனாலே உற்றதோர் பொருளும்போச்சு
வளமதா பொருக்காலுந்தான் வாராது யில்லைசொன்னேன்
தளமதாய் புதன்முதற் ஜாமம்வட கிழக்காருடம், 8

புதன் 2-வது ஜாமம்—கிழக்கு.

போகவே வெளியூருக்கு பிரியமுங் கொண்டுநீயும்
தோகையா ளோடுசண்டை தொடுத்துநீ வருகுறாய்நீ
ஆகவே போரவெண்ண மதனைநீ விலக்கிப்போடும்
பாகமே புதன்ரெண்டாம் ஜாமத்தின் கிழக்காருடம். 9

புதன் 2-வது ஜாமம்—தென்கிழக்கு.

உன்னுட கிரகில்பல்லி விழுந்ததோர் பலனீயும்
தன்னுள மறியவென்று காணது வென்னைக்கேட்டாய்
பின்வரிய தொன்றுமில்லை பேசிநீ கலையாதே
நன்னிய புதன்ரெண்டாம் ஜாமந்தென் கிழக்காருடம். 10

புதன் 2-வது ஜாமம்—தெற்கு.

யீனமா மொருவனோடு யிருந்துநீ நேசஞ்செய்தாய்
ஏனமா யவன்தன்னாலே யுனக்கொரு கெடுதிபாச்சு
காணவே யவன்தன்நேசம் கடக்கவே தள்ளிப்போடு
தானெனும் புதன்ரெண்டாம் ஜாமத்தின் தெற்காருடம். 11

புதன் 2-வது ஜாமம்—தென்மேற்கு.

பணியது மனையாளுக்கு பக்ஷமாய் செய்யநீயும்
துணிவுடன் வொருவன்கையில் தானது கொடுத்துவிட்டாய்
பணமது வந்துசேரும் பயப்பட வேண்டாஞ்சொன்னேன்
குணமதாய் புதன்யிரண்டாம் ஜாமந்தென் மேற்காருடம். 12

புதன் 2-வது ஜாமம்—மேற்கு

உரவது பெண்ணைகூடும் உன்மன வேஷ்டைதீரும்
பிரியமாய் உத்தியோகம் பலித்திடு முனக்குமிப்போ
கரியதோர் மனிதன்செய்யுங் கலகமுந் தொலைந்துபோகும்
அறியவே புதன்ரெண்டாம் ஜாமத்தின் மேற்காருடம். 13

புதன் 2-வது ஜாமம்—வடமேற்கு.

மங்கள மாகவேதான் மணமது கூடுமப்பா
தங்கிய வரவொபாலே தானது வந்துகூடும்
சங்கையு மினிமேலில்லை சாத்துரிய மாகவாழ்வாய்
இங்கித புதன்ரெண்டாம் ஜாமம்வட மேற்காருடம். 14

புதன் 2-வது ஜாமம்—வடக்கு.

வேந்தரின் உதவியாலே வெகுசுக மாகவாழ்வாய்
நேர்ந்ததோர் பூமியோடு புத்திர லாபமுண்டு
தேர்ந்துமே குடும்பவிர்த்தி தேசத்தில் கீர்த்தியோங்கும்
ஆர்ந்ததோர் புதன்ரெண்டாம் ஜாமத்தின் வடக்காருடம். 15

புதன் 2-வது ஜாமம்—வடகிழக்கு.

கைவிட்டுப் போனசொத்து களிக்கவே வந்துகூடும்
மெய்யினில் கொண்டநோயும் மருந்தினால் தீருமப்பா
பையவே யுன்கீர்த்தி பாரினில் பெருகிவாழும்
துய்யவே புதன்ரெண்டாம் ஜாமம்வட கிழக்காருடம். 16

புதன் 3-வது ஜாமம்--கிழக்கு.

போரதோர் லேலைசாயும் பெரியவ ருதவியுண்டு
வீரிய கிரிதிமூலே வருகுமோர் நல்லவார்த்தை
கூறிய கொள்கையெல்லாங் குணமதாய் பலனைக்கூட்டும்
சீரிய புதன்மூன்றும் ஜாமத்தின் கிழக்காருடம். 17

புதன் 3-வது ஜாமம்--தென் கிழக்கு.

பாட்டனர் சொத்துக்காக பரிந்துநீ வழக்கெடுக்க
நாட்டமா யொருவன தன்னை நம்பியே யிருக்கின்றாய்நீ
வாட்டமா யதுவுமேதான் வழக்கமாய் முடியும்பாரு
தாட்டியாம் புதன்மூன்றும் ஜாமந்தென் கிழக்காருடம். 18

புதன் 3-வது ஜாமம்--தெற்கு.

வியாபார மொன்றுசெய்ப வேணவே மனதிற்கொண்டு
நேயமா யொருவன்தன்னை நம்பியே யிருக்கின்றாய்நீ
காயமா யதுவுமேதான் கருத்தின்போல் பலிதமாகும்
தோயவே புதன்மூன்றும் ஜாமத்தின் தெற்காருடம். 19

புதன் 3-வது ஜாமம்--தென் மேற்கு.

இருக்குமோர் மனையிலேதான் யிடருக ளாகுதிப்போ
பெருக்கவே யந்த ட்டை பேர்ந்துநீ போகவேண்டும்
தருக்கவே திங்கள்மூன்றில் தானது பலிதமாகும்
உரைக்கவே புதன்மூன்றும் ஜாமந்தென் மேற்காருடம். 20

புதன் 3-வது ஜாமம்--மேற்கு.

ஆடையு மொன்றுதானு மருங்கல வாகப்போச்சு
தேடியே மனஞ்சலித்து தானது விட்டாய்நீயும்
கூடியே வாரதில்லை குறித்தது வெளியாய்ப்போச்சு
நாடியே புதன்மூன்றும் ஜாமத்தின் மேற்காருடம். 21

புதன் 3-வது ஜாமம்--வடமேற்கு.

கொண்டதோர் கோவினாலே குணமது பெருவாய்நீயும்
பண்டுடன் பலிதமாகி பாக்கியம் வந்துகூடும்
விண்டுவி னருளினாலே வேணதோர் புத்திரருண்டு
கண்டிடு புதன்மூன்றும் ஜாமம்வட மேற்காருடம். 22

புதன் 3-வது ஜாமம்—வடக்கு.

விரைத்தமேதோர் வினைகளெல்லாம் வேணவே பலிதமாகும்
கருத்துடன் கொண்ட பெண்ணும் கையது வந்துகூடும்
பொருந்தமேதோர் மனிதராலே புகழது உனக்குண்டாகும்
திருத்தமாய் புதன்மூன்றாம் ஜாமத்தின் வடக்காரூடம். 23

புதன் 3-வது ஜாமம்—வடகிழக்கு.

நாடியே யொருவர்தன்னை நம்பியே போரமில்லை
கூடியே வாதிலில்லை குருக்கொரு கலகமுண்டு
தேடியே பொருளுனக்கு தானது விரையமாகும்
நீடிய புதன்மூன்றாம் ஜாமம்வட கிழக்காரூடம். 24

புதன் 4-வது ஜாமம்—கிழக்கு.

பொருளது வொருவர்க்கீந்து புலம்பியே தவிக்குராய்நீ
அருளுடன் வந்துகூடும் அடுத்தமேதோர் வேந்தராலே
தருமென வுனக்குச்சன் தன்னுட வுதவியுண்டு
மருமென புதன்னாலாம் ஜாமத்தின் கிழக்காரூடம். 25

புதன் 4-வது ஜாமம்—தென்கிழக்கு.

கன்னிய ரொருவராலே கலகமு மிகவுண்டாகி
மன்னனின் றலைவிப்போ மாளாத துயருண்டாச்சு
இன்னமும் திக்கொன்று மேகவே சுகமுண்டாகும்
உன்னித புதனாலாம ஜாமம்தென் கிழக்காரூடம். 26

புதன் 4-வது ஜாமம்—தெற்கு.

கள்ளரால் திங்குநேர்ந்து கைப்பொருள் விரையப்பட்டாய்
உள்ளமேதோர் மனைவிபற்கு உருக்கது பிணியும்மெய்யில்
தெள்ளிய பணிகளாலே தானது தீரவுண்டும்
வின்றேயோர் புதன்னாலாம் ஜாமத்தின் தெற்காரூடம். 27

பதன் 4-வது ஜாமம்—தென்மேற்கு.

புத்திரர் அஞ்சிற்றானும் பெண்மூன்று பிள்ளைரெண்டு
சித்தமா யுனக்குதானும் செழிப்புடன் பிறக்குமப்பா
உத்தமேதோர் பந்துவாலே உதவியும் வேணதுண்டு
பத்திய புதன்னாலாம் ஜாமத்தின் மேற்காரூடம். 28

புதன் 4-வது ஜாமம்—மேற்கு.

பந்துவோர் பகையினாலே பதிவிட்டுப் போகநீயும்
சிந்தையில் பெண்ணாங்கொண்டு சினைகளை யடுத்தாயிப்போ
நிந்தையா மவனைநீயும் நம்பியே போகவேண்டாம்
தொந்தமாம் புதனாலாம் ஜாமத்தின் மேற்காருடம். 29

புதன் 4-வது ஜாமம்—வடமேற்கு.

மனைவியின் மொழிவகைப்பி யடுத்திடப் பகையுமாறாய்
யிளமதாய் சொற்றையெல்லா மிகரத்துநீ பரிவாகித்தாய்
கனமது படவேல்பங் கழிக்கவே சுகமுண்டாகும்
நினைவதாய் புதனாலாம் ஜாமம்வட மேற்காருடம். 30

புதன் 4-வது ஜாமம்—வடக்கு.

வதுவையின் மனையிலாகும் வரியதோர் கேசங்கூடும்
நிதிமிகப் படைத்துவாழ்வாய் நேரிழை தனாலுநீயும்
சதிபது செய்தோரெல்லாம் சார்ந்துமே யுறவாவார்கள்
துதிபெற புதனாலாம் ஜாமத்தின் வடக்காருடம். 31

புதன் 4-வது ஜாமம்—வடகிழக்கு.

இருக்குமோர் மனையைவிட்டு யேகநீ யெண்ணமுற்றாய்
தருக்கமாய் துயருண்டாகத் தானத்தை விடவேவேண்டாம்
பெருக்கவே ரெண்டுதிங்கட் போகவே சுகமுண்டாகும்
நிரைக்குமோர் புதனாலாம் ஜாமம்வட கிழக்காருடம். 32

புதன்கிழமை ஆருடம் - முற்றிற்று.

வியாழம் 1-வது ஜாமம் - கிழக்கு.

ஊழிய னொருவனாலே யுனக்கொரு கெடுதிநேர்ந்து
கோழையாய் பொருளுந்தோற்று குழப்பமும் படுகின்றாய்நீ
தாழவே யதனைநீங்கில் தக்கதோர் கீர்த்தியுண்டாம்
வாழவே குருவின்முந்த ஜாமத்தின் கிழக்காருடம். 1

வியாழம் 1-வது ஜாமம்—தென் கிழக்கு.

அனைவர்க்கும் பகையதாகி அலச்சலும் படுகுறாய்நீ
மனையிலும வழக்குநேர்ந்து மாறாத துயரமுண்டு
வினையிது வகலவெட்டு திக்கரும் போகவேண்டும்
சனியென வியாழன்முந்தி ஜாமந்தென் கிழக்காரூடம். 2

வியாழம் 1-வது ஜாமம்—தெற்கு

கூறிய பெண்ணுனக்கு குறவதாய் வந்துகூடும்
வீரிய மாகப்பேசும் வேண்டிய வுறவோரெலலாம்
காரிய மாகத்தானே கையது விட்டுப்போவார்
பாரினில் வியாழமுந்த ஜாமத்தின தெற்காரூடம். 3

வியாழம் 1-வது ஜாமம்—தென மேற்கு

பட்டதோர் துன்பமெல்லாம் பரிவுடன துலைந்துபோச்சு
தொட்டதோர் நல்லகாலம துணையது மிகவுண்டாகும்
விட்டதோர் நேசர்தன்னை வரிந்தியே கூடுவாய்நீ
பொட்டன வியாழன்முந்தி ஜாமந்தென் மேற்காரூடம். 4

வியாழம் 1-வது ஜாமம்—மேற்கு.

உன்னுட கெருவத்தாலே யொருவரை மதித்திடாமல்
தன்னுட பொருடகளெல்லாந் தானென தோர்த்துவிட்டு
மன்னிய துயரங்கொண்டு மனமது வாடுகின்றாய்
பின்னிய வியாழம்முந்த ஜாமத்தின் மேற்காரூடம். 5

வியாழம் 1-வது ஜாமம்—வடமேற்கு.

எப்போது வாழ்வுநமக் கிப்படி யிருக்குமென்று
ஒப்பிலா சோதனைபெல்லா மூலகோற்கு தாரவார்த்தாய்
கொப்பன வுனக்குமிப்போ கஷ்டமும் விளைந்துபோச்சு
செப்பிய வியாழனமுந்த ஜாமத்தின் வடமேற்காரூடம். 6

வியாழம் 1-வது ஜாமம்—வடக்கு

இன்னமுங் கொஞ்சகாலம் யேகிடிற் சொல்லக்கேளு
தன்னிக ரகத்தானும் தனம்பெற வாழ்வுண்டாகும்
உன்னித மாகவல்லோ உரவினர் வந்துசேர்வார்
பொன்னெனும் வியாழமுந்த ஜாமத்தின் வடக்காரூடம். 7

வியாழம் 1 - வது ஜாமம்—வட கிழக்கு.

வழக்கது வொன்றுவந்து வாட்டுது மெய்யிலுன்னை
பிழைத்திடும் பூமிதானும் போச்சுது கையைவிட்டு
செழித்திட யின்னங்கொஞ்ச ஞளினில் சுகமுண்டாகும்
தழைத்திடும் வியாழன்முந்த ஜாமத்தின் வடகிழக்காலே. 8

வியாழம் 2 - வது ஜாமம்—கிழக்கு.

அக்கினி யாலேதுன்பம் அவதியும் பட்டுமிப்போ
துக்கமா யுனக்குமெய்யில் துலையாத விபாதிபாச்சு
பக்குவ மானவுந்தன் பாரியா ளுதவியுண்டு
மிக்கவே குருவிரண்டாம் ஜாமத்தின் கிழக்காரூடம். 9

வியாழம் 2 - வது ஜாமம்—தென் கிழக்கு.

மட்டிலா கடனேப்பட்டு மனமது வாடுகின்றாய்
அட்டமச் சனியனுன்னை அவஸ்தைகள் படுத்திவாரான்
விட்டிட யின்னம்ரெண்டு வாண்டது போகவேணும்
கெட்டியாய் குருவிரெண்டாம் ஜாமங்தென் கிழக்காரூடம். 10

வியாழம் 2 - து ஜாமம்—தெற்கு.

அரசரால் வுதவியுண்டு அடுத்திடு மூத்தியோகம்
நிறையுள வுனதுநேசன் சொல்லைநீ நம்பவேண்டாம்
வரிசையா யின்னமொரு திங்கட்குள் வசமேயாகும்
குறையிலா குருவிரெண்டாம் ஜாமத்தின் தெற்காரூடம். 11

வியாழம் 2 - வது ஜாமம்—தென் மேற்கு

போரதோர் வேலைநீயும் பெண்ணைத குறித்துமிப்போ
சீரதாய் வந்துகூடும் சுகியுற வாகவேண்டும்
கூறதா யுனக்கொருத்தி குடும்பத்தில் கலகியுண்டு
நேரதாய் குருவிரெண்டாம் ஜாமங்தென் மேற்காரூடம். 12

வியாழம் 2 - வது ஜாமம்—மேற்கு.

மனையது வொன்றுகட்ட மனதினில் யெண்ணங்கொண்டாய்
சனியன்போ லொருவனலே தானது வழக்குண்டாச்சு
வினையது தள்ளிப்போடு விர்த்தியு மாகாதப்பா
சனியென குருவிரெண்டாம் ஜாமத்தின் மேற்காரூடம். 13

வியாழம் 2-வது ஜாமம்—வடமேற்கு.

கன்னியரு லே யுன்மேல் கலகமு மொன்றுதோன்றி
அன்னித மாகவிப்போ அபகேடு விளைந்துபோச்சு
மன்னிய வொருவனாலே மனமது வாடுகின்றாய்
உன்னித குருவிரெண்டாம் ஜாமத்தின் வடமேற்காரூடம். 14

வியாழம் 2-வது ஜாமம்—வடக்கு.

கைத்தொழில் புரியும்வேலை கவர்ந்ததே போனதுண்டு
வைத்தியக் காரனைப்போல் பதைத்துநீ வாடுகின்றாய்
வழித்திய வெட்டுதிங்கள் வளம்பெறக் கழித்துப்போடு
செழித்திடுங் குருவிரெண்டாம் ஜாமத்தின் வடக்காரூடம். 15

வியாழம் 2-வது ஜாமம்—வட கிழக்கு.

மெத்தவே சிறுமைப்பட்டாய் மேதினி தன்னில்நீயும்
உத்தமோ ருகவியாக வொருவரு மில்லைக்காணும்
சித்தமா யுனக்குபின்னம் சென்றிட மூன்றுதிங்கள்
உத்தம குருவிரெண்டாம் ஜாமம்வட கிழக்காரூடம். 16

வியாழம் 3-வது ஜாமம்—கிழக்கு.

சேதியும் வடக்கிருந்து செழிக்கவே யொன்றுகாண்பாய்
நீதியா யுத்தியோகம் நிலைபட வருதுஞ்சொன்னேன்
ஆதியா யதினால்கீர்த்தி யனைவரும் புகழோனுவாய்
ஓதிய வியாழம்மூன்றும் ஜாமத்தின் கிழக்காரூடம். 17

வியாழம் 3-வது ஜாமம்—தென் கிழக்கு.

செப்பமாய் பகைந்துயர்கள் சொல்லொரு னுவாகாது
தப்பித மாகவிப்போ தவர்ந்தது உத்தியோகம்
கொப்பென சினேகத்தாலே குறையது யகலுஞ்சொன்னேன்
ஒப்புள வியாழம்மூன்றும் ஜாமத்தின் தென்கிழக்காரூடம். 18

வியாழம் 3-வது ஜாமம்—தெற்கு.

யாத்திரை போவதற்கு யன்பது கொண்டுநீயும்
நேர்த்தியாய் நேசனோடு நாட்டமுங் கொண்டாயிப்போ
காத்திர மாகப்போவாய் கலகமு மொன்றுமில்லை
நேர்த்தியாம் வியாழம்மூன்றும் ஜாமத்தின் தெற்காரூடம். 19

வியாழம் 3-வது ஜாமம் - தென்மேற்கு.

பாலகன் வொருவனிப்போ பரிவுடன் வீட்டைவிட்டு
கோலமாய் வெளியூருக்கு கோபத்தால் தாண்டிவிட்டான்
சீலமா யவனிருக்கும் திசையது தென்கிழக்கு
சாலவே வியாழம்மூன்றும் ஜாமத்தென் மேற்காருடம். 20

வியாழம் 3-வது ஜாமம்—மேற்கு.

பின்னியே வுனக்கோர்வியாதி பிடித்துமே வாட்டுதிப்போ
என்னமாய் விளைந்ததென்றால் யேற்றதோர் ஸ்திரீயினாலே
மன்னிய பின்னம்ரெண்டு மாதத்தில் சுகமுண்டாகும்
உன்னிய வியாழம்மூன்றும் ஜாமத்தின் மேற்காருடம். 21

வியாழம் 3-வது ஜாமம்—வடமேற்கு.

அன்னையுந் தந்தைக்கிப்போ வாகாத விரோதப்பட்டு
தன்னுட மதியுங்கெட்டு தன்மனை பேச்சைக்கேட்டு
உன்னுட தொழிலும்விட்டு உளமது வாடுகின்றாய்
மன்னிய வியாழம்மூன்றும் ஜாமம்வட மேற்காருடம். 22

வியாழம் 3-வது ஜாமம்—வடக்கு.

ஆலையந் தனக்குமேக வன்பது கொண்டுமேயும்
சீலமாய் பொருளுஞ்சேர்த்து திருடற்குப் பரிகொடுத்தாய்
மேலவே யதுவுனக்கு தான்வரப் போரதில்லை
தாலமே வியாழமூன்றும் ஜாமத்தின் வடக்காருடம். 23

வியாழம் 3-வது ஜாமம் - வடகிழக்கு.

உன்னுட மனைவியாலே உனக்கொரு தீங்குமுண்டாய்
மன்னரின் சமுகம்சென்று மாளாத துயரப்பட்டாய்
அன்னிய மாதராலே அனுகூல மாகுதிப்போ
தன்னிய வியாழம்மூன்றும் ஜாமம்வட கிழக்காருடம். 24

வியாழம் 4-வது ஜாமம் - கிழக்கு.

போனது பொருளுமொன்று புலம்பியே வாடுகின்றாய்
ஊனமா மதுகையில் உற்றது சிக்கிப்போச்சு
தானது வருவதற்கு தடையில்லை வாரத்துக்குள்
மானெனும் வியாழம்நாலும் ஜாமத்தின் கிழக்காருடம். 25

வியாழம் 4-வது ஜாமம் - தென்கிழக்கு.

பாரினில் ஒருவனாலே படுந்துயர் மெத்தவுண்டு
வீரிய னவனுக்கு வெகுநாளை விரோதமாவன்
சீரியே யவனையும் சற்றேனும் நம்பவேண்டாம்
கூறிய வியாழம்நாலாம் ஜாமத்தென் கிழக்காரூடம். 26

வியாழம் 4-வது ஜாமம் - தெற்கு.

பள்ளியில் வைக்கநன்று பலகலை யோதனன்று
தெள்ளிய வியாபாரங்கள் தானது செய்யநன்று
உள்ளதோர் உத்தியோகம் உரிதிபாய் செய்யநன்று
விளனுமோர் வியாழம்னுலாம் ஜாமத்தின தெற்காரூடம். 27

வியாழம் 4-வது ஜாமம் — தென்மேற்கு.

பங்காளி வழக்கினாலே பாரவுன் பொருளுந்தோற்று
யேங்கியே வாடிமெத்த ஏக்கமும் படுகிறாய்நீ
தாங்கிய பந்துவெல்லாம் தானது பகையதாச்சு
ஓங்கிய வியாழம்நாலாம் சாமத்தென் மேற்காரூடம். 28

வியாழம் 4-வது ஜாமம் - மேற்கு.

உன்னியே விவாகஞ்செய்ய உகந்துநீ கேட்டபெண்ணும்
நண்ணியே வழக்குவொன்று நாட்டமாய் நடந்ததிப்போ
எண்ணியே வந்தக்கன்னி யிசைந்திடப் போரதில்லை
கண்ணிய வியாழம்நாலாம் ஜாமத்தின் மேற்காரூடம். 28

வியாழம் 4-வது ஜாமம் - வடமேற்கு

தமயன்மேல் மனதுநொந்து தான்வெளி யூருபோக
சமயமும் பட்டுநீயுஞ் சஞ்சலப் படுகுறாய்நீ
நிமையினில் பலனுனக்கு நேரதாய் வந்துகூடும்
உகமையாய் வியாழம்நாலாம் ஜாமம்வட மேற்காரூடம். 30

வியாழம் 4-வது ஜாமம் - வடக்கு.

கனத்ததோர் பேரஞ்செய்ய காணவே மூவர்கூடி
நினைத்தது வதுவுமிப்போ நேர்ந்திடும் நஷ்டந்தானும்
மனத்துட னின்னமெட்டு மாதமுஞ் சென்றால்கூடும்
இனத்துடன் வியாழம்நாலாம் ஜாமத்தின் வடக்காரூடம். 31

வியாழம் 4-வது ஜாமம்—வடகிழக்கு.

இல்லத்தால் வோர்வழக்கு யாகுமே தோன்றியிப்போ
மல்லது பட்டுநீயும் மனமது வாடுகின்றாய்
வல்லமை யாகபட்ச மாகநீ கெலித்துக்கொள்வாய்
சொல்லிய வியாழம்நாலாம் ஜாமம்வட கிழக்காரூடம். 32

வியாழம் ஆரூடம் - முற்றிற்று.

வெள்ளி 1-வது ஜாமம்—கிழக்கு.

குறவன்றி வாழ்வுமுண்டு குறித்தது ஜெபமேயாகும்
பிரியமா யுனக்குநல்ல பிரபுவின் நேசமுண்டு
குருமொழி போலவல்லோ கூடிய லாபஞ்சேரும்
மருவிய வெள்ளிமுதற் ஜாமத்தின் கிழக்காரூடம். 1

வெள்ளி 1-வது ஜாமம்—தென் கிழக்கு.

நன்மையாம் யோசனையை நாடியே யிருக்குறாய்நீ
வன்மமா யதுவுனக்கு வருத்தமும் விளையுமப்பா
தன்மையாய் கொஞ்சகாலந் தானே சுகமுண்டாகும்
உண்மையாம் வெள்ளிமுதற் ஜாமந்தென் கிழக்காரூடம். 2

வெள்ளி 1-வது ஜாமம்—தெற்கு.

அந்தணன் வொருவன்கையா லரும்பொருள் தன்னைதோற்று
சிந்தையுங் கலங்கியிப்போ சிதறியே வாடுகின்றாய்
நிந்தையா மிதுகளெல்லாம் நீங்கிடும் பயப்படாதே
விந்தையாம் வெள்ளிமுதற் ஜாமத்தின் தெற்காரூடம். 3

வெள்ளி 1-வது ஜாமம்-தென்மேற்கு.

கூட்டுற வாகநீயுங் கூடிவியா பாரஞ்செய்ய
வட்டமா யொருவனோடு வாய்மொழி கூறிவந்தாய்
நாட்டமா யதுவுமிப்போ நடப்பது திண்ணமாகும்
நீட்டிய வெள்ளிமுதற் ஜாமந்தென் மேற்காரூடம். 4

வெள்ளி 1-வது ஜாமம்—மேற்கு.

காரியஞ் சித்திபாகி களிப்புடன் உத்தியோகம்
கூரிய வொருவராலே குணமதாய் வந்துகூடும்
பாரினில் நஷ்டமில்லை பலித்திடு மெடுத்தவேலை
கூரிய வெள்ளிமுதற் ஜாமத்தின் மேற்காரூடம். 5

வெள்ளி 1-வது ஜாமம் வடமேற்கு.

குலத்தினில் பிறந்தகன்னி கொடுந்துயர் பட்டுமிப்போ
நலத்தினில் விரோதமாகி நாடிய பொருளைசோர்ந்தாள்
பலித்திடப் போரதில்லை பக்ஷணீ மறந்துப்போடு
வலுத்ததோர் வெள்ளிமுதற் ஜாமத்தின்வட மேற்காரூடம். 6

வெள்ளி 1-வது ஜாமம்—வடக்கு.

அட்டியில் லாமலிப்போ அடுத்ததோ ரிடத்தில்தானும்
தாட்டியாய் நினைத்தவேலை தானது பலிதமாகும்
கூடியே யொருவனாலே குணமதாய் வாழப்போரும்
நாடிய வெள்ளிமுதற் ஜாமத்தின் வடக்காரூடம். 7

வெள்ளி 1-வது ஜாமம்-வடகிழக்கு.

தவரியே போனசொத்து தானுமே வந்துகூடும்
அவனியில் கீர்த்திமானுய் யாவரு மெச்சவாழ்வாய்
பவமதாய் யுனதுநேசன் பிரிந்தவ னுறவுமாவான்
சுகமதாய் வெள்ளிமுதற் ஜாமம்வட கிழக்காரூடம். 8

வெள்ளி 1-வது ஜாமம்-கிழக்கு.

வருத்தமும் விலகிப்போகும் வான்பொருள் வந்துகூடும்
திருத்தமா யொருவனாலே தானொரு உதவியுண்டு
வருத்தமு மினிமேலில்லை வந்தது நல்லகாலம்
கருத்துள வெள்ளிரெண்டாம் ஜாமத்தின் கிழக்காரூடம். 9

வெள்ளி 1-வது ஜாமம்—தென்கிழக்கு.

தொட்டதோர் தொழிலினாலே தொல்லையு மிகவுண்டாச்சு
இஷ்டமாங் குலதேவதைக்கு யேற்றுவா யொருபூசைதான்
கஷ்டமும் விலகியேவியா பாரமும் பலிதமாகும்
அஷ்டமாம் வெள்ளிரண்டாம் ஜாமந்தென் கிழக்காரூடம். 10

வெள்ளி 2-வது ஜாமம்—தெற்கு.

தோற்றமோர் பொருள்களெல்லாந் துணைவனால் வந்துகூடும்
நேற்றியாய் கிழக்கிருந்து நல்லதோர் சேதிகாணும்
ஆற்றிறப் படாமல்நீயும் அமர்ந்திரு கொஞ்சகாலம்
நேற்றியாம் வெள்ளிரெண்டாம ஜாமத்தின் தெற்காரூடம். 11

வெள்ளி 2-வது ஜாமம்—தென் மேற்கு

ஜெயமது உனக்கேயாகும் சிற்றிடை யொருத்தியாலே
நயமுடன் உத்தியோகம் நாட்குநாள் உயருமப்பா
பயமது இல்லைசொன்னேன் பந்துவை நம்பவேண்டாம்
வயமுரும் வெள்ளிரெண்டாம் ஜாமந்தென் மேற்காரூடம் 12

வெள்ளி 2-வது ஜாமம்-மேற்கு.

பந்துவுக் காகசெய்கை பாலநீ செய்துவாராய்
அந்தமா யுனக்குமிப்போ யதுவொரு கலகமாச்சு
சிந்தையுங் கலங்கிவாடி திகைத்துநீ வாடுகின்றாய்
விந்தையாம் வெள்ளிரெண்டாம் ஜாமத்தின் மேற்காரூடம். 13

வெள்ளி 2-வது ஜாமம்-வடமேற்கு.

வெளியினி லிருந்துசேதி வந்திடும் பயப்படாதே
களிக்கவே மனைவிபிள்ளை கருத்துடன் பெருவாளப்பா
களைக்கவே யுனதுபுத்ரன் தனக்கொரு குறைவுமில்லை
வளித்திய வெள்ளிரெண்டாம் ஜாமத்தின் வடமேற்காரூடம். 14

வெள்ளி 2-வது ஜாமம்—வடக்கு.

அஞ்சியே யொருவருக்கு அடங்கிநீ நடத்திட்டாலும்
வஞ்சனை யாகவந்து வருத்தமும் விளையுதப்பா
துஞ்சிய மூன்றுதிங்கள் தானது துலையவேண்டும்
வஞ்சியே வெள்ளிரெண்டாம் ஜாமத்தின் வடக்காரூடம். 15

வெள்ளி 2-வது ஜாமம்-வடகிழக்கு:

நினைத்ததோர் வேலைசாயும் நாடிய மனிதராலே
தன்னுட தான்னியங்கள் தானது பலிதமாகும்
இனத்தினி லொருவனுண்டு யவனைநீ நம்பவேண்டாம்
மனத்துயர் வெள்ளிரெண்டாம் ஜாமம்வட கிழக்காரூடம். 16

வெள்ளி 3-வது ஜாமம்—கிழக்கு.

விட்டுது யுன்னைதொட்ட வெகுநாளை சனியுமப்பா
மட்டிலா கீர்த்தியோடு மனமது களிக்கவாழ்வாய்
கெட்டியா யின்னம்ரெண்டு வாரமுங் கழிக்கவேண்டும்
இட்டதோர் வெள்ளிமூன்றும் ஜாமத்தின் கிழக்காரூடம். 17

வெள்ளி 3-வது ஜாமம்-தென்கிழக்கு

பெருத்ததோர் யோசனை தான் பண்ணின மனதிதீயும்
வருத்தமு மதினாலுண்டு வஞ்சியுங் கலகஞ்செய்வாள்
கருத்துட னின்னங்கொஞ்சங் காலமுங் கழித்துப்போடு
திருத்தமாம் வெள்ளிமூன்றும் ஜாமந்தென் கிழக்காரூடம். 18

வெள்ளி 3-வது ஜாமம்-தெற்கு.

மனமது வருத்தத்தாலே மருவிய பொருளுநஷ்டம்
கனமுள யில்லில்வொன்று காரிழை கலகமாச்சு
தனமது பாதிபங்கு தான்வரும் பயப்படாதே
இனமதாய் வெள்ளிமூன்றும் ஜாமத்தின் தெற்காரூடம். 19

வெள்ளி 3-வது ஜாமம்-தென்மேற்கு.

நினைத்ததோர் நாளுமெண்ணி நிலைப்பது மேற்கதாகும்
இனத்தினில் பிறந்தகன்னி யதுவுமே பலித்திடாது
சினத்துட னதுவந்தாலும் சீரது வொன்றுமில்லை
கனத்ததோர் வெள்ளிமூன்றும் ஜாமந்தென் மேற்காரூடம். 20

வெள்ளி 3-வது ஜாமம்-மேற்கு.

படுத்ததோர் படுக்கைதன்னில் பாழ்விஷ மொன்றுதீண்டி
அடுத்ததோர் மெய்யில்தானும் அதுபெரும் பிணியதாச்சு
கொடுத்ததோர் அவிழ்தத்தாலே துலைந்திடும் பயப்படாதே
நடத்திய வெள்ளிமூன்றும் ஜாமத்தின் மேற்காரூடம். 21

வெள்ளி 3-வது ஜாமம்-வடமேற்கு.

கன்னியாள் புஷ்பவதி காணவே யாழுள்நன்று
தன்னிக ராகநல்ல தான்மணம் வந்துகூடும்
அன்னிய வெளியூராகும் ஆனதோர் சம்பத்துண்டு
மன்னிய வெள்ளிமூன்றும் ஜாமம்வட மேற்காரூடம். 22

வெள்ளி 3-வது ஜாமம் - வடக்கு.

அணிந்திடும் பணியிலொன்று அகலவே களவுபோச்சு
துணிந்தொரு கன்னிதானும் தானது யெடுத்தாளப்பா
கொணந்தவள் கைகொடுப்பாள் கோதையும் பரியாசமாக
மணந்திகழ் வெள்ளிமூன்றும் ஜாமத்தின் வடக்காருடம். 23

வெள்ளி 3-வது ஜாமம்—வடகிழக்கு.

பூமியுங் கொள்வதற்கு பிரியமாய் மனதிலெண்ணுப்
தாமிச மாகவேதான் தடையாச்சு தமையோனாலே
கேமமா யதின்மேல்கொண்ட நட்டமுந் தள்ளிப்போடு
க்ஷேமமாம் வெள்ளிமூன்றும் ஜாமம்வட கிழக்காருடம். 24

வெள்ளி 4-வது ஜாமம் - கிழக்கு.

பரிசை வார்த்தையாலே பகையது ஒன்றுண்டாகி
வரிசையாய் இராஜாங்கத்தின் வாரது செனறுதானும்
கிரிசையாய் துன்பங்கொஞ்சம் கெடிதியும் சேர்ந்துதப்பா
நிரைசையாம் வெள்ளிநாலாம் ஜாமத்தின் கிழக்காருடம். 25

வெள்ளி 4-வது ஜாமம் - தென்கிழக்கு.

பிழைப்பதை நாடியிப்போ போரதோர் யிடத்திலதானும்
குழப்பமாய் நேருமப்பா கூடியும் வாரதில்லை
செழிப்பதாய் ரெண்டுதிங்கள் சென்றபின் சுகமுண்டாகும்
வழிப்பதாம் வெள்ளிநாலாம் ஜாமந்தென் கிழக்காருடம். 26

வெள்ளி 4-வது ஜாமம் - தெற்கு.

கண்டித மாகநீயும் கருதிய சொல்லைவெல்வாய்
பண்டுடன் கிரகமெல்லாம் பலனது தருகுமிப்போ
கொண்டதோர் மனையாளாலே கூடிப லாபமுண்டு
விண்டிடும் வெள்ளிநாலாம் ஜாமத்தின் தெற்காருடம். 27

வெள்ளி 4-வது ஜாமம் - தென்மேற்கு.

சனியவன் கொடுமையாலே சஞ்சலப் பட்டுநீயும்
கனியது போலேவாடி கலங்கிநீ வெளியூர்சென்றாய்
தனிமையாய் யினிமேல்வாழ்வாய் தானொரு பயமுமில்லை
இனிமையாம் வெள்ளிநாலாம் ஜாமந்தென் மேற்காருடம். 28

வெள்ளி 4-வது ஜாமம்—மேற்கு.

வங்கத்தின் மீதிலேறி வயரது பிழைக்கப்போன
மங்கையும் புருடனோடு மகிட்சிய தாகவிப்போ
சங்கையு மொன்றில்லாமல் தானது வருகுவார்கள்
இங்கித வெள்ளிநாலாம் ஜாமத்தின் மேற்காரூடம். 29

வெள்ளி 4-வது ஜாமம் - வடமேற்கு.

வெள்ளிக்கு எதிராய்நீயும் வீட்டிற்குக் குடிதான்போயி
பிள்ளையை பரிகொடுத்து பொருளையும் தோர்த்துவிட்டாய்
கள்ளமா மந்தவீட்டை கடுகநீ விட்டுப்பேரும்
தெள்ளிய வெள்ளிநாலாம ஜாமம்வட மேற்காரூடம். 30

வெள்ளி 4-வது ஜாமம் - வடக்கு.

மழைபது பெருகவுண்டு மானிலஞ் செழித்துவாழும்
தழுவிய மனைவிபெண்ணை தானவள் பெருவாளப்பா
பழகிய வுறவோரெல்லாம் பட்சம தாகுவார்கள்
அழகிய வெள்ளிநாலாம் ஜாமத்தின் வடக்காரூடம், 31

வெள்ளி 4-வது ஜாமம் - வடகிழக்கு.

பகையினால் வீட்டைவிட்டுப் பரிதேசி போலேநீயும்
வகையது பிசகினாலே வாடியே சோறுகின்றாய்
தகைமையா வீட்டைநாடி தான்போக சுகமுண்டாகும்
உகமையாய் வெள்ளிநாலாம் ஜாமம்வட கிழக்காரூடம். 32

வெள்ளிக்கிழமை ஆரூடம் - முற்றிற்று.

சனி 1-வது ஜாமம் - கிழக்கு.

தெள்ளிய பொருளுஞ்சேரும் திரவிய லாபமுண்டு
கள்ளியா லொருத்தியாலே கவலையும் படுகுராய்நீ
உள்ளத்தின் படியேயின்ன மோர்திக்கட் குள்ளே கூடும்
விள்ளுயோர் சனிபுமுதற் ஜாமத்தின் கிழக்காரூடம். 1

சனி 1-வது ஜாமம்—தென் கிழக்கு.

கலகமு மொன்றுபட்டு கைப்பொருள் விரயமாகி
பலமுள நேசன் தன்னை பகையது செய்தாயிப்போ
நலமில்லை யின்னொர்நேசன் நாடியோன் தன்னைநீக்கு
குலமுள சனிமுதற் ஜாமந்தென் கிழக்காரூடம். 2

சனி 1-வது ஜாமம்—தெற்கு.

நினைத்ததோர் விவாகங்கூடும் நம்பிய மனிதராலே
தனமது கேட்டிடத்தில் தடையிலா தளிப்பார்சொன்னேன்
இனத்தினி லொருவனுண்டு யவனையும் நம்பவேண்டாம்
மனமகிழ் சனியின்முதற் ஜாமத்தின் தெற்காரூடம். 3

சனி 1-வது ஜாமம்—தென்மேற்கு.

பிழைத்திடும் தொழிலிலிப்போ பெருந்துயரொன்றுதோன்றி
செழித்திடும் தொழிலிலிப்போ தானது தவறிப்போச்சு
வழித்திய யின்னொர்வேலை வந்திடும் பயப்படாதே
தழைத்திடும் முதற்ஜாமத்தின் தென்மேற்கி னாரூடந்தான். 4

சனி 1-வது ஜாமம்—மேற்கு

கையினி லிருந்தசொத்தை கடனென கொடுத்துநீயும்
துய்யவே துயரப்பட்டு தொடுத்ததோர் வழக்குமிப்போ
பையவே கெலியாதாலே பாதையும் படுகுறுய்நீ
வைப்பவே சனியின்முதற் ஜாமத்தின் மேற்காரூடம். 5

சனி 1-வது ஜாமம்—வடமேற்கு.

மாடுடன் மனையுமிப்போ மகிகூலிபாய் வந்துகூடும்
தேடிய மேற்குதிக்கு தானது கண்டுகொள்ளு
கூடிய பந்துவாலே குணமது உனக்குண்டாகும்
பாடிய சனிமுதற் ஜாமம்வட மேற்காரூடம். 6

சனி 1-வது ஜாமம்—வடக்கு.

போனதோர் சொத்துதானும் போக்கிடந் தெரிந்திடாமல்
ஈனமாம் பலரைக்கேட்டு யேங்கியே வாடுகின்றாய்
தானமாம் மேற்குதிக்கு தான்போயி யதிர்துபோச்சு
ஊனமாம் சனியின்முதற் ஜாமத்தின் வடக்காரூடம். 7

சனி 1-வது ஜாமம்—வடகிழக்கு.

மனைவியோ டின்னுமுள்ள மற்றவர் பகையுமாகி
தனிமையாய் நீயுமிப்போ தவித்துமே வாடுகின்றாய்
இனிமையா யைந்துதிங்க ளேகபின் சுகமுண்டாகும்
வினியென்னுஞ் சனிமுதற் ஜாமம்வட கிழக்காரூடம். 8

சனி 2-வது ஜாமம் - கிழக்கு.

பலித்திடும் வியாபாரங்கள் பாக்கிய மிகவுண்டாகும்
செலித்திடும் எதிரிசண்டை கீர்த்தியு மிகவுண்டாகும்
துலைத்திடும் கெட்டசெயலை துணைவனை நம்பவேண்டாம்
நிலைத்திடும் சனியன்ரெண்டாம் ஜாமத்தின கிழக்காரூடம். 9

சனி 2-வது ஜாமம் தென்கிழக்கு.

வெளியூரி னுசைக்கொண்டு வேணதோர் பொருளுந்தோற்றாய்
இளகிய வொருவனாலே யாவுமே விரையமாச்சு
தனமதில் பவன்நேசம தன்னைநீ நீக்கிப்போடு
வளமுள சனியின்ரெண்டாம் ஜாமத்தென் கிழக்காரூடம். 10

சனி 2-வது ஜாமம்—தெற்கு.

விட்டதோர் வேலைதானும் வந்திடு முனக்குமிப்போ
பட்டதோர் கஷ்டமெல்லாம் பான்கண்ட பனிபோல்நீங்கும்
துஷ்டனை முனைகெடுத்தோன் துணைகொண்டு உளவதாவான்
விட்டதோர் சனியின்ரெண்டாம் ஜாமத்தின் தெற்காரூடம்.

சனி 2-வது ஜாமம்—தென் மேற்கு.

கலியாணங் கூடுமப்பா கன்னியாள் பந்துக்குள்ளே
சலியாம வாழ்வுமுண்டு சார்ந்திடும் பூமிலாபம்
தலைவினி லிருக்குமுந்தன் துணைவன்தன் னுதவியாலே
கலமுள சனியின்ரெண்டாம் ஜாமத்தென் மேற்காரூடம். 12

சனி 2-வது ஜாமம்—மேற்கு.

மூன்றுநாள் வருடமாக மாளாத கஷ்டத்தோடே
தோன்றிய பொருளுந்தோற்று துணைவனும் பகையதாகி
தான்றியே தேசஞ்சுற்றி தானுமே வந்தாயப்பா
நீன்றதோர் சனியும்ரெண்டாம் ஜாமத்தின் மேற்காரூடம். 13

சனி 2-வது ஜாமம்—வடமேற்கு.

போரமேதோர் வேலைசாயும் பிடிப்புடன் பலிதமாகும்
சீரதா யொருவராலே சித்திக்கும் பயப்படாதே
கூரதா யொருவர்பேச்சை கொண்டிட வேண்டாமப்பா
நேரதாய் சனியின்ரெண்டாம் ஜாமம்வடமேற் காரூடம். 14

சனி 2-வது ஜாமம்—வடக்கு.

நம்பியேபகையால்நீயும் நாளுமே பொருளைதோற்றாய்
வெம்பியே உனக்குகண்ட வியாதியும் துலைந்துப்போச்சு
நமபியே வெளியூர்போனால் நலந்தரும்லாபமுண்டு
தெம்புள சனியின்ரெண்டாம் ஜாமத்தின் வடக்காரூடம். 15

சனி 2-வது ஜாமம்—வடகிழக்கு.

கோரிய மனைக்குயேக குற்றமு மொன்றுமில்லை
வீரிய மாகவாழ்வாய் விளங்கிய புத்திரரோடு
சீரிய கிரகமெல்லாம் சித்திபாய் பலனைக்கூட்டும்
கூரிய சனியின்ரெண்டாம் ஜாமத்தின் வடகிழக்காரூடம். 16

சனி 3-வது ஜாமம்—கிழக்கு.

யாத்திரை போவதற்கு அன்பது கொண்டாய்நீயும்
பூர்த்தியாய் போகநல்ல புகழது உனக்குண்டாகும்
கீர்த்திபா யுனையடுத்த நேசனை கைவிடாதே
பார்த்திடும் சனியின்மூன்றும் ஜாமத்தின் கிழக்காரூடம். 17

சனி 3-வது ஜாமம்—தென்கிழக்கு.

பாலனை தேடிநீயும் பரதவித் தலைகுறாய்நீ
சீலமா யவனுந்தெற்கே சேர்ந்திட்டான் பந்துவண்டை
கோலமா யவனுமின்னம் வாரத்துள் வந்துசேர்வான்
சாலமாய் சனியுமூன்றும் ஜாமததின் தென்கிழக்காரூடம். 18

சனி 3-வது ஜாமம்—தெற்கு.

கூடிய விவாகமிப்போ குருக்கதாய் தடையதாச்சு
நாடியோர் கன்னியாலே நடந்தது கலக்கதாலும்
நீடிய திங்கள்ரெண்டு சென்றபின் மேலேகூடும்
பாடிய சனியுமூன்றும் ஜாமத்தின் தெற்காரூடம். 19

சனி 3-வது ஜாமம்—தென்மேற்கு.

களவது போனசொத்து காண்பது நிருசையாகும்
உளவதா யொருவனுண்டு உன்னுட பந்துவாகும்
வளமதா யதுவுமிப்போ வாராது யில்லைசொன்னேன்
தளமதில் சனியுமூன்றும் ஜாமந்தென் மேற்காரூடம். 20

சனி 3-வது ஜாமம்—மேற்கு.

எவ்விடம் சென்றிட்டாலு மிடியதாய் நேருதிப்போ
அவ்விய மாகவிப்போ அலச்சலும் படுகிறாய்நீ
ஒவ்விய திங்களொன்று ஒழியபின் சுகமுண்டாகும்
மௌவிய சனியுமூன்றும் ஜாமத்தின் மேற்காரூடம். 21

சனி 3-வது ஜாமம்—வடமேற்கு

வந்ததோர் பிணியிற்குற்றம் வகைபது தெரிந்திடாமல்
சிந்தையுங் கலங்குறாய்நீ தெய்வத்தின் குற்றமாகும்
சொந்தமாம் தனிகைக்ககை தானது தீருஞ்சொன்னேன்
விந்தையாஞ் சனியுமூன்றும் ஜாமம்வட மேற்காரூடம். 22

சனி 3-வது ஜாமம்—வடக்கு.

பிறந்திடும் பிள்ளைநன்றும் பெரியவ ருதவியுண்டாம்
சிறந்திடும் உத்தியோகம் சேரவே பந்துகூடும்
துறந்தவுன் பொருள்களெல்லாந் தானுமே வந்துகூடும்
குறைந்திடுஞ் சனியுமூன்றும் ஜாமத்தின் வடக்காரூடம். 23

சனி 3-வது ஜாமம்—வடகிழக்கு.

கோதையாள் விசனமொன்று கொல்லுது வுனக்குமிப்போ
பாதகி செய்தமோசம் பணமெலாம் விரையமாச்சு
நீதியா மெட்டுதிங்கள் நடந்தபின் சுகமுண்டாவும்
சோதியாம் சனியின்மூன்றும் ஜாமம்வட கிழக்காரூடம். 24

சனி 3-வது ஜாமம்—கிழக்கு.

அஷ்டமச் சனியினாலே அரும்பொருள் தன்னைத்தோத்தாய்
இஷ்டனை சுகைத்துக்கொண்டு யேகினாப் வடக்குநீயும்
துஷ்டரி னுறவதாலே துன்பமாய் வந்துசேர்ந்தாய்
கஷ்டமாம் சனியுகாலாம் ஜாமத்தின் கிழக்காரூடம். 25

சனி 4 - வது ஜாமம்—தென் கிழக்கு.

வர்த்தகம் விஷயந்தன்னில் வருகுதே நஷ்டமிப்போ
சரத்தினால் லொருவனோடு சண்டையு மெத்தவுண்டு
கருத்தினு லவனைவெல்ல கணக்கொரு வாண்டுசெல்லும்
திருந்தமாம் சனியும்நாலாம் ஜாமந்தென் கிழக்காரூடம். 26

சனி 4 - வது ஜாமம்—தெற்கு

மைந்தன்மேல் கோபமாகி மனமது கலங்குகின்றாய்
சொந்தவுன் பந்துவாகும் சொல்புத்தி கேட்டுவாரான்
நிந்தையாய் சனியவற்கு நிர்குது பாதந்தன்னில்
தொந்தமாம் சனியும்நாலாம் ஜாமத்தின் தெற்காரூடம். 27

சனி 4 - வது ஜாமம்—தென் மேற்கு

கோளதாய் வொருவன்பேச்சை கேட்டுநீ வழக்கினாலே
மீளவே வெகுதனத்தை விரையமுஞ் செய்தாயப்பா
தாளவே யதுவுனக்கு தடையது பட்டுப்போச்சு
மீளவே சனியுநாலாம் ஜாமந்தென் மேற்காரூடம். 28

சனி 4 - து ஜாமம்—மேற்கு.

உண்டியின் பணத்தைதானு மொருவற்கு பரிகொடுத்து
அண்டையோ ரறிந்திடாம லவதியும் படுகுறாய்நீ
கொண்டவுன் மனையாளுக்கு குறவது நடத்திவாறாய்
விண்டிடுஞ் சனியுநாலாம் ஜாமத்தின் மேற்காரூடம். 29

சனி 4 - வது ஜாமம்—வடமேற்கு.

மங்கள மாகவுந்தன் மனையிலோர் தெய்வமுண்டு
தங்கிய குற்றத்தாலே தாமிசங் காரியங்கள்
பொங்கமாய் பூசைசென்று போடவுஞ் சுகமுண்டாகும்
சங்கையாஞ் சனியுநாலாம் ஜாமம்வட மேற்காரூடம். 30

சனி 4 - வது ஜாமம்—வடக்கு.

கலித்துநீ வீட்டின்மீது சார்ந்திட்டா யனேகசண்டை
செலித்தவ னுன்கைசொற்றை கேவலம் பரித்துக்கொண்டான்
அலுத்துமே மனதுவாடி அவஸ்தையும் படுகுறாய்நீ
பலித்திடும் சனியுநாலாம் ஜாமத்தின் வடக்காரூடம். 31

சனி 4 - வது ஜாமம்—வட கிழக்கு.

திருவது வந்துசேரும் தேடிய பூமிலாபம்
பருவமா யினிமேல்நல்ல பலனது உனக்குவுண்டாம்
மரிவிய பிதுர்தன்சொத்து மங்கள மாகக்கூடும்
பெரிகிய சனியுநாலாம் ஜாமம்வட கிழக்காரூடம். 32

வாழி விருத்தம்.

ஆதியா மூலகம்வாழி அண்டர்கள் முனிவர்வாழி
சோதிபா மஷ்டதிக்கு சொல்லுமா ரூடம்வாழி
நீதியாய் படித்தோர் கேட்டோர் நிதமுமே வாழிவாழி
கோதிலா தச்சிலிட்டோர் குறவன்றி வாழிவாழி.

அஷ்டதிக்கின் ஆரூடம் - முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 224.

இனி அகஸ்தியர் பஞ்சபட்சி ஆரூடம்.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர்
பஞ்சபட்சி ஆருடம்.

விநாயகர் துதி.

விருத்தம்.

அகஸ்திய முனிவர்தானு மருளிய பஞ்சபட்சி
வகுத்திடு மாரூடத்தை வண்மையா யெவருங்காண
ஜெகத்தினில் பிரகாசமோங்குஞ் செந்தமிழாலே பாட
பகுத்திடும் விநாயகன்றன் பாதமலர் காப்புதானே.

வாக்கியங்களுக்குறிய முதலெழுத்தைக்கொண்டு பக்ஷிகளரியும் விபரம்.

அ-க-ச-த-ந-ப-ம-வ-ஆ-கா-சா-தா-நா-பா-மா-வா-ஆக ௰௬ எழுத்து வல்லூரென்றறியவும்.

இ-கி-சி-தி-நி-பி-மி-வி-ஈ-கீ-சீ-தீ-நீ-பீ-மீ-வீ ஆக ௰௬ எழுத்தும் ஆந்தையென்றறியவும்.

உ-கு-சு-து-நு-பு-மு-வு-ஊ-கூ-சூ-தூ-நூ-பூ-மூ-வூ-ஆக ௰௬ எழுத்தும் காகமென்றறியவும்.

எ-கெ-செ-தெ-நெ-பெ-மெ-வெ-ஏ-கே-சே-தே-நே-பே-பே-வே-ஆக ௰௬ எழுத்தும் கோழியென்றறியவும்.

ஒ-கொ-சொ-தொ-நொ-பொ-மொ-வொ-ஓ-கோ-சோ-தோ-நோ-போ-மோ-வோ-ஆக-௰௬ எழுத்தும் மயிலென்றறியவும்.

வாரங்கள் 7-க்கும் ஊண்பக்ஷிகளறியும்
விபரம்.

செவ்வாயருக்கன் வல்லூறாண் சிறந்ததிங்கள் புதனாந்தை
கவ்வார்விபாழன் காரண்டங் கருதும்வெள்ளி கோழியதாம்
மவ்வார்சனியின் மயிலூண்ணும் வளரும்பகலு மாராய்ந்து
மிவ்வாரின்னூற் நருமுனியு மியம்புங்கடலா ருலகுக்கே.

வாரங்கள் 7-க்கும் ஊண்பக்ஷிகளறியும்
விபரம்.

அருக்கன்வெள்ளி முனிமரண மண்மிசேர்செம் பொர்க்காரியுட
னெறுக்கும்வல் லூறமரண றெறியாங்காக மதிமரணம்
செருக்குஞ்செவ்வாய்கோழிபதாஞ்சேர்ந்தபுந்திமயின்மரணம்
கருக்குங் குழலாள் முதற்பக்கங் கடைசயருபான் சாவாமே.

பக்ஷிகளின் தொழில் நாழிகை அறியும்
விபரம்.

ஊண் நாழிகை - கவ, அரசு நாழிகை - உ, நடை நாழிகை-க௰, நித்திரை நாழிகை-முக்கால், மரண நாழிகை-ஒ, இவ் விதமாக வாரம் எ-க்கும் கண்டுகொள்ளவும்.

பகலிரவு நாழிகை அறியும்
விபரம்.

பகலிரவிற்கும் நாழிகை-௬௰, ஜாமம்-௰உ, காலே ௬-மணி முதல் மாலே ௬-மணிவரைக்கும் நாழிகை-௩௰, ஜாமம்-௬, மாலே ௬-மணி முதல் காலே ௬-மணிவரைக்கும், நாழிகை-௩௰, ஜாமம் ௬-என்றறியவும். மணி க-க்கு, நாழிகை-உஒ ஆக கண்டு கொள்க.

ஆருடம் சொல்லும் விபரமறியும்
விருத்தம்.

அந்தமுள பஞ்சபக்ஷி யாருடந்தான்
அறையுமொரு விபரமதை சொல்லக்கேளு
சிந்தையுடன் வந்தொருவர் கேழ்க்கும்போது
சொல்லில்வரும் முதலெழுத்தைக் கருத்திலூணி

விந்தையதா யவ்வெழுத்தின் பட்சிப்பாறு
விளங்குநடை யூணரசு மரணம்நித்ரை
தொந்தமுடன் கண்டுபலன் சொல்வாயாகில்
தொழுதுகுரு முனியென்று வணங்குவாரே.

பூர்வபட்சம் பகல்.

வாரம் 7 - க்கும் ஆருடபலன்.

ஊணின் பலன்.

உன்னிதமாம் ஊண்பட்சி பலனைக்கேளு
உத்தமமாம் நினைத்ததுவகை வசமேயாகும்
மன்னியே செய்தொழிலும் பலிதமாகும்
மருதேசம் போனவரும் வந்துசேர்வர்
கன்னியரும் வசமாவாள் மழையுமுண்டு
கரிதிவ ழக்கதுவும் பலிதமாகும்
தன்னிகராய் வாழ்ந்திடுவார் குறவொன்றில்லை
தவமுனியா மகஸ்தியரும் புகன்றவாக்கே.

நடையின் பலன்.

நடைபட்சி யாரூடப் பலனைக்கேளு
நாடியதோர் யாத்திரையி லலச்சலுண்டாம்
தடையாகும் நினைத்ததொழில் பலிதமாக
தப்பிதமாம் மாதரால் கலகமுண்டாம்
விடையாகுங் கொள்ளையது கொள்ளநஷ்டம்
வீண்வழக்கா யனைவோர்க்கும் விரோதிபாவாய்
குடையாளு மரசரால் தீங்குனேறும்
கும்பமுனி தானுறைத்த வாக்கிதாமே.

அரசின் பலன்.

அரசரால் கீர்த்தியது மிகவுண்டாகும்
அன்பான விவாகமது செய்யநன்று
வரிசையாய் நினைத்ததொழில் செய்யநன்று
வம்பான வழக்குவெல்லும் பிணியுந்தீரும்
கிரிசையால் நிதியதுவும் வந்துசேரும்
கிரகமது புதிதாகச் செய்யநன்று
பரிசையுடன் போனதொரு பொருளுங்கூடும்
பண்பாகுங் கும்பமுனி வாக்கினவாறே.

நித்திரையின் பலன்.

சங்கையெனும் நித்திரையின் பலனைக்கேளு
சஞ்சலமாங் கொண்டபிணி தீராதப்பா

பொங்கமுடன் பிரயாணம் போனார்மீளார்
புகலுமொரு கன்னியரின் வாழ்க்கைதீகாம்
அங்கனவே யெத்தொழிலும் பலிதமில்லை
அடுத்ததொரு வழக்கதுவுங் கெலித்திடாது
தங்குமொரு வசத்திலையுங் கலகமுண்டாம்
தானுரைத்த கும்பமுனி வாக்கிதாமே.

மரண பலன்.

என்னசொல்வேன் மரணத்தின் பலனைகேளு
ஏகுமே பிராணமது பிணிதீராது
வன்னிதமாய் செய்தொழிலும் பலிதமில்லை
வருத்தமுடன் நிலைகுலைக்கும் நிதியும்போகும்
தன்பனதில் கலக்கமுறும் மனையாள்சேராள்
தக்கதொரு பந்துகட்கும் விரோதிபாவாய்
உன்னியதோர் வழக்கதுவுஞ் செலித்திடாது
உலகோர்க்கு கும்பமுனி யுரைத்தவாமே.

பூர்வபட்சம் இரவு.

வாரம் 7-க்கும் ஆருடம்

ஊணின் பலன்.

அரசருட பேட்டிபது காணநன்றாம்
அன்பாக உத்தியோகஞ் செய்யநன்றாம்
வரிசையாய் மாமேனை கொள்ளநன்றாம்
வளமான பயிர்செய்ய விர்த்தியுண்டாம்
பிரியமுள மணங்களது புரியநன்றாம்
பேசியதோர் வழக்கதுவும் வெல்லநன்றாம்
குறையகல வெத்தொழிலும் பலிதமுண்டாம்
கும்பமுனி தானுரைத்த வாக்கிதாமே.

நடையின் பலன்.

எடுத்ததோர் பேரமது செய்யதீதாம்
இல்லிடத்தில் துயரமுட னிம்சையுண்டாம்
தொடுத்ததொரு வழக்கதுவுங் கெலிககாதப்பா
தோஷமா மலச்சலொடு திரிச்சலுண்டாம்
கொடுத்தபொருள் கைவசமு மாகாதிப்போ
கொற்றவரால் தனவிரைய முனக்குவுண்டாம்
அடித்ததொரு மனையாளும் பகையதாவாள்
அருள்பூண்ட கும்பமுனி யுரைத்தவாமே.

அரசின் பலன்.

கீர்த்தியுள தொழில்யாவும் புரியவாகும்
கிருபையுடன் போனபொருள் வந்துசேரும்
பூர்த்திபதாய்ப் பெண்பேசிக் கொள்ளநன்றும்
புதுகிரகந் தன்னில்குடிப் போகநன்றும்
நேர்த்தியதாய் வியாபாரஞ் செய்யநன்றும்
நிலமதுவும் வாங்கிபயி ரிடுகநன்றும்
பார்த்திபன்போல் யெத்தொழிலும் பலிதமுண்டாம்
பாரோர்க்கு கும்பமுனி பகர்ந்தவாக்கே.

நித்திரையின் பலன்.

பட்டதோர் பிணியதுவுந் தீர்ந்திடாது
பகையென்ற கலகமது பெருகுமப்பா
தொட்டதொரு தொழில்யாவும் விர்த்தியாக
தொடுவழக்கா லுன்மனதுந் துயரமாகும்
விட்டபொருள் கைவசமு மாவதில்லை
வேந்தரால் கெடுதியது வந்துதீரும்
அட்டியாம் யாவுமே பலியாதென்று
அரைந்திட்ட கும்பமுனி வாக்கிதாமே.

மரண பலன்.

துன்பமாம் மரணமுண்டாம் பிணிதீராது
துலவதுவே போனவர்கள் தானுமீளார்
வம்பான வழக்கதுவுங் கெலித்திடாது
வஞ்சியரால் கலகமது வந்துதீரும்
அன்பாக வெண்ணதொரு யெண்ணமெல்லாம்
அபலமதே யாகிவிடு மரிந்துகொள்ளு
இன்பமுறும் யெத்தொழிலும் பலியாதென்று
இயம்பிய கும்பமுனி வாக்கிதாமே.

அமரபட்சம் பகல்.

வாரம் 7-க்கும் ஆரூடம்.

ஊணின் பலன்.

விளங்கியதோர் அமரபட்சம் ஊண்பலன்கேள்
விர்த்தியுடன் விவாகமது செய்யநன்றும்.

கலங்கமெனுங் கெடுதியது உடனேதீரும்
கரு'மமாம் பிணியதுவு மணுகிடாது
வளங்கொள்ளு மாடுமனை பூமியோடு
வர்த்தகமு முத்தியோகஞ் செய்யநன்றும்
தளம்புகழ சகலமுமே வசியமென்றே
தானுரைத்த கும்பமுனி வாக்கிதாமே.

நடையின் பலன்.

வெற்றியுள அமரபட்ச நடைப்பலன்தான்
விளங்கிடவே சுகமோடு பிணியுந்தீரும்
பற்றியதோர் தொழில்களெலாம் விர்த்தியுண்டு
பகையான வழக்கதுவுங் கெலித்துவாழ்வாய்
உற்றதோர் பந்துகட்கும் பிரியமாவாய்
வூர்ப்பயணம் போனவரும் வந்துசேர்வார்
குற்றமிலை யெத்தொழிலும் பலிதமாகும்
கும்பமுனி தானுரைத்த வாக்கிதாமே,

அரசின் பலன்.

ஜெயமாகு மமரபட்ச மரசிலேதான்
சிறந்ததொரு பயணமது செய்யநன்று
வயமாகு புவியிலொரு கலகமில்லை
வஞ்சியரோ டென்னாளும் வாழ்வுமுண்டு
இயல்பினல் வெற்றியது பெருகவுண்டாம்
எப்போதும் நிதிபூமி யுள்ளோனுவாய்
பயமதவு மில்லையெல்லாம் வசமாமென்று
பகர்ந்திட்ட கும்பமுனி வாக்கிதாமே.

நித்திரையின் பலன்.

அமரபட்சம் நித்திரையின் பலனைக்கேளு
அடுத்தபிணி யோடென்று அதிகமாகும்
சபமாக தேடியதோர் பொருளுநஷ்டம்
சஞ்சலமாம் செய்தொழிலும் பலிதமில்லை
நிமைபோதும் சுகமில்லை கரு'மமுண்டாம்
நெடுந்தூரம் போனவரும் வாரதில்லை
தமையாகும் யெண்ணமெலாஞ் சபலமென்றே
தானுறைத்தார் கும்பமுனி வாக்கிதாமே.

மரணத்தின் பலன்.

பத்திய வமரபட்சப் பலனைக்கேளு
பழியாகுஞ் சலத்திலொரு கண்டமுண்டாம்
சுத்தியே செய்கரும மெல்லாந்தீது
சூழ்ந்துமே தீவினைக ளதிகரிக்கும்
மத்தியமாம் மனதில்கொண்ட வெண்ணமெல்லாம்
மகாதுன்ப மாகிவிடு மரிந்துகொள்ளு
சித்தாது கவலையுண்டாம் வழக்குந்தீரு
தென்றுகும்ப முனியுறைத்த வாக்கிதாமி.

அமரபட்சம் இரவு.

வாரம் 7-க்கும் ஆரூடம்.

செப்புமொரு அமரபட்ச மிரவிலேதான்
செய்கின்ற போஜனத்தின் பலனைக்கேளு
தப்பிதமாய் வந்தபிணி யுடனே தீரும்
தார்மீது வுனக்குவொரு கலகமில்லை
ஒப்பாகும் அடர்மழையும் பெருகவுண்டு
உத்தமனே யுன்மொழிக்கு யிசையுமெல்லாம்
கொப்பெனவே பயணமது போவதில்லை
குறிப்பாகுங் கும்பமுனி வாக்கிதாமே.

நடையின் பலன்.

வந்ததோ ரமரபட்ச மிரமில்யாதரை
வருத்தமில்லை வெற்றியுண்டாம் பிணியுந்தீரும்
பந்தமெனுங் கருமமில்லை யகமுந்தாமார்
பாவையற்கு நேசமதாய் தினமும்வாழ்வாம்
சிந்தையினில் நினைத்ததுவும் வசமேயாகும்
சென்றவரும் ஜெயமாக வந்துசேர்வார்
தொந்தமுடன் தொட்டதொழில் பலித்மென்றே
தானுரைத்த கும்பமுனி வாக்கிதாமே.

அரசின் பலன்.

உன்னிதமா மமரபட்ச மிரவில்தானும்
உதித்ததோ ராசினிலே சுகமுமுண்டாம்

தன்னிகரய் வாழுமுண்டாம் பயணந்தன்னில்
தனைபெதிர்த்த சத்துருவை ஜெபமேசெய்வாய்
இன்னிலத்தில் குறவன் றி வாழ்வுநீடும்
இயலான உத்தியோக விர்த்தியுண்டாம்
மன்னியதோர் தொழில்யாவும் விர்த்தியென்றே
மகிழ்ந்துகும்ப முனியுரைத்த வாக்கிதாமே.

நித்திரையின் பலன்.

சஞ்சலமா மமரபட்ச மிரவில்நித்ரை
சார்ந்திடிலோ துன்பமாம் பிணிகளுண்டாம்
வஞ்சகமாய்க் கைப்பொருளும் விரையமாகும்
வாதுகொண்ட வழக்கதுவுங் கெலித்திடாது
பஞ்சையைப்போல் புவியில்மிக வலச்சலுண்டாம்
பாதகமாங் கருமமொன்று வந்துதீரும்
மிஞ்சியதோர் எத்தொழிலும் பலிதமாகா
தென்றெல்லோ கும்பமுனி யியம்பினரே.

மரணத்தின் பலன்.

கொண்டதோ ரமரபட்ச மரணந்தன்னில்
குறித்தபொருள் கைவசங்க ளாவதில்லை
தெண்டனையாய் துன்பமது வந்துசேரும்
தேடியதோர் பொருள்களெல்லாந் தங்காதோடும்
மிண்டனைப்போல் திரிச்சலுட னலச்சலுண்டு
மரிவியதோர் தொழில்களிலுங் கஷ்டமுண்டாம்
விண்டுமிந்தப் பல்லோர்க்கு வேணுமென்று
விளம்பிய கும்பமுனி வாக்கிதாமே.

பஞ்சபட்சி ஆரூடம் - முற்றுப்பெற்றது.

இனி ஆஞ்சனேயர் ஆரூட சாஸ்திரம்.

உ

பரமபதி துணை.

ஆஞ்சனேயர்

ஆரூட சாஸ்திரம்.

பகல் 30-நாழி, இரவு 30-நாழி,
ஆக 60-நாழிகைக்கும் ஆரூடசாஸ்திரம்.

விநாயகர் துதி.

விருத்தம்.

வாழியா முலகினோரும் வளம்பெற வாழநாளும்
நாழிகை யாரூடத்தை நவின்றிடச் சகாதேவர்
தாழியொன் றணுகிடாமல் தக்கதோர் பலனைக்கூற
வேழமா முகவன்பாதம் வேண்டியே துதிசெய்வோமே.

ஆரூடம் பார்க்கும் வகையறியும் விருத்தம்.

வாரமது யேழினிற்கும் பலனொன்றாகும்
வகுத்திடுவாய் நாழியரு பதுவாந்தன்னை
கூறிடுமோர் பகலினுக்கு முப்பதாகும்
கூட்டிடுவாய் இரவினிற்கு முப்பதென்றே
பாரிலுனை யாரூடங் கேழ்க்கும்பேர்க்கு
பகுத்துரைநீ யெள்ளுக்காய் பிளந்தாப்போலே
கோரியுன்னை சகாதேவ றென்றுநாளுங்
குவலய மாதியெல்லாங் கொண்டாடுவாரே.

வாரம் 7-க்கும் 1-ம் நாழிகையின் பலாபலன்.

திருவது மிகவுண்டாகுந் தினகரன் போலும்வாழ்வாய்
பெரிகிடும் நிதியும்பூமி புத்திர விர்த்தியோடே
கருதிப வுத்தியோகங் களிப்புடன் வந்துகூடும்
மரிவிப முதலநாழி மகாநன்மை வுத்தமந்தான்.

வாரம் 7-க்கும் 2-ம் நாழிகையின் பலாபலன்.

வருத்தமது ஒன்றுமில்லை வஞ்சியர் கலகமுண்டு
திருத்தமா யெடுத்தவேலை தானது தடைபதாகும்
நிருத்தொரு பொருளும்வாங்கி நஷ்டம தாகின்றாய்
கருத்துள ரெண்டாம்நாழி காண்பது மத்திபந்தான.

வாரம் 7-க்கும் 3-ம் நாழிகையின் பலாபலன்.

அன்னியர் கையிலீந்த வரும்பொருள் வந்துசேரும்
மன்னரா லுதவியுண்டு மகிழ்தரு முத்தியோகம்
பின்னிப பிணியுந்தீரும் போரதோர் வேலைசாயும்
உன்னித மூன்றாம்நாழி உத்தம மாகும்பாரே.

வாரம் 7-க்கும் 4-ம் நாழிகையின் பலாபலன்.

கைபது மருதிபாகக் கவர்ந்துமே போனசொத்து
பையவே எட்டுநாளில் பாவைகை யிருந்துகாண்பாய்
துய்யுமோர் மனையிலுண்டு துலவது போகவில்லை
மெய்யுரை நாலாம்நாழி மகிழ்தரு முத்தமந்தான்.

வாரம் 7-க்கும் 5-ம் நாழிகையின் பலாபலன்.

நாடிய தொழில்களெல்லாம் நஷ்டமாம் பலிதமில்லை
கூடிய வொருவனாலே கோளது நடக்குதிப்போ
வாடியே நாலுவாண்டாய் வருத்தமும் படுகுறாய்நீ
தேடியே ஐந்தாம்நாழி தானது மத்திபந்தான்.

வாரம் 7-க்கும் 6-ம் நாழிகையின் பலாபலன்.

பக்குவ மாகசெய்யும பயிர்தொழில் பலிதமாகும்
மிக்கதோர் மாடுகன்று மேலதாய் பெருகும்லாபம்
தக்கதோர் பிரயாணந்தான் தானது போகனன்று
சிக்கிய யேழாம்நாழி ஜெயந்தரு முத்தமந்தான்.

வாரம் 7-க்கும் 8-ம் நாழிகையின் பலாபலன்.

பட்டிடும் பிணியுமிப்போ பாதைபு மிகவிளைக்கும்
தொட்டதோர் மருந்தினாலே தீர்வது மில்லைகண்டாப்
பொட்டென பூஜையொன்று போடுநீ குலதேவதைக்கு
சட்டென தீருமெட்டாம் நாழிகை பலனிதென்றே.

வாரம் 7-க்கும் 9-ம் நாழிகையின் பலாபலன்.

கண்டதோர் கினவினாலே கலக்கமும் படுகுறாய்நீ
சண்டையால் வீட்டைவிட்டு தாண்டிட எண்ணங்கொண்டாய்
விண்டுநீ போவையாகில் வருத்தமும் வந்துநேறும்
பண்டுள ஒன்பதாநாழி பலனிது மத்திமந்தான்.

வாரம் 7-க்கும் 10-ம் நாழிகையின் பலாபலன்.

மெய்யினில் கிரங்குநோயால் மெத்தவும் வருந்துறாய்நீ
ஐயமா யொருவன்சொன்ன வம்மருந் தால்தீராது
பையவே கிரகத்தாலே பற்றிய ஞோயதாகும்
துய்யவே பேறதீரும் பத்தாம் நாழியென்னே.

வாரம் 7-க்கும் 11-ம் நாழிகையின் பலாபலன்.

தெற்கது நாடிநீயும் தேடியே போரவேலே
மிக்கவே தடையதாகி மங்கையால் கலகம்நேரும்
சிக்கிநீ பெருவாய்கஷ்டம் சேரநீ போவதாலே
பக்குவம் பதினொன்றென்னும் நாழிகை பலனிதாமே

வாரம் 7-க்கும் 12-ம் நாழிகையின் பலாபலன்.

ஊருக்கு ஜம்பனுயும் வீட்டுக்கு விழலனுயும்
பேருக்குப் பெருமைகொண்டு பேதைபோ லலேகிறாய்நீ
சீரது வொன்றுமில்லே சென்றநீதா ரிடத்தில்தானும்
நேரதாயப் பன்னிரெண்டாம் நாழிகை மத்திமந்தான்.

வாரம் 7-க்கும் 13-ம் நாழிகையின் பலாபலன்.

வருத்திலே செலவுமெற்ற வான்பொருள் சேதமுண்டு
கருத்துடன் யெதைசெய்தாலுங் கலகமே யாகுதிப்போ
வருத்தமும் படுகுறாய்நீ வருஞ்சுத னொருவனாலே
திருத்தமாம் பதின்மூன்றும் நாழிகையின் பலனிதாமே.

வாரம் 7-க்கும் 14-ம் நாழிகையின் பலாபலன்.

கூடிடும் விவாகந்தானும் குடும்பமும் விர்த்தியாகும்
நாடிய வடக்குதிக்கு நங்கையாள் வந்துகூடும்
தேடியே யலேயவேண்டாம் தானது வலியகூடும்
நீடிய பதிநாலாம் நாழியி லுத்தமந்தான்.

வாரம் 7-க்கும் 15-ம் நாழிகையின் பலாபலன்.

மனையது கொள்ளனன்று மருங்குடிப் புகரனன்று
வினவிய புராணங்கேள்வி விளம்பிடக் கேழ்க்கனன்று
கனியொடு யரசர்பேட்டி காணுத லாகும்னன்று
நினைவுரும் பதினைந்தாம் நாழிகை யுத்தமந்தான்.

வாரம் 7-க்கும் 16-ம் நாழிகையின் பலாபலன்.

பள்ளியில் வைக்கனன்றும் பலகலை போதனன்றும்
தெள்ளியே பணிகள்தானும் தேடியே செய்பனன்றும்
உள்ளது வுரைக்கனன்றும் வொருபொருள் வாங்கனன்றும்
விள்ளுமோர் பதினாறும் நாழிகை யுத்தமந்தான்

வாரம் 7-க்கும் 17-ம் நாழிகையின் பலாபலன்.

தந்திரத் தாலேநீயும் தான்பிழைத் திட்டுவாறுய்
முந்திமோர் சினேகனாலே மோசமாய்ப் பொருளுந்தோற்றாய்
விந்தையாந் தொழிலிலொன்று வழங்கது நேர்ந்துப்போச்சு
பந்தமாம் பதினேழாம் நாழிகை மத்திபந்தான்.

வாரம் 7-க்கும் 18-ம் நாழிகையின் பலாபலன்.

துணைவனோ டெதிர்ததுநீயும் தொடுவழக் கிட்டுபின்னால்
பணமெலாங் கவர்ந்துமிபபோ பரிதேசி போலேயாகி
குணமிலா தொருவனோடு கூடியே யிருக்குறாய்நீ
மணமிலா பதினெட்டாம் நாழிகை மத்திபந்தான்.

வாரம் 7-க்கும் 19-ம் நாழிகையின் பலாபலன்.

சோரமாங் கன்னியாலே சோர்ந்துநீ யலைகுறாய்நீ
பேரவே நாள்கள்செல்லும் பசப்பைநீ நம்பவேண்டாம்
காரக ரோகமுண்டு கன்னியற் கரிந்துகொள்ளு
சீரதாம் பத்தொன்பதாம் நாழிகை பலனிதன்றே.

வாரம் 7-க்கும் 20-ம் நாழிகையின் பலாபலன்.

உரிக்கிய பிணிகள்தானும் உடனது தீர்வதற்கு
இருக்குமோர் கிரகம்விட்டு யின்னொரு மனைக்குப்போக
சுருக்கினில் திருமப்பார் சூக்ஷமா மிதனைப்பாரு
பெருக்கிய இருபத்தெனனும் நாழிகைப் பலனிதென்றே.

வாரம் 7-க்கும் 21-ம் நாழிகையின் பலாபலன்.

களவதாய்ப் போனசொத்து காண்பது நிராசையாகும்
உளவதாங் கன்னியாலே வீடுவிட் டகன்றுபோச்சு
வளமதா யதனைப்பற்றி வரும்பொரு ளழிக்கவேண்டாம்
தளம்புக லிருபத்தோரும் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும் 22-ம் நாழிகையின் பலாபலன்.

அகமது கட்டநன்று ஆனதோர் வழக்குவெல்லும்
ஜெகமதில் கீர்த்தியோங்கி செழித்திட வாழ்வுநன்றும்
தகைமைசேர் மனையாளுக்கு தரித்திடும் புத்ரலாபம்
இகமதில் இருபத்திரண்டாம் நாழிகை பலனிதாமே.

வாரம் 7-க்கும் 23-ம் நாழிகையின் பலாபலன்.

மாதரா லுதவியுண்டு மைந்தரின் கீர்த்தியோடு
ஆதர வாகவேதான் அடுத்திடு மூரில்க்ஷேமம்
போதவே பொருளுங்கூடும் புகழ்பெரு முத்தியோகம்
தீதிலா யிருபத்திமூன்றும் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும் 24-ம் நாழிகையின் பலாபலன்.

பொன்பணி யென்றுதானும் போக்கது போனதுண்டு
தன்மையா யரசராலே தானது வந்துசேரும்
நன்மையாய் மூன்றுதிங்கள் நாளது கழிக்கவேணும்
சென்னய மிருபத்திநாலாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும் 25-ம் நாழிகையின் பலாபலன்.

கருத்தினில் கொண்ட பூசை களிப்புடன் செய்யநன்று
திருத்தமா யொருவராலே தானது பலிதமாகும்
மரித்திடு வோர்கள்சொல்லை மனதினில் கொள்ளவேண்டாம்
இருபத்தி யைந்தாம்நாழி யியம்பிடும் பலனிதாமே.

வாரம் 7-க்கும் 23-ம் நாழிகையின் பலாபலன்.

தங்கிய வூரினின்றும் தானது பயணமாக
இங்கவை கேட்டாய்நீயும் யேகவோ தடையொன்றில்லை
பொங்கமாய் போரவேலை பிரியமாய் வசமேயாகும்
மங்கள யிருபத்தாறும் நாழிகைப் பலனிதன்மை.

வாரம் 7-க்கும் 27-ம் நாழிகையின் பலாபலன்.

ஜீவனும் ஒன்றைதேடி திகைதப்பி யலேகுறய்நீ
பாவமா யொருவர்கையிற் பட்டது சிக்கிப்போச்சு
மேவிநீ யலேந்திட்டாலு மதவர போரதில்லே
தாவியே யிருபத்தேழாம் நாழிகை பலனிதாமே.

வாரம் 7-க்கும் 28-ம் நாழிகையின் பலாபலன்.

வந்திடும் வேலேயொன்று வளம்பெற கிழங்கினின்று
சிந்தையுங் களிப்பதாக சிறந்திடு முத்தியோகம்
விந்தையாம் முன்போல்நீயும் வாழ்வது பெருகிவாழ்வாய்
தொந்தமா மிருபத்தெட்டாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்குக் 29-ம் நாழிகையின் பலாபலன்.

வழக்கதாய் கன்னியர்லே வனவாசம் படுகுறய்நீ
பழக்கமா யிருந்தநேசன் பகையதாய் யெதிர்த்துவிட்டான்
தழைக்கவே யுறவோருலே தானது செழிக்கப்போராய்
ஒழுக்கமா யிருபத்தொன்பதாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும் 30-ம் நாழிகையின் பலாபலன்.

அன்புடன் கல்லியாண மாகிடும் பயப்படாதே
தென்புடன் கேட்டபெண்ணே தானது வந்துகூடும்
இன்பமா மேற்குதிக்கு யென்றுநீ யறிந்துகொள்ளு
முன்புரும் முப்பதாம் நாழிகைப் பலனிதாமே.

(பகல் நாழிகை 30-க்கும் பலாபலன் - முற்றிற்று.)

வாரம் 7-க்கும் இரவு நாழிகையின் ஆரூடம்.

வாரம் 7-க்கும், இரவு 1-ம் நாழிகையின் பலாபலன்.

பெரிகிடும் துயரமற்ற பிழைத்திடும் பிழைப்பில்தானும்
வெரியது கொண்டாப்போலே வேலேக்கோர் நினேவுமுண்டு
பிரியமாஞ் சினேகமெல்லாம் பழியதாய் நேர்ந்துப்போச்சு
இரவாதம் முதல்நாழிகை யியம்பியப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 2-ம் நாழிகையின் பலாபலன்.

கொண்டதோர் மனையாள் தன்னைக் கொடுந்துயர் படித்தியநீ
அண்டிய பரதாரத்தால் அவஸ்தையும் படுகுறாய்நீ
ஒண்டியே மனையாள் தன்னை வுறவதாய்க் கூடனன்று
விண்டிடு மிரவிரண்டாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 3-ம் நாழிகையின் பலாபலன்.

மனதினில் நினைத்தவேலை மகிழுற வந்துகூடும்
தனமது கொஞ்சமிப்போ தான்சில வாகும்பாறு
இனமதா ரெண்டுதிங்கட் குள்ளவே பலிதமாகும்
வினவிய இரவுமூன்றும் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 4-ம் நாழிகையின் பலாபலன்.

நேசமா யொருவன் தன்னை நம்பியே வடக்குசென்று
பேசியே பொருளுந்தோற்று பேதைபோ லலைகுறாய்நீ
கூசியே யுனதுவார்த்தை கோளதாய் முடியுதிப்போ
பூசமாம் இரவுநாலாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 5-ம் நாழிகையின் பலாபலன்.

மேனியுஞ் சிவந்தோனுகும் மார்பினில் ரோமமுள்ளோன்
தானெனன யவனைநம்பி தனமெலாந் தாரைவார்த்து
ஊனமா யதினுல்சண்டை யுனக்குமே நேர்ந்ததுண்டு
தேனென இரவுஐந்தாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 6-ம் நாழிகையின் பலாபலன்.

கப்பலின் வழியாய்சென்ற கனம்பெரு நேசந்தானும்
செப்பிய கடிதமொன்று சேதியும் காணப்போறாய்
கொப்பென வதினுல்மெத்தக் குணமது வுனக்குமுண்டு
இப்புவி இரவுஆறும் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 7-ம் நாழிகையின் பலாபலன்.

மாடொன்று களவுபோயி மனமது வாடுகின்றாய்
நாடெலா மலைந்துதேடி நழுவிநீ கையைவிட்டாய்
கூடென வாரத்துக்குள் கிழக்கினி லிருந்துகாண்பாய்
நீடென இரவுயேழாம் நாழிகை பலனிதாமே.

வாரம் 7-ற்கும், இரவு 8-ம் நாழிகையின் பலாபலன்.

குடும்பத்தில் வழக்குவொன்று குரிகியே நடக்குதிப்போ
இடும்பதாய் கன்னியாலே யிவ்வளத் துயரமாச்சு
படுமென வரசராலே பாரஇவ் வழக்குதீரும்
விடுமென இரவுயெட்டாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும் இரவு 9-ம் நாழிகையின் பலாபலன்.

கன்னியும் பெருவாள்பிள்ளை கனமழை யுண்டுவூரில்
தன்னிக ராகவாழ்வாய் தமயனால் உதவியுண்டு
மன்னிய மனையும்பூமி மாடுடன் னுடுஞ்சேருங்
துன்னிய இரவுவொன்பதாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 10-ம் நாழிகையின் பலாபலன்.

வர்த்தக விஷயந்தன்னில் வந்தொரு வழக்குத்தானும்
முத்தியே சண்டையாகி முடிந்தது வரசர்மூலம்
பத்திய யவர்களாலே பாதையும் விர்த்திபாகும்
சித்தமா மிரவுபத்தாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும் இரவு 11-ம் நாழிகையின் பலாபலன்.

தங்கிய தொழிலேயும் தாரையும் வார்த்துமிப்போ
அங்கமும் வளர்க்ககஷ்ட மலைச்சலும் படுகுறாய்நீ
இங்கென வொருவன்தன்னா லுனக்கனு கூலமாகும்
பொங்கமா மிரவுபதி னொன்றதாம் நாழியாமே.

வாரம் 7-க்கும், இரவு 12-ம் நாழிகையின் பலாபலன்.

கன்னியா லொருத்தியிப்போ கடும்பிணி கொண்டுவாடி
என்னதான் அவிழ்தமீந்து யிமிசையுந் தீரவில்லை
சொன்னதோர் கழுப்புவொன்று சுருக்கினில் சுற்றிப்போடு
தன்னிய இரவுபன்னி ரெண்டதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும், இரவு 13-ம் நாழிகையின் பலாபலன்.

அடுத்தவ ரிடத்திலெல்லா மரும்பகை யாகுதிப்போ
தொடுத்ததோர் வழக்குதானும் துன்பம தாகிப்போச்சு
விடுத்திடு மந்தவாரை வேரது யெண்ணங்கொள்ளு
படித்திய பதின்மூன்றும் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 14-ம் நாழிகையின் பலாபலன்.

கூடிய கல்லியாணம் குருக்கொரு தடையதாச்சு
நீடிய சதியுங்கொஞ்சம் சேர்ந்தது சிலவுயப்போ
வாடியே யதினல்மெத்த வருத்தமு முனக்குண்டாச்சு
தேடிய இரவுபதி னலதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும் இரவு 15-ம் நாழிகையின் பலாபலன்.

போனவர் வருத்துமுண்டு புகழ்பெருங் கன்னிமேயாமே
ஆனதோர் பந்துவெல்லா மடுத்துர வாடுவார்கள்
தானென நினைத்தவேலை தடையிலா வந்துகூடும்
மோனமா மிரவுபதி னஞ்சதாம் நாழிக்கென்னே.

வாரம் 7-க்கும் இரவு 16-ம் நாழிகையின் பலாபலன்.

தொரவது யெடுக்கநன்று தொழிலது புரியனன்று
மரிவிப மாமிவீடு மகிழுடன் போகநன்று
பிரியமாய் கொள்ளநன்று பேசியே கொடுக்கநன்று
அறியவே பதினறும் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 17-ம் நாழிகையின் பலாபலன்.

அஷ்டமச் சனிபன்போலே யடுத்தொரு நேசன்தானும்
கஷ்டமே படுத்தியுன்னைக் கடக்கவே யோடிப்போனன்
துஷ்டனு முந்தன்கண்ணில் துலங்கிடப் போறதில்லை
இஷ்டமா மிரவுபதி னேழதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும் இரவு 18-ம் நாழிகையின் பலாபலன்.

மனைவிமேல் விரோதமாகி மருதேசம் போவதற்கு
நினைவது கொண்டுநீயும் நேசனை யடுத்தாயிப்பொ
தனமது யவனல்சேதம் தாண்டிட வேண்டாம்நீயும்
இனமதா மிரவுபதி னெட்டதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும், இரவு 19-ம் நாழிகையின் பலாபல்ன்.

அன்னையுந் தந்தைதேடி யரும்பொருள் வைத்ததெல்லாம்
மன்னியே சிலவழித்து மரமது போலேயானுய்
உன்னிட கஷ்டத்தாலே யுண்டுநீ பிழைத்துவாராய்
இன்னிய பத்தொன்பதாம் நாழிகைப் பலனிதாமே.

வாரம் 7-க்கும், இரவு 20-ம் நாழிகையின் பலாபலன்.
மனதிலோர் எண்ணங்கொண்டு மகிழ்ந்துநீ செய்ததெல்லாம்
வினையதா யுனக்குமிப்போ விளைந்தது துன்பமெல்லாம்
இனமதில் கலந்தையானல் யாவுமே விலகுமப்பா
கனமதா மிரவில்தானு மிருபதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும் இரவு 21-ம் நாழிகையின் பலாபலன்.
நித்தமோர் நினைவதாகி நிலையது வொன்றுமில்லா
பத்தியே வாடுகின்றாய் பரியது கொடுத்தாப்போலே
சுத்தமா யொருவராலே சுகம்வரும் பயப்படாதே
நத்திய இரவுயிருபத் தோராம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும் இரவு 22-ம் நாழிகையின் பலாபலன்.
கெடியதோர் சிவத்தோனலே நஷ்டமு மடைந்துமுன்னல்
கொடியவன் தன்னையிப்போ கூடியே யிருக்கின்றாய்நீ
படியினி லவனல்மெத்த பாதையும் வினையும்நீக்கு
தடையதா மிருபத்தி ரெண்டதாம் நாழினுக்கே.

வாரம் 7-க்கும், இரவு 23-ம் நாழிகையின் பலாபலன்.
வாராது போனசொத்து வஞ்சித்தோன் கருத்தகுள்ளன்
தாராள மாகத்தானும் தான்சில விட்டுப்போட்டான்
பேரான யுனதுபந்து சுகியுற வரிந்துக்கொள்ளு
கூரான யிரவிருப்பான் மூன்றதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும், இரவு 24-ம் நாழிகையின் பலாபலன்.
பாலகன் தனக்குதோஷம் பற்றியே வாரமூன்றும்
கோலமாய் வதைக்குதிப்போ குணமில்லை யவிழ்தத்தாலே
மேலவே கிரகசாந்தி மகிழுடன் செய்யத்தீரும்
சாலவே யிரவிருப்பான் னலதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும், இரவு 25-ம் நாழிகையின் பலாபலன்.
இல்லர வழக்குவொன்று யெடுத்தது முடிந்திடாமல்
தொல்லையும் படுகுறாய்நீ துணைவனும் பகைவனகி
அல்லலைய்க் கன்னிவார்த்தை அபலம தாச்சுதிப்போ
சொல்லிய இரவிருபா னஞ்சதாம் நாழினுக்கே.

வாரம் 7-க்கும், இரவு 26-ம் நாழிகையின் பலாபலன்.

மங்கள மாகத்தானே மனையிலோ சுபங்களுண்டாம்
பொங்குமா யொருவராலே பொருளது வந்துகூடும்
தங்கிய தமையன்தம் தானவ ருரவுமாவார்
இங்கவை யிரவிருபா னாறதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும், இரவு 27-ம் நாழிகையின் பலாபலன்.

நம்பியே யொருவர்கையில் நயந்துமே யிருந்தபொன்னும்
வம்பதாய் மோசமாகி வழக்கதாய் நேர்ந்துபோச்சு
கம்பித மாகியேயும் கலங்கியே வாடுகின்றாய்
இன்பமா யிரவிருபா னேழதாம் நாழிக்கென்னே.

வாரம் 7-க்கும், இரவு 28-ம் நாழிகையின் பலாபலன்.

கொற்றவ ராலுனக்குக் கிடைத்திடு முத்தியோகம்
பற்றிய வதினால்மெத்த பலனது கிடைக்குமப்பா
உற்றதோர் பிரபுநேச முனக்குமுன் னுதவியாகும்
சிற்றம மிருவி நபா னெட்டதாம் நாழிக்காமே.

வாரம் 7-க்கும், இரவு 29-ம் நாழிகையின் பலாபலன்.

ஏகிய தொழிலும்நன்று யெத்தொழில் செய்யநன்று
பாகமா யுத்திபோகம் பலமது வாகும்நன்றாய்
தாகம தொன்றுமில்லை தழைத்திடுங் குடும்பமேலாய்
ஆகவே யிருவிருபா னொன்பதாம் நாழினுக்கே.

வாரம் 7-க்கும், இரவு 30-ம் நாழிகையின் பலாபலன்.

சீர்புகழ் மனைவிபுத்திரர் செல்வமோ டுற்றுவாழ்வார்
பேர்புகழ் பெரியோராலே பெருமையும் வந்துகூடும்
தார்புக ழுறவோரெல்லாந் தக்கம்தா ருதவி செய்வார்
பார்புக ழிரவுமுப்பதா ந ழிகைப் பலனி[illegible]மே.

இரா- 0, பகல்-30, ஆக 60-நாழிகைக்கும்

ஆஞ்சநேயர் ஆருடம்

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

ஜெயமுனிவ ரருளிச்செய்த

ஆரூட சாஸ்திர அகவல்

விநாயகர் துதி விருத்தம்,

மண்டலத்தில் ஜெயமுனிவ ராரூடந்தான்
மருமமா யிதுவரையு மிருந்ததாலே
கண்டுமே யாராயந்து பார்ப்பதற்கு
கண்ணாடிப் போல்திரட்டி யுலகினோர்க்கு
பண்டாகப் பலாபலன்கள் பகுத்துச்சொல்ல
பார்புகழும் செஞ்சி யேகாம்பரந்தான்
விண்டிடவே செந்தமிழ்ல் வையமீது
விநாயகன்றன் றிருகமலங் காப்பதாமே.

அதின்பக்கம் சனிமூலை நிற்பவர்க்கு மீனராசி பலன் சொல்லவும்.	நேர்கிழக்கு நிற்பவர்க்கு மேஷராசி பலன் சொல்லவும்.	அதின் பக்கம் நிற்பவர்க்கு தீவு திசை ரிஷபராசிபலன்சொல்லவு.	அதின்பக்கம் அக்கினிமூலை நிற்பவற்கு மிதுனராசி பலன்சொல்லவு.
அதின்பக்கம் தீவுதிசை நிற்பவற்குக் கும்பராசிபலன் சொல்லவும்.	திக்குகளறியும்		நேர் தெற்கு நிற்பவர்க்கு கடகராசி பலன் சொல்லவும்.
நேர் வடக்கு நிற்பவர்க்கு மகரராசி பலன் சொல்லவும்.	சக்கரம்.		அதின் பக்கம் தீவுதிசை நிற்பவற்கு சிம்மராசிபலன் சொல்லவும்.
அதின்பக்கம் வாய்வுமூலைநிற்பவற்குதனுசுராசிபலன் சொல்லவும்.	அதின் பக்கம் நிற்பவற்குதீவுதிசை விருச்சிகாராசிபலன் சொல்லவும்.	நேர் மேற்கு நிற்பவர்க்கு துலாம் இராசிபலன் சொல்லவும்.	அதின்பக்கம் நிருதி மூலை நிற்பவற்குகன்னிராசி பலன் சொல்லவும்.

☞ அடியிற்கண்ட சக்கரத்தை கிழக்குமுகமாக நின்று பார்வையிட்டால் கிழக்கு-தெற்கு-வடக்கு-மேற்கு-அக்கினிமூலை-ஈசானிமூலை, வாய்வுமூலை-நிருதிமூலை-தீவுதிசை, நேருக்கு நேராய் கண்டுகொண்டு பலன் சொல்லவும்.



குரு வணக்கம்.

அகவல்.

ஆதியாங்குருவின் அடியிணைத்தொழுது
சோதியாஞ்ஜெயமுனி யாரூடமனைத்தும்
அன்புடன்தமிழால் அரைந்திடப்புவியில்
இன்பமதாக வெந்தன்கருத்தில்
பக்கத்துணையாய் பரிவுடன்வந்து
சிக்கொன்றில்லாச் ஜெயமதுதந்து
பாலன்மீது பாதுகாத்தருளும்
சாலவுன்னடிச் சரணஞ்சரணம்.

1-வது ஜாமம் மேஷராசியின் பலன்.

அன்புட னீயும் ளொழுமோர் மனையில்
துன்பமே யுன்னை தொட்டுமே வாட்டி
வல்லிடி யாலே வருத்தமும் பட்டு
பொல்லாத கினவும் போதவே கண்டு
கோளா ருடனுங் குளப்பம தாக
தாளா துயரந் தரித்துநீ யிப்போ
ஜீவனை நாடித் தேடியே கேட்டாய்
ஆவலா மனதை அரைகுறேன் கேளாய்
ஆண்ஜீவ னென்று அவஸ்தைபாய் தானும்
தான்பிணிக் கொண்டு தவிக்குரா னிப்போ
அச்சம தாக வரும்பொருள் சேதம்
லச்சைய தாக ரொம்பவும் துயரம்
சிந்தையும் வாடி சிதறியே யிப்போ
வந்திடும் பிணியின் வயணமே தென்றாய்
அந்தமா யதனை யறைகுறேன் கேளும்
தொந்தமா யிவனும் தொடுத்தொரு நேசம்
பிரியமா யிருந்து பிரிந்திடு நாளில்
அரிவைபாள் பொருளை அபகரித் தவனும்
ஆலயம் பதியில் அறைந்துமே சத்தியம்
சாலவே செய்தத் துன்பமீ தாகும்
வேலவன் பதிக்கு வேண்டியே மேவி
கோலமாய் சுற்ற குறைகளுந் தீரும்
ஐந்துபேர் தனக்கு அன்னமுங் கொடுத்து
சிந்தையுங் களிக்க சிறப்புடன் வாழ்வாய்.

2-வது ஜாமம் மேஷராசியின் பலன்.

பண்டுடன் ரெண்டாம் ஜாமமே டத்தின்
விண்டிடும் பலனை விளம்பிடக் கேளும்
உன்னிட வுறவாம் உற்றதோர் கன்னி
தன்னையே நம்பி தானுர வாடி
இருக்குமோர் நாளில் இல்லிடந் தாவில்

தருக்கம தாகித் தான்வெளி வந்து
வேம்படி நின்று வெம்பியே யவளும்
தான்படத் துயரம் தடுத்துமே நால்வர்
போதனை யேற்றிப் போர்களஞ் செய்து
நீதியா ரிடத்தில் நேர்ந்தது வழக்கு
அதுமுதற் கொண்டு அழியுதுன் பொருளும்
சதியதா மந்த சண்டாளி யாலே
காலுகால் ஜீவன் நஷ்டம தாச்சு
சாலவே பிணியும் சார்ந்தது மெய்யில்
இன்னமுங் கேளு யியம்புவே னுனக்கு
மன்னரால் யிலாபம் மரிவிடு முனக்கு
அந்தவோர் கன்னி யடுத்துமே யிப்போ
வந்துர வாடியுன் வளமெலாங் கேழ்ப்பாள்
குந்துகர்வி சொல் கொஞ்சமும் நம்பாதே
சிந்தையு மகிழ்வாய் ஜெயமது வாகும்
உங்கள் குலத்தில் உதித்ததோர் பெண்ணும்
மங்கள மாக மாலைவந் தணுகும்
மேற்கொரு தேசம் மங்கையும் வாழ்வாள்
திற்கம தாகத் திரவியத் தோடே.

3-வது ஜாமம் மேஷராசியின் பலன்.

அரியலே மூன்றுஞ் ஜாமமே டத்தின்
தெரியவே பலனைச் செப்புவேன் கேளு
நரைதலை மனிதன் னயமது வுள்ளான்
பிரியம தாகப் பேசியே யுனக்கு
வருகுமோர் துயரை மாற்றியே வாரான்
உருதியா யவனை உள்ளத்தில் நம்பு
இன்னொரு கேழ்வி யியம்புவேன் கேளு
உன்னுட மனையில் உற்றயி சான்னியம்
தன்னிலோர் தெய்வம் தானதுவிருந்து
அன்னித மாக அழிக்குது கருவை
திங்களு மூன்றாய் பங்கம தாகத்

தங்கியே யிருந்து தானது கொடுக்கும்
உன்குல தெய்வம் உருதியாய் தொழுது
பொங்கமா யுனக்கு புகழது வாகும்
யெடுத்ததோர் வேலை யின்பமதாகும்
தொடுத்ததோர் பிணியும் துலைந்துமே போடும்
மங்கைக்கு கருவு மகிழதாய் தரிக்கும்
சங்கையொன் றில்லா தானது வாழ்வாய்
கூறிய மனைக்குக் குறித்திடுந் தெற்கில்
மாரியின் கோயில் மகிழுற வுண்டு
அடுத்தவக் கோயிற் கானதோர் பூஜை
கொடுத்துநீ செய்ய குடும்பமும் தழைக்கும்
விடுத்தவோர் வேலவன் விருதமுங் கொள்ளு
நடத்தியே சகலமும் நயமது தருமே.

---

4 - ஜாமம் மேஷராசியின் பலன்

ஆதர மாகும் அருளிய மேடம்
சோதியாம் நாலாம் ஜாமத்தின் பலன்கேள்
உன்னிட மனைக்கு உற்றதோ ரெதிரில்
பாழ்மனை யொன்று பதித்துமே யிருக்கும்
அம்மனைக் கேகி அரிவையுன் மனைவி
செம்மையாய் நின்று திரும்பிடுங் காலில்
அலரியே பயந்து அது முதலாக
நலியது கொண்டு நங்கையாள் வாடி
இருக்குறாள் கேளும் இன்னமுஞ் சொல்வேன்
பெருக்குமுன் தொழிலும் போச்சுது வீணாய்
வேதிய னொருவன் வந்துனக் கெதிரி
கோதிலா துன்மேல் கோளறு சாற்றி
இப்பவும் பாதையைப் படுகுறாய் நீயும்
செப்புவே னின்னம் சேதியைக் கேளும்
ஏழரை நாட்டு சனியனுந் துடங்கி
கோழையே படித்தி குடும்பமுங் கலைத்தான்
புரிந்திடும் வேலை பிழப்பையுங் கெடுத்து

வருடமு மைந்தாய் வாரையு மெத்த
தீர்ந்தது வெல்லாம் திங்களோ ரெட்டு
கூர்ந்தது கழிக்க கூடுமே பலன்கள்
சேர்ந்ததோர் நேசன் தன்னைகை விடாதே
நேர்ந்திடு மவனால் நல்லதோ ருதவி
வடிவேலர் கிருபை வந்துமே கூடும்
படியினில் ஜெயமுனி பகர்ந்தநம் வாக்கே.

மேஷ பலன் - முற்றிற்று.

1 - வது ஜாமம், ரிஷபத்தின் பலன்.

பாருளோர் மகிழும் பகர்ந்திடும் ரிஷபம்
கூறிடும் முதற் ஜாமத்தின் பலன்கேள்
காரியங் கேடாம் கவலையும் பட்டு
மீறியே துயரம் மனதினிற் கொண்டு
கோலமாய் மனதில் குறித்தொன் றுமிப்போ
ஆவலாய் கேழ்க்கு மாரூடம் புகல்வேன்
பெண்பா லொன்று பிணியது கொண்டு
கண்பார் மெய்யுங் கலங்கியே வாடி
பீடைப் பெருகிப் பெருந்துயர் கொண்டு
வாடியே கையும் காலது வசந்து
படுகுமோர் துன்பம் பற்றிய வார்கேள்
தடமெனுங் கெங்கை கரைதனக் கேகி
வந்ததோர் கன்னி நால்வருக் குள்ளே
தொந்த மாகவே தொடர்ந்தொரு முனியும்
மாதமு மூன்றாய் மருந்துயர்ப் படுத்தும்
போதவெப் பொருளும் போச்சுது சிலவாய்
ஆதர வாக யதனையுந் துறத்த
தோதியா யுனக்கு சொல்லுவேன் கேளு
கன்னியின் கோயிற் களிப்புடன் சென்று
யெண்ணியே வாரம் யேழது சுற்று
அண்ணலாம் முருகன் ஆலயம் சென்று
நண்ணியே விரதம் நாளுமே காக்க

வொரு குறவின்றி வோங்கியே வாழ்வாய்
வருதுமோர் பிணியை வடிவேலர் தீர்ப்பார்.

2-வது ஜாமம் ரிஷபத்தின் பலன்.

அன்புடன் தானும் அரையுமோர் ரிஷபம்
பண்புடன் ரெண்டாஞ் ஜாமத்தின் பலன்கேள்
மனதிலே ரெண்ணம், மருமமா வைத்து
வினவிய சேதி விளம்புவேன் கேளு
பொருளது வொன்று போனது முண்டு
இருளதாம் வீட்டில் யிருந்திடும் போது
திரளுமோர் கன்னி தான்வந்த துண்டு
நிறமது கருப்பு நேரிழை யாளும்
திறமதா யதனை தானவ ளெடுத்து
பூமியைத் தோண்டி புதைத்துமே வைத்தாள்
தாமது நிரிதி மூலையென் றறிவீர்
அந்தவோர் சொத்து அகத்தினுள் ளுண்டு
விந்தையா தனை வெட்டியே பார்ப்பீர்
இன்னொரு சேதி பியம்புவேன் கேளு
அன்னிய னுகும் அழுத்தமொரு நேசன்
உன்னையுங் கெடுக்க உளமதில் கொண்டு
எண்ணியே, மனையில் யிருந்துற வாடி
பண்ணிய திங்கை பகருவேன் கேளும்
நாலுகால் ஜீவன் நண்ணிய வொன்றை
கோலமா யவன்கை கொடுத்துமே யனுப்ப
மோசமா யதனை விற்றுமே யனுப்ப
கூசாம லுன்முன் வந்துமே கூற
அதிலொரு நஷ்டம் ஆச்சுதென் றறிவீர்
பதிபினி லவனுறவு பற்றறுத் திடுவாய்.

3-வது ஜாமம், ரிஷபத்தின் பலன்.

மூன்றதாம் ஜாமம் மோதுமோர் ரிஷபம்
தோன்றிய பலனை சொல்லுவேன் கேளும்
கவலையும் பெரிகிக் கனத்தமெய் சோர்ந்து
பவமதா யுந்தன் பாலகன் தனக்கு

வந்ததோர் பிணியின் வபணமே தென்று
சிந்தையில் நினைத்து சிறப்புடன் கேட்டாய்
அந்தவோர் குறையை அறைகுவேன் கேளும்
தொந்தமாய் நீரும் துலவது சென்று
விந்தைய தாக வரும்வழி தன்னில்
குந்திட நீயும் குழவியும் தாயும்
ஆல விருக்ஷத் தடியினி லய்யோ
கோலமா நித்ரை குழந்தையுங் கொள்ள
அலறியே பயந் ததுமுதற் கொண்டு
கிலியினால் வந்த கெடுதியென் றறிவீர்
வேண்டியே சாற்றி விளங்கிடச் செய்ய
தாண்டியே பிணியும் தானது பரக்கும்
அதுவு மில்லாமல் அலட்டுமோர் விசனம்
நிதியது சிலவாய் நேர்ந்தது உனக்கு
விதியதாய் கிரகம் வளத்துமே யுன்னை
சதியதா யுன்னைச் சாதிக்கு திப்போ
வர்த்தகத் தொழிலில் வரும்பெரு நஷ்டம்
பொருத்திட யின்னம் போகவோ ருண்டி
சகலமுந் தொலைந்து சஞ்சலந் தீரும்
அகமது தழைக்க அருமுகன் காற்பார்.

4-வது ஜாமம், ரிஷபத்தின் பலன்.

நாலதாம் ஜாமம் ரிஷபத்தின் பலனை
சாலவே விபரம் சாற்றுவேன் கேளும்
இல்லிடந் தன்னில் யிடறது வொன்று
வல்லிடி யாக வந்துமே யிப்போ
மாளாத் துயரம் மனதினிற் கொண்டு
கோளார் பட்டுக் குழம்பியே வாடி
இத்தனைத் துன்பம் இடையூ றெல்லாம்
பத்திய வாரைப் பரிந்துநீ கேட்டாய்
சொல்லுவேன் கேளு சோதனை யாக
வல்லமை யாக வாழ்குல தெய்வம்
தனக்குமே பூஜை தவர்ந்தது முண்டு

மனக்குறை யதினால் வந்துமே யுண்டு
தனமது சிலவாய் தவிக்குறாய் நீயும்
இனமதாய் தெய்வம் யிருப்பிடங் கேளும்
தீரோடுமே பள்ளம் நிறைந்த மான்சோலை
மேபராக வாழும் பிரபல தெய்வம்
அதற்கொரு பூஜை யன்புடன போட
இதக்கமாய் வந்த யிடரது தீரும்
இன்னொரு துயர மிருக்குது கேளும்
முன்னொரு மனிதன் மூலமாய்ச் சண்டை
தன்னுட நீயும் தானதைப் போட்டு
அந்தவோர் பயமும் அலட்டுதுன் மனதில்
சிந்தையா மதுவும் நிவர்த்தி யாகும்
கந்தரி னருளால் காசினி மீதே.

ரிஷப ஆரூடபலன் - முற்றிற்று.

1-வது ஜாமம், மிதுனத்தின் பலன்.

பிரியமுள மிதுனம் முதற்ஜாம மதனில்
அறியவே பலனை யன்புடன் கேளீர்
மார்பது வகண்ட மங்கையா ளொருத்தி
கூர்மையா யுன்மனைக் குள்ளுமே வந்து
தங்கமென் றேதும் தணிப்பொரு ளொன்றை
பொங்கமா யெடுத்து போனது முண்டு
அதுமுதற்கொண்டு அந்தவோர் கன்னி
சதியதாம் பிணியில் தானுமே சிக்கி
அச்சந் துற்குறியும் ஆகாதப் பீடை
லச்சையும் பட்டு ரொபவும் வாடி
இருக்குறாள் அவளும் யேகியே காண்பீர்
பெருக்கு முன் பந்து பெண்ணவ ளாகும்
களிப்பது வொன்று கன்னியாள் தனக்கு
செளிப்புடன் செய்ய தீருமப் பிணியும்
போனதோர் பொருளும் வாரது மில்லை
வனமாஞ் சிலவாய் யொழிந்ததென் றறிவீர்.

2-வது ஜாமம், மிதுனத்தின் பலன்.

ரெண்டதாஞ் ஜாமம் மிதுனத்தின் பலன்கேள்
அண்டியே நீயும் அடுத்ததோர் வேலை
பண்டுட னுனக்கு பலித மாகும்
விண்டிடும் மூன்று வாரத்திற் குள்ளே
இன்னொரு ஜீவனை யெண்ணிமே கேட்டாய்
பின்னியே பிணியும் பட்டுமே யதுதான்
ஆச்சுது திங்க ளாருமே யதுதான்
கோச்சார கிரகக் கோரத்தி னாலே
போச்சுதே யதுவும் புகலுவேன் கேளும்
கைக்குழ விக்கோர் கலகமு நேர்ந்து
மிக்கவோர் பொருளும் விரையம தாச்சு
சிக்கிய சினேகம் சிவத்தவ னாலே
நேர்ந்தது துன்பம் ரொம்பவு மவனால்
பேர்ந்தவன் நேசம் பிழையெனத் தள்ளு
சகலமு முனக்குச் சார்ந்துமே பலிக்கும்
பகலோனைக் கண்ட பனியது போலே.

3-வது ஜாமம், மிதுனத்தின் பலன்.

மூன்றதாம் ஜாமம் மிதுனத்தின் பலன்கேள்
தாண்டிய பொருளும் தான்வந்து கூடும்
அரசரால் கீர்த்தி யன்பது வுண்டாம்
வரிசையாய் பூமி வாழ்வது பலிக்கும்
குறைதா யின்னோர் கோளாறு கேளீர்
அரிவையா மொருத்தி யடுத்துற வாடி
வாதியா யுனக்கு வந்துமே தோன்றி
நித்தமும் போராய் நேறுது விப்போ
சுத்தமும் பந்தும் தூஷணை யாச்சு
அந்தவோர் நேசம் அகன்றிட வுனக்கு
விந்தையா யாவும் விளங்கிடும் பலிதம்
சிந்தையுங் களிக்க செல்வமு முண்டு
மனைவியாள் விரோத மகன்றிடு முனக்கு
கனியது போலே குழவியும் பிறக்கும்

நவக் கிரகங்கள் நாலுமே சுத்தி
துவக்கமாய் வருகத் துலக்கிடும் பாரே.

4-வது ஜாமம், மிதுனத்தின் பலன்.

நாலதாம் ஜாமம் மிதுனத்தின் பலன்கேள்
கோலமா மனதில் குறையது வுண்டு
அந்தவோர் குறையை அரைகுவேன் கேளும்
நிந்தையா யுன்மேல் நேர்ந்தது பழியும்
கூடியச் சினேகன் கோளது சொல்ல
வாடியே பிழைப்பு வழிந்துமே போச்சு
அது முதற்கொண்டு அலைகுறாய் நீயும்
விசனமே பெரிகி வேளைக்கோர் நினைவாய்
இருந்திடும் போது யிடிவந்தாப் போலே
பிரிந்துமே மனையாள் போனதோர் துன்பம்
இதுவெலாந் தீர யியம்புவேன் கேளும்
பூணூல் தெய்வம் பிரபல மாகத்
தோணுது வங்கே தொடுத்திடும் பூஜை
வேணவே யுந்தன் வினையெல்லாந் தீர
திங்கட் கிழமை தான்கொளு விரதம்
பொங்கமாய் வேலன் புகழது தருவார்.

மிதுனத்தின் பலன் - முற்றிற்று.

1-வது ஜாமம், கடகத்தின் பலன்.

ஆனதோர் பூமி தன்னிலே தோணும்
ஊனமா யுனக்கு ஓங்கியே துன்பம்
மனையிலுங் கலகம் மாராட்ட மாகி
வினையினு லச்சம் மரிட்டியு மாகி
ஆகாத கெவுளி யரையுதே தினமும்
சோகமாம் நித்திரை சொர்ப்பன மதிகம்
தீதாக வுன்னைத் தினமுமே வாட்டும்
வேதனை தன்னை விளம்புவேன் கேளாய்
காரிய மாகக் கடந்துபோய் வருகில்
தெரியாமல் கழுப்பை தானுமே மெரித்தாய்

மெரித்துபின் கண்டு மெத்தவும் பயந்தாய்
கருத்தினி லதுவே கலசம தாச்சு
விருத்தமாய்ப் பொருளும் வெகு செலவிட்டு
ஒருத்தரா லதுவும் ஒதுங்கவு மில்லை
ஓங்கியே திங்கள் ஒன்றது வொழிய
தீங்கது தீரும் திடமது கொள்வீர்.

2 - வது ஜாமம், கடகத்தின் பலன்.

கடகமாம் ரெண்டாஞ் ஜாமத்தின் பலன்கேள்
விசனமென் னளும் விளங்குதுன் மனதில்
வருவது வொன்றும் வருத்துமே யில்லை
பெருகுது பீடைப் பெருந்துய ராக
போனதோர் ஜீவன் நாலுகா லுள்ளது
தானதை யொருவன் தகித்துமே மரித்தான்
அதிலொரு சண்டை யாகியே யுனக்கு
நிதியது சிலவாய் நேர்ந்தபின் கேளு
ஆண்டு வொன்ருக அரும்பிணிக் கொண்டு
வேண்டிய அவிழ்தம் வேணதும் தின்று
தீராத வினையைத் தெரியவே கேட்டாய்
கூறுவே னதனை குறிப்புடன் கேளு
இருக்குமோ ரிடத்தை விட்டுமே பேர்ந்து
பெருக்குமோர் வடக்கு போகவே தீரும்
செல்வமும் பெருக சீரது வாகும்
தொல்லையு மகலும் துணைவடி வேலர்.

3 - வது ஜாமம், கடகத்தின் பலன்.

கடகமாம் மூன்றும் ஜாமத்தின் பலன்கேள்
தடையிலாப் பூமி தானது கிடைக்கும்
மூத்தவன் தமயன் மோசமே செய்தான்
சித்தமுங் கலங்கி சிதரியே நீயும்
அதுமுதற் கொண்டு அருவழக் கிட்டு
சதுருடன் நீயும் தானுமே கெலித்தாய்
இன்னொரு துயரம் இருக்குதுன் மனதில்
பின்னுமே யதனை புகலுவேன் கேளும்

தேசாந் தரமாய் தானதுப் போன
ஆசையுள் மைந்தன் அன்புடன் வருக
எண்ணியே நீயும் யிருக்குரா யிப்போ
நண்ணியே வருக நாள்செல்லு மவனும்
இருக்குமோர் திசையை யியப்புவேன் கேளு
தருக்குமாந் தெற்கு தானென வரிவீர்
அன்புட னுனக்கு அருளது கூட
பண்புரும் முருகன் பதந்தனைத் தொழுகே.

4-வது ஜாமம், கடகத்தின் பலன்.

நாலதாம் ஜாமம் நவிலுவேன் கடகம்
சீலமாம் பலனை சிறப்புடன் கேளீர்
சந்தோஷ மாக சதிருட னிப்போ
சிந்தையில் நினைத்த சேயவன் றனக்கு
விந்தைய தாக விவாகமுங் கூடும்
அந்தமா யப்பெண் இருப்பிடங் கேளீர்
சொந்தம தாகும் தென்மேற்கு மூலை
அதுவுமுன் பந்து ஆகவே வேண்டும்
இதமரும் அப்பெண் அடையாளங் கேளும்
மாநிற மாகும் மயிரது சுருட்டை
வேணவே பொருத்தம் விளங்கியப் பெண்தான்
பூணவே குடும்பம் புகழ துண்டாகும்
இன்னொரு கவலை யியம்புவே னுனக்கு
உன்னுடன் பிறந்தோன் வொருவனு முண்டு
தன்மையா யதனைத் தானது கலக்க
நன்மையா யனைத்தும் நலமது தருமே.

கடகவாரூடம் - முற்றிற்று.

1-வது ஜாமம், சிங்கத்தின் பலன்.

முதலாஞ் ஜாமம் சிங்கத்தின் பலனை
இதமதா யுனக்கு யியம்புவேன் கேளு
ஜீவன விஷயம் சிந்தையில் நினைத்து
ஆவலா யிப்போ அன்புடன் கேட்டாய்

சினேகித னொருவன் சேர்ந்துமே யிப்போ
அநேகமா யுனக்கு ஆசையை காட்டி
தெற்கதை நாடி தானது சென்று
நிற்கவே பொருளை நிந்தையாய் தோர்த்து
இல்லிடம் வந்து யிமிசையா யிப்போ
சொல்லதுத் தவறி துயரமும் படுகுறுய்
அடுத்தமே மெய்யில் அண்டிய பிணியும்
தொடுத்துமே யுன்னை தொந்தரை செய்யும்
பண்டித னிடத்தில் பரிந்துமே நீயும்
உண்டிட மருந்து உள்பிணித் தீரும்
விண்டிடும் நேசம் விலக்கிடு மவனை
பண்டுடன் சகலமும் பலித மாகும்.

2-வது ஜாமம், சிங்கத்தின் பலன்.

ரெண்டதாஞ் ஜாமம் சிங்கத்தின் பலன்கேள்
அண்டியே வுந்தன் அகத்தினுக் குள்ளே
கிரகமுஞ் சேர்ந்து கெடுதியா யிப்போ
வருகுமோர் துன்பம் வழுத்துவேன் கேளும்
அரிவையாள் கருவை அழிக்குது யின்னம்
வைரியாய் கினவும் வதைக்குது நாளும்
அதற்கொரு சாந்தி அறைகுறேன் கேளு
பணிகனைக் கொண்டு பார்த்திடத் தீரும்
அந்தயோர் மனையை அகன்றுநீ போக
சிந்தையில் நினைவு சரிவர வில்லை
பாலக னொருவள் படுகுறுன் துயரம்
சீலமாம் வசூரி சேஷ்டையா யிப்போ
அதிலொரு துன்பம் அவன் தனக்குண்டு
சதியதா யொருவன் செய்திடுந் தோஷம்
பதிபுகழ் மாரி யம்மனுர் தனக்கு
துதியுடன் பிரார்த்தினை தானது செய்யே.

3-வது ஜாமம், சிங்கத்தின் பலன்.

மூன்றதாஞ் ஜாமம் வோதுவேன் சிங்கம்
தோன்றியப் பலனை தொடுத்துமே யிப்போ

வெள்ளிக் கெதிரில் வந்தொழி மனைக்கு
உள்ளதும் தோற்று ஓங்கியே விசனம்
கொண்டுமே யிப்போ குழப்பமாய் மனதில்
விண்டிடு மென்று வினவியே கேட்டாய்
அவ்வோர் சேதி யுரைகுறேன் கேளும்
உந்தனுக் கொருவன் வுளவதா விருந்து
பண்ணிய மோசம் பாதையு மெத்த
இன்னொரு சேதி யியம்புவேன் கேளு
குழவியா மைந்தன் கொடுக் துபராகி
அழகிய மேனி யதுவுமே வாடி
படுகிற துயரம் பாதையுந் தீர
இடுமொரு கிரக சாந்தியு மிப்போ
அட்டவு டனுக்கு யாவுமே பலிக்கும்
கடவொரு திங்கள் காணுவாய் சுகமே

4-வது ஜாமம், சிங்கத்தின் பலன்.

சிங்கத்தின் நாலாஞ் ஜாமத்தின் பலன்கேள்
தங்கியே பிணியும் தாவது னுளாய்
பாதைகள் மெள்ள பட்டுமே வாராய்
சோதனை யாகச் சொல்லுவேன் கேளு
உனக்குமே முன்னால் ஒரு விஷந்தீண்டி
தனக்குமே வியாதி தானது பற்றி
அது முதற்கொண்டு ஆனவுன் மெய்யில்
நிதமொரு நோயாய் நீடிக்கு திப்போ
அடுத்தொரு நேசன் அன்புட னுனக்கு
கொடுத்ததோ ரவிழ்தம் குணமது யில்லை
புகலுவே னின்னோர் பெருந்துயர் கேளு
அகமதிற் கலகம் ஆட்டது விப்போ
வந்ததோர் கலகம் வளமதைக் கேளு
வந்தன் மனைவி யொருபொரு ளதனை
யீடதாய் கொடுக்க வாங்கினோர் தானும்
கேடதாய் மறைக்க கெடுதியென் றறிவீர்.

சிங்க ஆரூடபலன் - முற்றிற்று.

1-வது ஜாமம், கன்னியின் பலன்.

கன்னியா முதற் ஜாமத்தின் பலன்கேள்
நண்ணிய தெல்லாம் நவிலுவேன் கேளும்
வடக்கது மூலே வளம்பெருந் திக்கில்
இடக்கதாய் வந்த யிடரது தீரும்
கன்னியா ளொருத்தி கலகமுந் தீரும்
உன்னுடத் தமையன் உறவது வாவன்
செய்திடுந் தொழிலும் சித்தம தாகும்
வையக மீதில் வாழ்வது பெருகும்
மனைவியும் பிள்ளை மகிழுதுன் பெருவன்
தனமது போனது தான்வந்து கூடும்
கருத்ததோர் மனிதன் கண்ணில் பூவுள்ளான்
விருத்தமா யவனும் வந்துற வாடுவன்
அவனு னுனக்கொரு அடுக்குமோர் கீர்த்தி
கவனமா யவனைக் கைவிட வேண்டாம்
உள்ளதோர் கருத்து உறுதியு மாகும்
வள்ளி பங்காளன் வந்தருள் கூர்வன்.

2-வது ஜாமம், கன்னியின் பலன்.

கன்னியாம் ரெண்டாம் ஜாமத்தின் பலன்கேள்
பின்னியே வுனக்கு புகலுவேன் சகலம்
மனைவியா லுனக்கு மருத்தொரு சண்டை
வினையதா யதுவும் விளைந்துமே போச்சு
தாய்வீடு சென்று தானவள் தானும்
மேவியே வழக்கு முடிந்தது வுன்மேல்
இன்னொரு சேதி யியம்புவேன் கேளும்
உன்னுடன் பிறந்தாள் வொருத்தியு முண்டு
அன்னித மாக அவளையும் பழித்தாய்
மன்னிய வுந்தன் மனைவியால் தானும்
செய்தொழில் தன்னில் நேர்ந்ததோர் கலகம்
பையவே யிப்போ படுகுறுப் கஷ்டம்
கையதை விட்டுப் போனதோர் பொருளும்
ஐயம தாக யது வாரதில்லை

கழித்திடு மின்னம் திங்களு மாறு
செழித்திட வேலன் கிருபையும் புரிவார்.

3-வது ஜாமம், கன்னியின் பலன்.

மூன்றதாஞ் ஜாமம் மொழிகுவேன் கன்னி
தோன்றிய பலனை தொகுத்துமே கேளு
யாத்திரை யொன்று யன்புடன் போக
நேத்திய தாக நண்ணியே நீயும்
கன்னியா ளொருத்தி கை வசமாக
உன்னுடன் கூட உற்றதோர் துணையாய்
பத்தியே கேட்ட பலனது வுண்டு
எடுத்துமே யின்னம் மியம்புவேன் கேளு
நாடியே யின்னோர் ஜீவமாந் தனக்கு
கூடிய பிணியால் கொடுந் துயரிப்போ
பட்டுவோர் திங்கள் பாதையு மாச்சு
கெட்டியா யின்னம் கழித்திடும் வாரம்
அந்தவோர் பிணியும் அகன்றுமே போகும்
சுந்தரி னருளின் கடாட்சத்தி னாலே.

4-வது ஜாமம், கன்னியின் பலன்.

நாலதாஞ் ஜாமம் நவிலுமேவன் கன்னி
கோலமாம் பலனை குறிப்புடன் கேளீர்
சோரமாங் கன்னி யாலொரு துன்பம்
நேரமா யுனக்கு நேர்ந்தது முண்டு
தாரமா முனக்கு தானது ரெண்டில்
கோரமாம் பாதை கொடுந் துயருமுண்டு
பாலக னுந்தன் பதிதனை விட்டு
சாலவே போன சஞ்சல மொன்று
வீணதா யுனக்கு வந்தொரு சண்டை
ஊனமாம் பொருளும் வொழிந்தது கொஞ்சம்
பூமியிற் பலிதம் பொருந்தவு மில்லை
தாமத மாகத் தவிக்குறாய் நீயும்
உற்றதோர் மனிதர் உதவியு மில்லை
குற்றமா யுன்மேல் கொடும் பகையாச்சு

சனியவன் செய்த கொடுமையதாகும்
இனியொரு துன்பமு மில்லையென் றறிமய.

கன்னியாரூடம் - முற்றிற்று.

1-வது ஜாமம், துலாத்தின் பலன்.

சொல்லுவேன் முதற் ஜாமத் துலாத்தின்
நல்லதோர் பலனை நயந்துமே கேளீர்
வந்தது வுனக்கு வரும்பிணி கண்டம்
தொந்தமா யதுவும் துலைந்துமே போச்சு
புரியு முத்தியோகம் புகழது பெருகும்
பிரியமா யரசர் பேட்டியு முண்டு
மனைவியால் கொஞ்ச மரும்பொருள் சேரும்
இனமதாம் பந்து யாவரும் நேசம்
வந்துமே கூட வாழ்வது பெருகும்
அந்தமா மனையில் ஆகுமே சுபமும்
துலவது போனர் துரிதமாய் வருவார்
நலமதாங் கருத்தின் நாட்டமு முடியும்
மனதினி லின்னோர் மருமமு முண்டு
தனமது கேட்டோர் தானது வளிப்பர்
பிரியமாய் சகாயம் பிரபுவால் கூடும்
அறியவே வேலன் அருளதி னாலே.

2-வது ஜாமம், துலாத்தின் பலன்.

ரெண்டதாஞ் ஜாமம் துலாத்தின் பலன்கேள்
கொண்டதோர்கருத்தின் குறிப்பதைச்சொல்வேன்
மெத்தவுந் துன்ப மாகியே உனக்கு
சித்தமும் வாடி செய்தொழில் தவர்ந்து
கைப்பொரு ளெல்லாங் கனச் செலவாகி
தப்பித மாகத் தான் பிணிக்கொண்டு
இருக்குமோர் விதத்தை யியம்புவேன் கேளும்
சிரக்கவே யுனக்கு தானது விதிந்த
சுதனுட தோஷம் தொடுத்துமே யுன்னை

விசனமே படுத்தி வருகுது நாளாய்
அந்தவோர் பாலன் வளரவோ ராண்டு
சிந்தையுங் களிக்க ஜெபமது வாகும்
உத்தியோ கங்கள் உடனே வந்தணுகும்
நத்திய மனிதன் நலமதி னாலே
சமமதாய் வாழ்வாய் சஞ்சல மில்லை
குமரவேல் கிருபை கூடுமே தானே.

3-வது ஜாமம், துலாத்தின் பலன்.

மூன்றதாஞ் ஜாமம் துலாபலன் கேளீர்
தோன்றிய பலனை துலங்கிட விப்போ
ஆலயம் பதிக்கு அன்புடன் சென்று
சீலம தாகித் தான் வரும்போது
தொடர்ந்தொரு காத்து தோகையாள் தன்னை
அடர்ந்துமே துன்ப மலட்டுது விப்போ
கருவையும் வீணாய் கலக்கம தாக
மரிவியே திங்கள் யிரு நான்குவாக
இன்னமோர் சேதி யியம்புவேன் கேளு
சொன்னசொற் பிசகி சுவாமியின் சொற்றை
சிலவது யிட்டு சேனனு ளாச்சு
கலகமு மதுவோர் கருத்தையும் வாட்டும்
நம்பியே பிரார்த்தனை நடத்திநீ போடு
இன்பம தாக யாவுங்கை கூடும்
தொடர்ந்ததோர் காற்று துலைந்துமே போகும்
அடைந்திடுங் கருவு அரிவையர் தனக்கே.

4-வது ஜாமம், துலாத்தின் பலன்.

நாலதாஞ் ஜாமம் நவிலுவேன் துலாத்தின்
கோலமாம் பலனை குறித்திட கேளும்
கூடியே நாலவர் கூட்டுற வாகத்
தேடிய பொருளை தானது வைத்து
பிரியம தாக யிருந்திடும் போது
மரிவியே யொருவன் மோசமுஞ் செய்ய

ஆதிரை யுனக்கு வரணதோர் கஷ்டம்
சகியதா மின்னோர் சஞ்சலங் கேளீர்
பொருளது மொன்று போச்சுதுன் மனையில்
திரளவே குமாரன் தீண்டியே யெடுத்து
அன்புட னவனும் அழித்துமே போட்டான்
வயபதாய் போச்சு வாரது மில்லை
சிலவது வினையச் செய்துமே விட்டான்
நலமதா யொருவன் நம்பிக்கை யாலே
யேழரை நாட்டிச் சனியன் கொடுமை
தாழவே படித்தி தானவன் சென்றான்.

துலாம் ஆருடம் - முற்றிற்று.

1-வது ஜாமம், விருச்சிகத்தின் பலன்.

விருச்சிக முதற் ஜாமத்தின் பலன்கேள்
பரிஷ்கர மாகப் பகருவே னுனக்கு
கலகமா மொன்றை கருத்தினில் நாடி
நலமது தருக நண்ணியே கேட்டாய்
அந்தவோர் கலகம் அறையுவேன் கேளும்
முந்தியுன் மனையில் மூண்டுமே தானும்
மங்கைய ரிருவர் மயிர்பிடி சண்டை
அங்கனே நடந்து அதுவுமே யிப்போ
அரசரின் சமுகம் அடுத்ததி னாலே
வரிசையாய் செலவு வந்தது வுனக்கு
அது முதற்கொண்டு அந்தவோர் கன்னி
விசனமாம் பிணியும் வந்துமே யிப்போ
படுகுறுள் துன்பம் பரிகார மதுகேள்
ஆதியாம் வாரம் அடுத்தொரு கழிப்பு
சோதியாய் செய்ய தானது பரக்கும்
நீதியாய் வேலன் யிணையடி நம்பே.

2-வது ஜாமம் விருச்சிகத்தின் பலன்.

ரெண்டதாஞ் ஜாமம் விருச்சிகப் பலனை
கண்டித மாகக் கழருவேன் கேளும்

கோழையாம் மனமுங் குளப்பம தாக
வாழுமோர் மனையில் விளைந்ததைக் கேளு
கூட்டமாய்க் கூடி குடும்ப மொன்றாக
காட்டேரி பூஜை களிப்புட னீரும்
போட்டுமே வந்த நாள் முதலாக
வாட்டிய பிணியால் வருத்தம தாகி
இருக்குமோர் பாலன் தனக்குநீ கேட்டாய்
பெருக்குமோர் குற்றம் உரைக்குறேன் கேளு
குலதெய்வ மொன்று குருக்காக வந்து
நலியதை யகற்றி நாளுமே காக்கும்
அதற்கொரு பூஜை அன்புடன் போட
சதைக்குமோ பிணியும் தானது பறக்கும்
இன்பமாய்த் தொழிலும் ஆகுமே விர்த்தி
அன்புடன் முருகர் அருளதினாலே.

3-வது ஜாமம், விருச்சிகத்தின் பலன்.

மூன்றதாஞ் ஜாமம் விருச்சிகப் பலனை
தோன்றிய வாறு தொகுத்திடக் கேளும்
மங்கள மாக மனையது வாழும்
தங்கிய பயணம் தானது கூடும்
அடுத்ததோர் மனிதன் உதவியு முண்டு
யெடுத்ததோர் வேலை யேகமாய் பலிக்கும்
யின்னொரு ஜீவன் தன்னையும் நாடி
எண்ணியே கேட்ட தியம்புவேன் கேளு
வெளிதனிற் போயி வேணு நாளாச்சு
களிப்புட னவனும் கடுகென வருவன்
பிழைப்பினி லங்கோர் பெருந் துயராச்சு
குழப்பமா யுனக்கு கூறினான் சேதி
கைப் பொருளில்லா கலங்குறா னிங்கே
ஒப்பியே யனுப்ப உடனே வந்திடுவன்
தப்பித மொன்றும் தானது வில்லை
செப்பமாய் முருகன் செயலதி னாலே.

4-வது ஜாமம், விருச்சிகத்தின் பலன்.

நாலதாஞ் ஜாமம் விருச்சிகப் பலன்கேள்
சாலவே மாரித் தானது பொழியும்
வளவது பெரும் வாழ்வது உண்டாம்
அளகிய மனையாள் அருஞ்சுதன் பெருவாள்
பகைவனை வெல்வாய் பலித்திடும் பூமி
உகமையா யுந்தன் உறவினர் சேர்வர்
பாதைசெய் பிணியும் பரிவுடன் தீரும்
ஆதர வாக யரிவை தன்னாலே
போனதோர் ஜீவன் பிழைத்துமே வருகும்
ஆனதோ ருதவி யவன் தனக்குண்டு
இன்னமுந் திங்கள் ஏழது கழிக்க
நண்ணிய வேலை நலமது தருகும்
சிப்பியா மொருவன் சேர்ந்துற வாடி
தப்பித மாகத் தவர்ந்தனன் பொருளை
அரசரா லதுவும் அன்புடன் கூடும்
வரிசையாய் முருக னருளதி னாலே.

விருச்சிக ஆரூடபலன் - முற்றிற்று.

1-வது ஜாமம், தனுசின் பலன்.

அன்புடன் தனுசு ஆகுமே முதலாம்
பண்புரும் பலனை பகருவேன் கேளு
வெற்றியோ டின்னம் விளங்குமே கீர்த்தி
உற்றதோர் பந்தும் உறவது வாவர்
அவர்களா லுதவி யாகுமே யுனக்கு
தவரது யில்லை தாஷ்டிக னாவாய்
கேட்டதோர் பொருளும் கைதனிற் கூடும்
வாட்டமாய் வந்த வழக்கது வெல்லும்
கன்னியர் கவலை கடுகெனத் தீரும்
யெண்ணிய மேற்கு யேகினீ போக
சினமது வுனக்கு சீரியே வுண்டு
மனமதை விட்டு மகற்றியே போடு

காரிய முனக்கு கைகூடும் வரையில்
கூறிய வொருவர் சொல்தனைக் கேளு
மேவிய வுனக்கு மெய்திடுஞ் செல்வம்
சேவலின் கொடியோன் செயலதி னாலே.

2-வது ஜாமம், தனுசின் பலன்.

ரெண்டதாமு ஜாமம் தனுசின் பலன்கேள்
விண்டிடு முந்தன் வழக்கதைச் சொல்வேன்
பங்காளி நால்வர் பரிவுட னிப்போ
தங்கியே வழக்குத் தானது யெடுத்து
அடிபிடி சண்டை யானது முண்டு
கடிகியே வரசர் கைதனிற் சிக்க
நிதிபது சிலவாய் நேர்ந்துமே யிப்போ
விதிபதாய் மனமும் வெநத்துமே யிப்போ
பிணியது கொண்டு பெருந்துய ராச்சு
துணிவுள வொருவன் பேச்சைநீ நம்பி
அவனுமே யிப்போ அகன்றன னுன்னை
கவனமு முனக்கு கலங்கியே போச்சு
வழக்கது தானும் ஜெயிப்பது மில்லை
கொழுப்ப மாதா கொடுந் துயருண்டு
இது வெலாந்தீர யேகனுந் திங்கள்
கதியருள் முருகன் கடாட்சத்தி னாலே.

3-வது ஜாமம், தனுசின் பலன்.

மூன்றதாஞ் ஜாமம் தனுசதின் பலன்கேள்
தோன்றிய வாரை தொடுத்துரை செய்வேன்
சொற்பனங் கண்டு துயரம தாகி
விற்பன மாகும் விடிதியி லலறி
அதி முதலாக அரிவையாள் தானும்
மிதமிலாப் பிணியும் மெய்தனிற் கொண்டு
வேணதோர் காவு பூசையும் போட்டு
தோணமே செய்தும் துலையாத தாலே
மனமது வாடி வந்துமே கேட்டாய்

இனமதா யதற்கு இயம்புவேன் கேளாய்
வீரையன் தனக்கு விளங்கவோர் பூஜை
காரிய மா காப்பது கட்டு
பூவாடைக் காரி புகழுள தெய்வம்
தாவியே யவட்கோர் தனி பூஜைப்போடு
மங்கையின் பிணியு மகன் றுமே போகும்
செங்கதிர் வேலன் செயலதி னாலே

4-வது ஜாமம், தனுசின் பலன்.

நாலதாஞ் ஜாமம் தனுசதின் பலன்கேள்
சாலவே யுனக்கு சாற்றுவேன் விபரம்
பெண்ணதைக் குறித்து புகழுடன் கேட்டாய்
நண்ணிய வப்பெண் நலியது கொண்டு
திங்களும் மூன்ருய் தானது வாச்சு
மங்கையாள் தூர மருள்பிணி யாகும்
பண்டிதன் தன்னால் பாரவோர் பிணியும்
கொண்டிட அவிழ்தம் குடி விட்டு வோடும்
புத்திரா வுனக்கு புகழது வந்திடில்
சித்திபா மூன்று ஜெயமது கொள்வர்
விதனதயு முண்டு வெகு ஜெனப்பிரியம்
நத்திய சிம்நகன் நலமது புரிவன்
பலிக்குமே யுனக்கு பாலது பாக்கியம்
நிலைக்கவே வேலை யுத்தி யோகங்கள்
குலத்தினி லுனக்கு கீர்த்தி யுண்டாகும்
நிலததினில் வேலன் நல்லரு ளாலே.

தனுசு ஆருடம் - முற்றிற்று.

1-வது ஜாமம், மகரத்தின் பலன்.

மகரவாம் முதற் ஜாமதின் பலன்கேள்
விடரமாம் தனை விளம்புவேன் கேளு
கைபதை விட்டு கவர்ந்துமே போன
பையவப் பொருளும் பலிக்குமா வென்று

நண்ணியே நீயும் நயந்துமே கேட்ட
எண்ணிய பெண்ணம் யியம்புவேன் கேளு
ஊழிய னொருவன் வீட்டினி லிருந்து
கோழையாய பொருளை கொண்டுமே போனன்
தேடியே தெற்கு தானவ நடந்தான்
வாடிய பொருளும் வாரது மில்லை
கொண்டதோர் வழக்கும் ஜெயிப்பது மில்லை
அண்டையி லுனக்கு அரும் பகையுண்டு
புத்திர னென்று போச்சுது வீணாப்
ந[illegible]ிய வதனல் நஷ்டமுங் கொஞ்சம்
சித்தியா முனக்கு ஜெயமது வில்லை
பத்திய கோளின் பாதையி னாலே.

2-வது ஜாமம், மகரத்தின் பலன்.

ரெண்டதாஞ் ஜாமம் மகரத்தின் பலன்கேள்
கொண்டதோர் கருத்தை கூறுவே னிப்போ
ஜீவன விஷயம் தேடியே யொன்று
ஆவலா யொருவன் தன்னையு மடுத்தாய்
நித்தமோர் கெடுவு வைத்துமே வாரான்
பத்திய வொன்றும் பலனது மில்லை
முத்திய தொழிலை முனைந்துநீ போனல்
சிந்தையுங் களிக்க ஜெயமது வாகும்
உனக்கொரு வயிரி யொருவனு முண்டு
தனகருமே யஞ்சி தவிக்குறு யிப்போ
நேரதாய் நீயும் நாடியே போ
சீரதா யவனும் சிநேகித மாகும்
இச்சையாய ம[illegible]ளியூர் யேகவே நீயும்
வைச்சதோர் கருத்தை வகையறிடு நீயும்
படசயாய ஜாமம் மூன்றினுக் குள்ளே
அச்சம தகற்றி யருமுகன காப்பார்.

3-வது ஜாமம், மகரத்தின் பலன்.

பெரிகிய மூன்றாந் ஜாமத்தின் மகரம்
அறியவே பலனை யன்புடன் கேளீர்

கடனது பட்டுக் கலங்குறாய் நெஞ்சம்
உடன் பிறந்தவனும் உனக்குமே பகையாய்
எதிரியி னிடத்து யேகியே சேர்ந்து
பதரியே தூண்டி பாதையும் வித்தான்
அது முதற்கொண்டு அவஸ்த்தையு மாகி
விசனமே மனதில் வாட்டுது விப்போ
உனக்கொரு மனிதன் உதவியா யிப்போ
கனக்கவே வந்து கலந்துற வாவான்
அவனுமே வாழும் பதிதனைக் கேளு
புவனமாம் வட மேற்கது வாகும்
சிந்தையு மகிழ சேதியுங் காண்பாய்
வங்கயின் உனக்கு வருத்தமுந் தீரும்
நேர்த்தியாய் நாளு நாற்பதுஞ் செலல
பூர்த்தியாய் சகலம் பலிதம தாமே.

4-வது ஜாமம், மகரத்தின் பலன்.

நாலதாம் ஜாமம் மகரத்தின் பலனை
மேலதா யுனக்கு விளம்புவேன் கேளு
மனையிலுந் துன்பம் வான்பொருள் சேதம்
அன்னியாய மாக அடுத்தது விரோதம்
கச்சேரி யேரி கவலையும் பட்டாய்
அச்சமாய் செய்த தொழிலையுந் தோற்றாய்
கோளாறு மாக குணமது மாரி
தாளாமல் மெய்யில் தங்கியே பிணியும்
அகாலமாக அருந்தும போஜனமும்
விகாரமான வேஷமும் பூண்டு
திரிகுறா யிப்போ தீவினை யாலே
அரிவையாள் தன்னை அலையவே விட்டு
அஷ்டமச் சனியன் தொட்டுமே யுள்ளே
ஆட்டியே வந்தான் ஆண்டது ரெண்டாய்
விட்டுது துன்பம் வினையது தீரும்
அட்டி யில்லாமல் அருமுகன் காப்பார்.

மகர ஆரூடபலன் - முற்றிற்று.

1-வது ஜாமம், கும்பத்தின் பலன்.

கும்பமா முதற் ஜாமத்தின் பலனை
நம்பிக்கை யோடு நவிலுவேன் கேளு
ஆதார மாக அன்புடன் வாழும்
போதவே யுந்தன் புகழ்மனை தன்னில்
மங்கள மாக மணமது கூடும்
பொங்கமாய் கீர்த்திப் புகழது உண்டாம்
இன்னொரு சேதி யியம்புவேன் கேளு
அன்னிய னொருவன் அடுத்துமே யுன்னை
ஜீவன விஷயம் தானது கேழ்க்க
மேவியே வுப காரமுஞ் செய்தாய்
ஊனமா யவனும் உனக்குமே தீங்கு
தானுமே செய்து தொடுக்கானுன்
தடுத்தவர் சொல்லை தானுங் கேளாமல்
அடுத்து செய்நன்றி அவஸ்தைய தாச்சு
இனியவன் நேசம் தன்னையும் விலக்கு
சனியது போல கார்ப்பரே வேலன்.

2-வது ஜாமம், கும்பத்தின் பலன்.

ரெண்டதாஞ் ஜாமம் கும்பத்தின் பலன்கேள்
கண்டித மாகக் கழருவேன் விபரம்
குறையதாய் நீயும் கொண்டுமே மனதில்
அறியவே வந்த ஆபத்தைக் கேளீர்
பெரும் பிணிதானும் பிடித்துமே நாளாய்
வருந்தியே துன்பம் வாடுமோர் விதத்தை
தெறிந்திட வுனக்கு தானது சொல்வேன்
அறிந்திட வொருவன் அடுத்துமே சண்டை
வந்தது தீங்கு வரும்பிணி யுலக்கு
பந்தமா யவனும் பாதையும் விளைத்தான்
கருத்ததோர் நிறத்தான் கண்சிவப் புள்ளான்
திருத்தமா யவன்மனை வட மேற்குவாகும்
இப்பிணி தீர எடுவொரு கழிப்பு
செப்பிய தீங்கு தானது பறக்கும்

ஒப்பிய இன்னம் ஒரு திங்கட்குள்ளே
செப்பமாய் பரக்கும் சிவனருளாலே,

3-வது ஜாமம், கும்பத்தின் பலன்.

கேட்டதோர் மூன்றும் ஜாமத்தின் கும்பம்
நாட்டிய பலனை நவிலுவேன் கேளீர்
அரசரால் வுதவி அருளது பெருகும்
வரிசையாய் லாபம் வந்துமே யணுகும்
பெரியவ ரொருவர் நேசத்தினாலே
குறையிலாத் தொழிலும் கூடியே வருகும்
மங்கையாள் நேசம் மகிழு முண்டாகும்
பொங்கமாய் கேட்ட பொருளது வாகும்
இல்லற மொன்று வாங்குவாய் நீயும்
மெல்லியா ளாலே மிக நன்மையாக
வர்த்தக மேலாய் வந்துமே யணுகும்
கீர்த்தியா யுனக்கு கிளைத்திடும் புத்திரர்
புது வுரவொன்று புகழுடன் கூடும்
பதிபுகழ் வுந்தன் பக்தியினாலே
நிதிமிகச் சேரும் நிந்தையொன் றில்லை
கதிர்வடி வேலன் கடாட்சத்தி னாலே.

4-வது ஜாமம், கும்பத்தின் பலன்.

நாலதாஞ் ஜாமம் நவிலுவேன் கும்பம்
சீலமாம் பலத்தை செப்புவேன் சேரும்
குடும்பமுங் கலைந்து குறையதுப் பட்டு
இடும்பதா யிப்போ இமிசையு மாகி
அரிவையாள் பேச்சை யன்புடன் கேட்டு
பிரியமாம் நீயும் போனதி னாலே
கைப்பொருள் தோற்று கலங்குறாய் யிப்போ
ஒப்பிய தொழிலும் வொன்று மில்லாமல்
இப்போ தொருவன் தன்னையு மடுத்தாய்
செப்பிய வவனால் ஜெயமது வாகும்
கழித்திடும் நாளு இருபத்தி யஞ்சும்
செழித்திட வுனக்கு செல்வமும் பெருகும்

அந்தவோர் நேசம் அடுத்து கைவிடாதே
சிந்தையுங் களிக்க செய்குவன் உதவி
சுந்தரி னருளின் கடாட்சத்தி னாலே.

கும்ப ஆரூடம் — முற்றிற்று.

1-வது ஜாமம், மீனத்தின் பலன்.

மீனத்தின் முதற் ஜாமத்தின் பலனை
கவனமா யுனக்கு கழறுவேன் கேளு
கன்னிய ராசை கருத்தினிற கொண்டு
என்னேர மனதில் யேக்கம தாகி
பொன்னையுஞ் சில புரிந்துநீ யிப்போ
மன்னிய வாடி மனமது சலித்தாய்
இன்னொரு சேதி யியம்புவேன் கேளு
அன்னியர் மனையில் அருந்தி போஜனமும்
இருந்துமே யிப்போ யிமிசைய தாகி
வருந்திய மனைக்கு வந்துமே சேர்ந்தாய்
தந்தையின் உதவி தானது வாலே
விந்தையாய் மனமும் விளங்குமே யுனக்கு
அந்தவோர் கன்னி யானதோர் உறவாம்
வந்தபின் வுனக்கு வாய்க்குமே சுகமும்
பந்துக்கள தன்னை பகைத்துக் கொள்ளாதே
தொந்தமாய் வேலன் துணையது புரிவர்.

2-வது ஜாமம், மீனத்தின் பலன்.

ரெண்டதாஞ் ஜாமம் மீனத்தின் பலனை
பண்டுடன் விள்ளும் பரிட்சையைக் கேளு
யாத்திரைப் போக அருளது கூட்டும்
காத்திர மாகக் கதிரது விளையும்
பணியது செய்ய பாக்கிய முண்டு
துணையதா யுனக்கு துலங்கும் நேசத்தாலே
வருமொரு யெதிரி தன்னையும் வெல்வாய்
பெரிகிய வுந்தன் புகழ் திசையாலே
அநியாய மாக அகன்றவுன் பொருளும்

சாணியும் பூமி களிப்பது வுண்டு
சனிபது போலே கிடைக்குமே வந்து
வேணவே லாபம் வருகுமிவ் வாண்டில்
ஐந்து நல்லாண்டாம் அருங்கஷ்ட முனக்கு
வந்ததும் தீர்ந்து வழிப் படுவாய்நீ
சுக்கிரன் திசையும் சூழ்ந்தது விப்போ
தக்கதோர் வேலன் தன் னருளாலே.

3-வது ஜாமம், மீனத்தின் பலன்.

மூன்றதாஞ் ஜாமம் மீனத்தின் பலன்கேள்
தோன்றிய வாறு தொகுத்திடக் கேளு
இல்லிடந் தன்னில் யிடரு மொன்றுகி
வல்விடி யாலே வருத்தமும் பட்டு
தேசாந் தரமும் தானது போயி
வாசமா யிப்போ வந்துமே நீயும்
அடுத்துமே யுந்தன் அரமனை தன்னில்
நடத்திய கஷ்டம் நவிலுவேன் கேளு
அன்னத்திற் கூட அருங்கஷ்ட மிப்போ
தன்னையும் பட்டு தவித்துமே நீயும்
பந்துவி லொருவன் தன்னையு மடுத்து
உந்தனுக் கோர்தொழில் உறதியாய் கேட்டாய்
அதுவுமே யுனக்கு அன்புடன் கூடும்
நதியினி லுந்தன் சஞ்சலஞ் தீரும்
எண்ணியே வாரம் நாலது கழிக்க
அண்ணலா முருகர் அரு ளதினாலே.

4-வது ஜாமம், மீனத்தின் பலன்.

நாலதாஞ் ஜாமம் மீனத்தின் பலனை
சாலவே யுனக்கு சாற்றுவேன் கேளுநீ
காரியம் விர்த்தி காண்பது கீர்த்தி
கூறிய தெல்லாங் குணமது வாகும்
தொடுத்ததோர் வேலை துலங்கிடு மிப்போ
அடுத்ததோர் நேசன் அருளது வுண்டு
மங்கள மாக மனையது வாழும்

தங்கிய பந்து தானுற வாகும்
போனதோர் பொருளும் புகழுடன் சேரும்
ஆனதோர் மெய்யின் அரும்பிணி தீரும்
மாடுடன் மனையும் மகிழ்வுடைய தாகும்
வாடிய மனையாள் வருத்தமுந் தீரும்
புத்திரர் வாழ்க்கை புகழ்ந்து வுண்டு
சுத்தமா யுன்பேர் சூழுமே புவியில்
மேலகாம் நல்ல காலம தாச்சு
வேலவன் கிருபை விளங்கிடும் பாரே.

ஜெயமுனிவர் ஆருடபலன் - முற்றிற்று

இனி வால்மீகர் ஆரூட சாஸ்திரம்.

உ

பரமபதி துணை.

வால்மீகர் ஆருட சாஸ்திரம்.

வால்மீகர் ஆருட சாஸ்திரம் அறிவது எவ்விதமென்றால், அடியிற்கண்ட இன்னகாரியத்திற்கு வந்தேனென்றுசொல்லி மின்பக்கத்தில்கண்ட (இராசினிலே சக்கரத்தில்) ஒருவீட்டை தொட்டு காண்பித்து அடியிற்கண்ட இன்னகாரியமென்று சொன்ன வரியின் நெம்பருடைய பாடலே வாசித்தால் விவரமாகத் தெரிந்துக் கொள்ளலாம்.

ஒரு காரியத்தைக்குறித்து முடியும் முடியாதென்பது ... 1
ஒருபொருளைக் கையில்மூடி வலக்கை இடக்கை என்றறிவது ... 2
போக்கடித்தபொருள் எடுத்தவர்ஆண்பிள்ளை பெண்பிள்ளை என்றறிவது 3
பொருளெடுத்தவர் உள்ளூர் அயலூர் தன்னைச்சேர்ந்தவரென்றறிவது 4
அளவு—நெடியவர் குறியவர் சமமுடையவரென்றறிவது ... 5
நிறம்—வெண்மை சிவப்பு கருப்பு என்றறிவது ... 6
போனபொருள் குறுகியது நெடியது சமரச வஸ்துவென்றறிவது 7
வந்தவருக்குள் இன்னார் எடுத்தாரென்பது ... 8
போனபொருள் கிடைக்கும் கிடைக்காதென்றது ... 9
விவாகத்திற்கு பெண்கேட்க போகுமிடத்தில் கூடுமா கூடாதா... 10
விவாகஞ்செய்ய நன்மை தின்மை என்றறிவது ... 11
பெண்ணுக்கு குழந்தை உண்டு இல்லை என்றறிவது ... 12
பிறக்கும் குழந்தை ஆண் பெண் என்றறிவது ... 13
பிறக்கும் குழந்தை சிவப்பு கருப்பென்றறிவது ... 14
இன்று மழையுண்டா இல்லையாவென்றறிவது ... 15
கிணறுவெட்ட நன்மையாவென்பது ... 16
பூமியில் விதை விதைத்தால் பலிதமாகுமா வென்பது ... 17
போட்டிருக்கும் பயிர்கள் விளையுமா வென்பது ... 18
வியாபாரஞ் செய்ய லாபம் கிடைக்குமா வென்பது ... 19
உத்தியோகம் கிடைக்குமா கிடைக்காதா வென்பது ... 20
படிக்கவைத்தால் கல்வி வருமா வென்பது ... 21
சிறையிலிருப்பவன் விடுதலையாவானு வென்பது ... 22
கலகம் உண்டு இல்லை யென்பது ... 23
சண்டை வெற்றி தோல்வி அறிவது ... 24
ஒருவன் இறந்தது உண்மை யென்றறிவது ... 25
வியாதி நீங்குமா நீங்காதா வென்பது ... 26
வீடுகட்ட நன்மை தீமை யென்றறிவது ... 27
வீடு குடிபோக நன்மை தின்மை யென்றறிவது ... 28
ஊர்பயணம் போக நன்மை தின்மை யென்றறிவது ... 29
ஊருக்குப் போனவர் வருவாரா வென்றறிவது ... 30

உ

பரமபதி துணை.

வால்மீகர் அருளிச்செய்த

ஆரூட சாஸ்திரம்.

இராசி நிலைச் சக்கரம்.

கெற்பம் மீனம்.	துவாரம் மேஷம்.	வாமியம் ரிஷபம்.	கெற்பம் மிதுனம்.
வாமியம் கும்பம்.	இந்த ராசிநிலைச் சக்கரத்தில் கெற்பம்-துவாரம் -வாமியமென்று ஆராய்ந்து அறிந்துக்கொள்ளவும்.		துவாரம் கடகம்.
துவாரம் மகரம்.			வாமியம் சிங்கம்.
கெற்பம் தனுசு.	வாமியம் விருச்சிகம்.	துவாரம் துலாம்.	கெற்பம் கன்னி.

கடவுள் வணக்கம்.

உலகமுதற்பொருளை யும்பர்க்குணர்வரிதாம்பொருளை
ஓதியவேதாகமத்தி னுச்சியினுட்பொருளைப்
பலகலையின்பொருள்முடிவின் முடிவானபொருளைப்
பற்றப்பற்றியபெரியோர் பரவியவான்பொருளை
அலைதிரைநுரைகடலி னுதித்தொடுங்குமாபோ
லகிலாண்டமுதித்தொடுங்கு மனதின்மூலப்பொருளை
இலகிய சற்குருவாகி யாளுகும்பொருளை
யெங்குமாம்பரம்பொருளை யாம்வணங்குதுமே,

இராசி நிலைகளாவன.

தனுசொடு மீனங்கன்னி சாற்றிய மிதுனங்கெற்பம்
மனதுலாங் கடகமேடம் மகரதுமே துவாரமாகும்
இனியதேள் கும்பஞ்சிங்க மிடபம்வா மியமதாகுங்
கனியதேன்குழலினளே கண்டுகொள்குறிப்பாய்தானே.

(இ-ள்.) இனிய விசைபாடி வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய பெண்ணே, தனுசு-மீனம் - கன்னி - மிதுனம் - இந்த நான்கும் கெற்பம். துலாம் - கடகம் - மேஷம் - மகரம் இந்த நான்கும் துவாரம். விருச்சிகம்-கும்பம்-ரிஷபம்-சிங்கம் இந்த நான்கும் வாமியம். இவ்விராசி நிலை பன்னிரண்டும் மூன்று விதமாய்ப் பகுத்திருப்பதால் இதை நன்றாய்க் குறிப்பாய்க் கண்டுகொள் மாதே—எ-று.

ஒரு காரியத்தைக் குறித்து.

மனதினி லுன்னி மகிழ்ந்தொரு காரியம்
நினைத்த தாகும் நிறைகெற்ப மாகிடின்
சினத்த வாமியஞ் சேரநோய் செய்திடும்
கனத்த வாரமுங் கைவரத் தாகுமே.

இ-ள். ஒருவன் ஒருகாரியத்தை உத்தேசித்து மகிழ்ச்சியோடு கேட்பானாகில் அவனை இதிற்கண்ட இராசிச் சக்கரத்தைத் தொடச்சொல்லி செய்யுளிற்கண்ட பலாபலனைச் சொல்லவும். (அதாவது) தொட்டது கெற்பமாகில் நினைத்த காரியம் முடியுமென்றும், வாமியமாகில் நோய் செய்யுமென்றும், துவாரமாகில் கைவசமாகுமென்றுஞ் சொல்வாயாக-எ-று. (1)

ஒரு பொருளைக் கையில் மூடியறிவது.

ஒரு பொருளதைக் கைதனில் மூடியே
இருகை தன்னி லிருக்குங்கை யேதெனின்
மருவுங் கெற்பந் துவாரம் வலக்கைதான்
இருக்கும் வாமியம் இடக்கை யென்றேமொழி.

(இ-ள்) ஒருவன் ஒருபொருளைக் கையில்வைத்து இரண்டுகையையும் மூடிக்கொண்டு இப்போது எந்த கையிலிருக்கிறதென்று கேட்பானாகில் கெற்பமும் துவாரமுமானால் வலக்கையென்றும் வாமியமானால் இடக்கையென்றுஞ் சொல்லுக. (2)

போக்கடித்த போருளேடுத்த தாரேன்றறிக.

இன்னமும் பொருளேந்திய தாரெனிற்
றுன்னுங் கெற்பந் துவாரம தாயிடின்
உன்னிச் சென்றமு னுற்றவாண் கொண்டனன்
பின்னும் வாமியம் பெண்ணவள் கொண்டதே.

இ-ள்.) ஒருவன் தான் போக்கடித்த பொருளை யெடுத்த தாரென்று கேட்பானாகில், கெற்பமும் துவாரமுமானால் ஆண்பிள்ளை யெடுத்தானென்றும், வாமியமானால் பெண்பிள்ளை யெடுத்தாளென்றுஞ்சொல்—எ-று. (3)

எடுத்தவர் உள்ளூர் அயலூரேன்றறிய.

கொண்ட பெண்பிற வூரவள் வாமியம்
எண்டு வார மதித்தலத் துள்ளவர்
அண்டிக் கெற்ப மடுத்தவன் கொண்டனன்
கண்டு தானிக் களவை யளவிடே.

இ-ள். பொருளெடுத்தவர் உள்ளூரா அயலூரா வென்று வினவில், வாமியமானால் அயலூர்ப்பெண் கொண்டாளென்றும், துவாரமானால் உள்ளூரிலுள்ளவர் கைக்கொண்டாரென்றும், கெற்பமானால் தன்னைச்சேர்ந்தவர் கொண்டாரென்றும் புகலவாயாக—எ-று. (4)

அளவு அறிவது.

அளவு தன்னை யறிய வினவிடில்
அளவு தானதும் வாமிய மாகுமே
அளவு கெற்பங் குறியது வாரமாம்
அளவு தன்னை யறிந்து குறித்திடே.

இ-ள். அளவு சொல்லுமிடத்து நெடியரோ குறியரோ சமமுடையவரோவெனில் வாமியமானால் நெடியவரென்றும்,

கெற்பமானுல் குறியவரென்றும், துவாரமானுல் சமானமானவரென்றும் குறிப்பாய்ச் சொல்லவும்—எ-று. (5)

நிறமறிவது.

என்னு மென்னிற மேதுரைப் பாயெனில்
மின்னு கெற்பம் வெளுப்பென லாகுமே
மன்னு வாரமோ மஞ்சள் சிவப்பெனுங்
கன்னி வாமியங் கார்நிறம் பச்சையே.

(இ-ள்) நிறம் என்னவென்று கேட்டால் கெற்பமாகில் வெண்மை, துவாரமாகில் மஞ்சள் - சிவப்பு, வாமியமாகில் கறுப்பு-பச்சையென்று விள்ளவும்—எ-று. (6)

குறியது நெடியது அறிய.

குறிய தோடு நெடிய குறித்திடிற்
றறுமைதா னென்னுங் கெற்பம தாகுமே
நெறிகொள் வாமியஞ் செப்பில் நெடிதெனும்
மறு துவார மளவுதா னுள்ளதே.

(இ-ள்.) போனபொருள் சின்னதா அல்லது பெரியதா சமமானதாவென்று கேட்கில், கெற்பமானுல் - குறியவஸ்துவென்றும், வாமியமானுல்-நெடியவஸ்துவென்றும், துவாரமானுல்-சமரசமென்று மொழியவும்—எ-று. (7)

வந்தவருக்குள் இன்னுரேன்றறிய.

மன்ன ரின்ன ரெனப்பொருள் சொல்லெனத்
துன்னு கெற்பந் துவாரம தாயிடில்
உன்னி வந்திங் கிருந்தவன் கொண்டனன்
பின்னர் வாமியம் பெண்ணவள் கையிலே.

இ-ள்.) வந்தவருக்குள் யாரெடுத்தாரென்று தேட்கில் கெற்பமுந்-துவாரமுமாகில் வந்தவருக்குள் ஆண்பிள்ளை எடுத்துவைத்திருக்கிறுனென்றும், வாமியமாகில்-பெண்பிள்ளை எடுத்துவைத்திருக்கிறுளென்றுஞ் சொல்வாயாக—எ-று. (8)

கிடைக்கும் கிடையா தேன்றறிக.

கெட்ட வஸ்து வருமெனக் கேட்பரேல்
நட்ட மில்லை நலந்தருங் கெற்பத்தில்
விட்டது வாரமோ மீளவுங் காணலாம்
கட்ட வாமியங் காண்பது மில்லையே.

(இ-ள்.) போனபொருள் கிடைக்கும்கிடைக்காதாவென்று கேட்கில், கெற்பமானல் - அந்தப் பொருளுக்கு நஷ்டமில்லை கிடைக்கும், துவாரமானல்-ஒருவாரத்துக்குள் மீண்டுங் காணலாம், வாமியமானல்-கண்ணிற் காணமாட்டாதென்றுஞ் சொல்லுக—எ-று. (9)

பெண் கேட்கப் போக.

மங்கை தன்னை மணஞ்செயப் பேசிடிற்
பொங்கு வாமியம் போகவுங் கிட்டுமே
தங்கது வாரமோ தையல்சேர ராளெனும்
வெங்கு கற்பம் விசன முண்டாகுமே.

(இ-ள்.) ஒருபெண்ணை நினைத்துக்கொண்டு அப்பெண் இந்தமணமகனுக்குக் கிடைக்குமாவென்று கேட்பாராகில், வாமியமானல்-போனவுடனே பெண்கிடைக்குமென்றும், துவாரமானல்-அந்தபெண் சேராளென்றும், கெற்பமானல்-சண்டைச்சரவினல் மனதுக்கு விசனமுண்டாகுமென்றுஞ்சொல்-எ-று.

கலியாணஞ் செய்ய.

மணமது செய்ய வந்தவர் கேட்பரேற்
குணமது கெற்பங் கொள்வது நன்மையாம்
பணமது வாரம் பற்றிடிற் றுக்கமாம்
க்ஷணமது வாமியஞ் சார்வது மில்லையே.

(இ-ள்.) கலியாணஞ் செய்யலாமாவென்று வந்தவர் கேட்பாராகில், கெற்பமானல் - உடனே கலியாணஞ்செய்யலாம், அதினல் குணமும் நன்மையும் உண்டாகுமென்றும், துவாரமானல்-இப்போது நடக்காதென்று புகல்வாயாக-எ-று. (11)

குழந்தை உண்டு இல்லையென்றறிய.

மக்கட் பேறு வருந்தி வினவிடின்
மக்கள் வாமியம் மெய்யே மலடியாம்
மக்கள் துவாரம் பெறுவர் மரித்திடும்
மக்கள் கெற்பம் பெறுவர் மதிக்கவே.

(இ-ள்.) இந்தப் பெண்ணுக்குப் பிள்ளைகள் உண்டாவென்றுகேட்பாராகில், வாமியமானால் - மலடியென்றும், துவாரமானால்-குழந்தை பிறந்து இறந்துவிடுமென்றும், கெற்பமானால்-யாவரும் மதிக்கத்தக்க குழந்தையைப்பெருவாளென்று சொல்ல.

குழந்தை ஆண் பெண்ணென்றறிய.

உற்ற கெற்ப முரைத்திடி லாணெனும்
மற்ற வாமிய மென்பது மங்கையாம்
பற்ற துவாரம் பலியாக் கெடுதியே
கர்த்தன் சொன்ன கருத்தென் றறியுமே.

(இ-ள்) குழந்தை ஆண் பெண்ணென் றறியவேண்டுமென்றுகேட்பாருகில், கெற்பமாகில்-ஆண்குழந்தைபிறக்குமென்று வாமியமாகில்-பெண்குழந்தை பிறக்குமென்றும், துவாரமாகில் கருப்பங்கலங்கி சிதைந்துபோமென்று மொழிபவும்—எ-று.

குழந்தை சிகப்பு கறுப்பென்றறிய.

வெள்ளைக் கற்பம் விரைந்து கறுக்குமே
தெள்ளிவ் வாமிய முள்ளுஞ் சிவக்குமே
பொள்ளைத் துவாரம் பொருந்தி வெளுக்குமே
கள்ளரிக் குழலே யிதைக் கண்டுகொள்.

(இ-ள்.) பிறக்கிறகுழந்தை அல்லது பிறந்திருக்கிறகுழந்தை சிகப்பா கறுப்பாவென்று கேட்கில், கெற்பமானல்-கறுப்புநிறமுள்ள குழந்தையென்றும், துவாரமானல்-வெள்ளைநிறமுள்ள குழந்தையென்றும், மதுவுண்டிசை பாடும் வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடையமாதே யிதைக்கண்டு சொல்வாயாக. ()

மழை வருங் குறிப்பறிய.

பெய்யுந் துவாரம் பெருமழை பெய்திடும்
மையும் வாமியம் நற்றுளி யில்லையே

உய்யுங் கெற்பமொரு மழை யுண்டெனும்
அய்யன் மெய்ய னறிய வுரைத்ததே.

(இ-ள்.) இன்று மழையுண்டா இல்லையாவென்று கேட்கில், துவாரமானால்-பெருமழை பெய்யுமென்றும், வாமியமானல்-துளிகூட மழை பெய்யாதென்றும், கெற்பமானல் ஒரு மழை பெய்யுமென்றுஞ் சொல்லுக—எ-று. (15)

கிணறு வெட்ட.

கிணறு வெட்டக் கிளத்தி யுரைத்திடில்
உணருங் கெற்பத்தி லூற்றநீர் தானில்லை
மிணருந் துவாரத்தில் மெத்தவே நீருண்டு
கணறும் வாமியங் கல்லும் மண்ணாய்வரும்.

(இ-ள்.) கிணறு வெட்டவேணுமென்று கேட்பாருகில் கெற்பமானல்-ஊற்றுநீர் அருந்தலா யிருக்குமென்றும், துவாரமானல்-மெத்தத் தண்ணீருண்டென்றும், வாமியமானல்-கல்லும் மண்ணுக வருமென்று மொழி—எ-று. (16)

வித்து விதைக்க.

பூமி தன்னில் பொருந்த விதைத்திடில்
பூமி கெற்பத்திற் பொன்னேர்தி வாழலாம்
பூமி துவாரம் பொலிவரை சாற்றுமே
பூமி வாமியம் பொன்றிடுங் கண்டிடே.

(இ-ள்.) பூமியில் விரை விதைக்க வேண்டுமென்று வினவில், கெற்பமாகில்-விளைவாகி யதினுல் அதிக திரவிய லாபங் கிடைக்கும், துவாரமாகில்-அரைவாசி விளையும், வாமியமாகில் பயிர்கள் சாவியாய்ப் போகுமென் றுறைக்கவும்—எ-று. (17)

விளைவு கேட்க.

விளைவு தன்னை விரும்பி யுரைத்திடில்
தனையுக் கெற்பந் தழைந்து விளையுமே
புனையில் வாமியம் போத விளையுமே
பனைய துவாரமும பாதிபிற் பாதிபோம்.

(இ-ள்) பேர்ட்டிருக்கும் பயிர்கள் விளையுமா விளையாதாவென்று வினவில், கெற்பமானல் நன்றாய்ச் செழித்து விளையு

மென்றும், வாமியமானல் திடமாக விளையுமென்றும், துவாரமானல்-கால்வாசி விளையுமென்றுஞ்சொல்லுக—எ-று. (18)

வியாபாரஞ் செய்ய.

வாணி பத்தை மகிழ்ந்து வினவிடில்
ஊணி வாமியம் ஒத்தது ரெட்டியாம்
தீணி யோடு துவாரமும் மத்திபம்
பேணிக் கெற்பம் பெறுவதொன் றில்லையே.

(இ-ள்.) வியாபாரஞ்செய்ய லாபங் கிடைக்குமாவென்று வினவில், வாமியமானல் - ஒட்டிக்கிரெட்டி லாபங்கிடைக்கு மென்றும், துவாரமானல் - மத்திபமென்றும், கெற்பமானல் - ஒன்றுங் கிட்டாதென்றுஞ் சொல்வாயாக—எ-று. (19)

மணியம் அல்லது உத்தியோகஞ் செய்ய.

மணியந் தன்னை மகிழ்ந்து வினவிடில்
மணியம் வாமியம் வருமே யவர்க்கெனுந்
துணியுங் கெற்பமோ தூர வருமெனும்
பணியுந் துவாரம் பலியாது நாளுமே.

(இ-ள்.) மணியம் அல்லது வேலை கிடைக்குமா கிடைக்காதாவென்று வினவிடில், வாமியமானல்-அவன் கோரிய வேலை கிடைக்குமென்றும், கெற்பமானல் - கொஞ்சவேளையிற் கிட்டுமென்றும், துவாரமானல்-பலிக்கமாட்டாதென்க-எ-று. (20)

கல்வி படிக்க.

கல்வி தன்னைக் கடுக வினவிடிற்
கல்வி துவாரங் கடுக வருமெனுங்
கல்வி கெற்பங் கடுஞ் செவியேபுகாக்
கல்வி வாமியங் கற்றவ மாகுமே.

(இ-ள்.) படிக்கவைத்தால் கல்வி வருமாவென்று கேட்கில் துவாரமானல்-சீக்கிரம் கற்றுக்கொள்வானென்றும், கெற்பமானல்-கல்வி காதிலே நுழையாது வாசிக்கமாட்டானென்றும், வாமியமானல்-கற்றும் பிரயோசன மில்லையென்றும் சொல்லுவாய்—எ-று. (21)

சிறை விலக்க.

சிறையை யுன்னியே சிக்கெனக் கேட்டிடில்
சிறையிற் கெற்பஞ் சிறையாந் திண்ணமே
சிறையிற் றுவாரஞ் சிறைதா விடும்விடுஞ்
சிறையில் வாமியாஞ் சீர்பிற கெய்துமே.

(இ-ள்.) சிறைச்சாலையி லகப்பட்டிருக்கிறவனுக்கு விடுதலை யாகுமாவென்று கேட்டிடில், கெற்பமாகில் - சிறையிலேயிருப்பது திண்ணம் துவாரமாகில்-விடுதலையாகும், வாமியமானல்-கொஞ்சவேளையில் விடுதலையாகுமென்று புகலவும்-எ-று. (22)

கலகம் அறிய.

நாடு கலகம் நமக்கு முண்டோவெனிற்
கேடு மில்லையே கெற்பம தாயிடிற்
போடுவ துவாரத்திற் போயது மீளுமே
மாடு கேடென்னும் வாமிய மாகிலே.

(இ-ள்.) கலகம் உண்டோ இல்லையோவென்று கேட்பாராகில், கெற்பமானல் - கலகமில்லையென்றும், துவாரமானல்-கலகம் போய் மீளுமென்றும், வாமியமானல்-கலகம் உண்டென்றுஞ் சொல்லுக—எ-று. (23)

சண்டையில் வெற்றியறிய.

வெட்டுஞ் சண்டை விரும்பி யுரைத்திடிற்
கட்டுங் கெற்பங் கரும்படை தோல்வியாந்
தட்டும் வாமிந் தன்படை வெல்லுமே
முட்டுந் துவார மிருவரு மொத்துப்போம்.

(இ-ள்.) சண்டையில் வெற்றி தோல்வி தெறியவேண்டுமென்றால், கெற்பமாகில் - தோல்வியென்றும், வாமியமாகில் - தன்படை வெற்றியடையுமென்றும், துவாரமாகில்-இருவரும் சமாதானமாக ஒத்துப்போவீர்களென்றுஞ்சொல்வாயாக-எ-று

இறந்தது உண்மையா வென்றது.

உன்னிச் சென்றங் கொருவ னிறந்திடின்
மன்னுங் கெற்பம் மறித்தது மில்லையென்

றுன்னித் துவார முறத்த மரணமாம்
இன்னும் வாமிய மிறந்தது திண்ணமே.

(இ-ள்.) ஒருவன இறந்தது உண்மையாவென்று வினவில் கெற்பமானால்-நீ எண்ணின மனிதனிருக்கிறானென்றும், துவாரமானால்-பலத்த மரணமென்றும, வாமியமானால்-அவன் இறந்தது நிக்ஷயமென்று சொல்லவும்—எ-று. (25)

பிணிக்குறி அறிய.

நோய்க டன்னை யொருவ னுரைத்திடில்
நோய்க ளில்லையாங் கெற்பம தாயிடில்
நோய்கள் முத்தி யழிக்திடும் வாமியம்
நோய் கொண்டாற்கு மரணந் துவாரமே.

(இ-ள்.) வியாதி நீங்குமாவென்று கேட்பாராகில் கெற்பமாகில்-நோய் நீங்குமென்றும், வாமியமாகில்-வியாதிமுத்தி மேனி மெலிந்து மிகவருந்தி பின்பு சவுக்கியமாகுமென்றும், துவாரமாகில்-பிணியதிகரித்து தணியாது மரணமாகுமென்று சொல்லவும்—எ-று. (26)

வீடு கட்ட அறிய.

இல்லங் கட்ட விசைந்து வினவிடில்
இல்லம் கெற்ப மியல்போ டிருக்கலாம்
இல்லத் தேகி விறப்பவர் துவாரமே
இல்லம் வாமிய மிருவர்நோய் பூசலே.

(இ-ள்.) வீடுகட்ட உத்தேசித்து வினவில், கெற்பமானால்-மங்களகரமாய் மனோகோலலாமென்றும், துவாரமானால் - வீடு கட்டப்போகில் மரணமென்றும், வாமியமானால்-புருஷன் பெண்சாதி யிருவருக்கும் சண்டை சச்சரவு வியாதியு முண்டாகும்—எ-று. (27)

வீடு கட்டிக் குடிப்புக அறிய.

வீடு கட்டிக் குடிப்புகக் கேட்பரேல்
நாடு கெற்பம் நலத்தோ டிருக்கலாம்
வாடுஞ் சிந்தை வருத்தந் துவாரமிப்
பாடு வாமியம் பன்னோ யுண்டாக்குமே.

(இ-ள்.) வீடுகட்டிக் குடிப்புகவாவது அல்லது வேறே வீட்டுக்குப் போகவாவது கேட்பரேல், கெற்பமாகில் - நன்மை

போகலாமென்றும் துவாரமாகில்-போனால் மனவியாகூலமுண்டாகுமென்றும், வாமியமாகில்-வியாதிவரும் போகவேண்டாமென்றுஞ் சொல்லுவாயாக—எ-று. (28)

ஊர்ப் பயணம் போக.

வழியை யுன்னி வருந்தி வினவிடில்
ஒழியுந் துவாரம் தூருக்குப் போமெனும்
மொழிய நோய்கொளும் போனிடம் வாமியம்
அழியுங் கெற்பங் கொடித்தடை போகிலே.

(இ-ள்) ஒருவன் ஊர்ப்பயணம்போக உத்தேசித்துக்கேட்பானாகில், துவாரமானால்-பிரயாணம் போகலாமென்றும்; வாமியமானால் - போனவிடத்தில் வியாதி யுண்டாகுமென்றும், கெற்பமானால் - கொடித்தடையா யிருப்பதால் போகக்கூடாதென்றுஞ் சொல்லுக—எ-று. (29)

ஊருக்குப் போனவர் வரவு அறிய

போனவர்வரவுகேட்கிற் பொருந்தியே யிருப்பர்கேற்பம்
ஆனதோர் வாமியத்தி லமர்ந்துபின் வருவாரென்றுங்
கானமாம் துவாரமாகிற் கடிதுடன் வருவாரென்று
தேனமர் குழலினாளே செப்புநீ யுண்மைதானே.

(இ-ள்.) ஊருக்குப் போனவர் இன்று வருவாரோவென்று கேட்கில், கெற்பமானால்-போனவிடத்தி லிருக்கிறாரென்றும், வாமியமானால்-சிலநாளிருந்துவிட்டு வருவாரென்றும், துவாரமாகில்-இன்று வருவாரென்றும் மொழிவாயாக—எ-று. (30)

வால்மீகர் அருளிச்செய்த

ஆரூட சாஸ்திரம் - முற்றிற்று.

20-4
11-12-6
8 . 6

12